கோகுலம்

GOKULAM

மே '88 விலை ரூ. 3.





மோதிலால் நேரு

தோற்றம் : 6-5-1861. மறைவு: 6-2-1931.



உயிர்களிடத்தில் அன்பு வேணும்.—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.



புகைப்படம்: எம். நடராஜன்

கோகுலம்

1988 மே மாத இதழ்
மலர் 6 : இதழ் : 4
தனிப் பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

"தமிழில் எங்களுக்கான திரைப்படங்கள் வெளிவருவதற்குள், நாங்களெல்லாம் வளர்ந்து பெரியவர்களாகி விடுவோம் போலிருக்கிறது?"

"திரைப்பட உலகில் பெரும்புகழ் பெற்றவர், தமிழக முதல்வராகப் பத்து ஆண்டுகளிருந்தும், எங்களுக்காக ஒரு திரைப்படம் கூடத் தமிழில் வெளிவரவில்லையே!"

— இப்படி ஏக்கத்துடன் நமக்குக் கடிதங்கள் எழுதுகிறார்கள், உங்களில் பலர்.

உங்களின் ஏக்கத்தை நீக்குவதற்காகவே சென்ற இதழில், 'எதற்கும் அரசாங்கத்தையே நம்பிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. திரைப்படத் தயாரிப்பாளர்களே இதற்கு உதவலாம். இரண்டு அல்லது இரண்டரை மணி நேரம் ஒரு படத்தை எடுப்பதற்குப் பதில், முதல் அரை மணி நேரம் சிறுவருக்கான ஒரு படத்தைத் தயாரித்துத் திரையிடலாம். மீதமுள்ள நேரத்தில், வழக்கம் போலப் பொதுவான ஒரு படத்தைத் திரையிடலாம். இந்த மாதிரி செய்வதால், திரைப்படம் பார்க்கப் பெற்றோருடன் செல்லும் குழந்தைகள், ஆரம்பத்தில் தங்களுக்கு வேண்டிய படங்களைக் கண்டு மகிழலாம்' என்று எழுதியிருந்தோம்.

இதுகுறித்து இரு பிரபல திரைப்படத் தயாரிப்பாளர்களிடம் பேசினோம். "மிக நல்ல யோசனை. உங்கள் யோசனைப்படி செய்தால் நன்றாகத்தான் இருக்கும்" என்றார்கள்.

பிரபல தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் பலரிடமும் இது பற்றிப் பேசி, தொடர்ந்து நாங்களும் எங்களாலான முயற்சிகளைச் செய்வோம் என உறுதி கூறுகிறோம்.

மார்ச் இதழில் அறிவித்த 'விமர்சனப் போட்டி'க்கு இதுவரை 647 கட்டுரைகள் வந்திருக்கின்றன. அடுத்த இதழில் முடிவு தெரியும்.

அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்


சே. சாந்தா



க. கல். சுந்தரம்

பிருந்தாவனக் கதாசிரியர்



எஸ். கோகுலகிருஷ்ணன்

பிருந்தாவனக் கவிஞர்கள்


எம். பெரியசாமி


சே. கணேசன்


எம். செந்தில்வேலன்


வி. வீரராகவன்

அட்டை வண்ணப்படம்:
ஏ. ஜி. பாஸ்கர்

மின்மினிக் கதைகள்



வானம் உயரப் போனது

ஒரு காலத்தில் வானம் இவ்வளவு உயரத்தில் இல்லை. கையை உயரத் தூக்கினால் போதும், அதைத் தொட்டு விடலாம்!

சில சமயம் வானம் மிகவும் கீழே இறங்கிக் குழந்தைகளோடு விளையாடும்! சிரிப்பு மூட்டும்! ஏராளமாகக் குறும்புகள் செய்யும்.

ஒரு நாள் ஔவைப் பாட்டி தலையில் தயிர்ப் பானையோடு தெருவில் வந்து கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்த வானம், 'இவள் கிழவிதானே? இவளிடம் சிறிது குறும்பு செய்தால் என்ன?' என்று நினைத்தது.

தன் இயல்பான உயரத்தை விட்டுக் கீழ் இறங்கிய வானம் ஔவைப் பாட்டியின் தலையிலிருந்த தயிர்ப் பானையைத் தட்டி விட்டது!

பானை தரையில் விழுந்து உடைந்தது. அதிலிருந்த தயிரெல்லாம் தெருவில் சிந்தியது.

இதைக் கண்ட ஔவையாருக்குக் கடுங்கோபம் வந்தது. கீழே கிடந்த ஒரு கழியை எடுத்து வானத்தை அடிக்கத் தொடங்கினாள்.

அதற்குள் வானம், அவள் கைக்கு எட்ட முடியாத உயரத்திற்குச் சென்று விட்டது.

ஔவையாரோ உயரத் தாவித் தாவி அதை அடிக்க முயன்றார். ஆனால் ஓர் அடி கூட வானத்தின் மேல் படவில்லை.

"எனக்கு எட்டாத உயரத்திலா நிற்கிறாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்? இனி நீ எட்டு வண்டி நூல் போட்டாலும் எட்டாத உயரத்திற்குப் போ. பத்து வண்டி நூல் போட்டாலும் பத்தாத உயரத்திற்குப் போ;" என்று சாபம் தந்தாள்.

உடனே வானம் கிடுகிடுவென்று யாருக்கும் எட்டாத உயரத்திற்குப் போய் விட்டது.

அதன்பின் ஒருநாளும் அதனால் கீழே வர முடியவில்லை.

இதுதான் வானம் உயரப் போன கதை.



தேங்காய்த் தலை

ஒரு நாட்டின் சிறையிலிருந்து தப்பிய மூன்று கைதிகள் எப்படியோ படகில் ஏறிக் கடலின் மறுகரையிலுள்ள நாட்டிற்கு வந்தனர்.

ஆனால் அந்நாட்டு வீரர்கள் மூவரையும் சிறை செய்து தங்கள் அரசர் முன் நிறுத்தினார்கள்.

அவர்கள் அரசனிடம், "நாங்கள் மூவரும் சிறையிலிருந்து தப்பி வந்த கைதிகள், எங்களில் ஒருவன் மந்திரவாதி, இன்னொருவன் திருடன், மற்றவன் குறும்புக்காரன். நாங்கள் மூவரும் இனி நல்லவர்களாக நடந்து கொள்கிறோம். எங்களை மன்னித்து இந்நாட்டில் தங்க அனுமதியுங்கள்" என்று வேண்டினார்கள்.

இதைக் கேட்ட அரசன் "திருடனும் மந்திரவாதியும் திருந்தி நல்லவர்களாக வாழ முடியும். ஆனால் குறும்புக்காரனால் திருந்தவே முடியாது. எங்கிருந்தாலும் குறும்பு செய்து துன்பம் விளைவிப்பான். ஆகவே, உங்கள் இருவரையும் மன்னிக்கிறேன். இங்கு நல்லவர்களாக நடந்து கொள்ளுங்கள்" என்றான்.

பிறகு வீரர்களைப் பார்த்து, "இந்தக் குறும்புக்காரனைக் கடற்கரை ஓரம் அழைத்துச் சென்று தலையை வெட்டிக் கொன்று விடுங்கள்" என்றான் அரசன்.

வீரர்களும் குறும்புக்காரனைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றனர். ஆனால் அவனோ எதற்கும் கவலைப்படாதவன் போலச் சிரித்துக் கொண்டிருந்தான்.

வீரர்கள் அவன் தலையை வெட்டி வீழ்த்தினார்கள். தரையில் விழுந்த அவன் தலை முன்னைவிட சத்தமாக அவர்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே இருந்தது.

அவர்களுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. வீரன் ஒருவன் அரசனிடம் சென்று நடந்ததை எல்லாம் சொன்னான்.

இதைக் கேட்ட அரசன் "நான் நினைத்தது நடந்துவிட்டது. அந்தக் குறும்புக்காரன் உயிருடன் இருந்திருந்தால் இன்னும் என்னென்ன தொல்லைகள் நிகழ்ந்திருக்குமோ! அந்தத் தலையைக் கடற்கரையில் ஆழப் புதைத்து விடுங்கள்" என்றான்.


அரசன் சொன்னபடியே வீரர்கள் செய்தனர்.

அந்தத் தலையைப் புதைத்த இடத்தில் ஒரு விந்தையான மரம் வளரத் தொடங்கியது. இப்படிப்பட்ட மரத்தை அவர்கள் யாரும் பார்த்ததில்லை.

சில ஆண்டுகளுக்குள் அந்த மரத்தில் குறும்புக்காரனின் தலையைப் போல் ஏராளமான காய்கள் காய்க்கத் தொடங்கின.

காற்றில் மரம் அசையும் போதெல்லாம் ''இப்பொழுது உங்களால் என்ன செய்ய முடியும்?'' என்று அந்தக் காய்கள் மட்டைகளுடன் சேர்ந்து குறும்புக்காரன் குரலில் உரக்கச் சிரிக்கத் தொடங்கின.

அந்தக் காய்களைத்தான் நாம் இப்பொழுது தேங்காய் என்று சொல்கிறோம்.



பல மொழிகள் உருவான கதை

உலகம் உண்டான பழங்காலத்தில் மக்கள் அனைவரும் ஒரே மொழியைப் பேசி ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர்.,

ஒரு நாள் அவர்களில் ஒருவன் எல்லோரையும் பார்த்து, ''கடவுள் வான் உலகத்தில் உள்ளார். நாம் எல்லோரும் அவ்வுலகம் சென்று அவரைப் பார்க்க வேண்டும்'' என்றான்.

அதற்கு இன்னொருவன், ''நம்மால் எப்படி அங்கே செல்ல முடியும்? பறக்கும் ஆற்றல் நமக்கில்லையே?'' என்று கேட்டான்.

''பறக்கும் ஆற்றல் இல்லையென்றால் என்ன! நம்மிடம் ஒற்றுமை உள்ளது. நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து வானுலகத்தைத் தொடுமளவு ஒரு கோபுரம் எழுப்புவோம்: பிறகு அனைவரும் அதில் ஏறி வானுலகம் அடைவோம்'' என்றான்.

எல்லோரும் அவன் கூறியதை ஒப்புக் கொண்டனர்.

ஒரு நல்ல நாளில் கோபுரம் கட்டும் பணி தொடங்கியது. நாளுக்கு நாள் கோபுரம் உயர்ந்து கொண்டே சென்றது; வானையே எட்டிப் பிடித்து விடும் போலிருந்தது.

இதைக் கண்ட கடவுள், ''இவர்கள் இங்கே வந்து விட்டால் அதன் பிறகு நம்மை மதிக்க மாட்டார்கள். எப்படியேனும் இவர்கள் செயலைத் தடுத்து நிறுத்த வேண்டுமே! இதற்கு என்ன செய்யலாம்?'' என்று சிந்தித்தார்.

'மக்களில் ஒருவர் பேசுவது இன்னொருவருக்குப் புரியக் கூடாது' என்று கட்டளை இட்டார்.

உடனே, கோபுரம், கட்டிக் கொண்டிருந்த மக்களில், ஒருவர் பேசியது இன்னொருவருக்குப் புரியாமல் போனது. அதனால், கோபுரம் கட்டும் பணியும் அப்படியே பாதியில் நின்று விட்டது.

அன்றிலிருந்து மக்கள் பல குழுக்களாகப் பிரிந்து வெவ்வேறு மொழிகளைப் பேசத் தொடங்கினர்.

இப்படித்தான் உலகில் பல மொழிகள் உண்டாயினவாம்.

— பேராசிரியர் எ. சோதி தொகுத்த 'கதை கதையாம் காரணமாம்' என்ற புத்தகத்திலிருந்து — வெளியிட்டோர்: நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி — 1.



புதிய புத்தகங்கள்

நாணுவின் கதைகள்

'கிராமத் தலைவரைப் பற்றி அவதூருகச் சுவரில் எழுதியது இச்சிறுவன்தான்' என்று ஒரு சிறுவன் மீது குற்றம் சாட்டி, அவனுக்குத் தண்டனையாகப் பத்துக் கசை அடிகள் கொடுப்பது என்று ஊர்ப் பஞ்சாயத்துக் கூடித் தீர்ப்பு வழங்கிவிட்டது. ஆனல், அச் சிறுவனே நிரபராதி. அவனைத் தமது புத்தி சாதுரியத்தால் குற்றமற்றவன் என்பதை நிரூபித்து அவனுக்கு விடுதலை வாங்கித் தருகிருர் நாணு என்னும் அமைச்சர்.,

நாணு என்ற பெயரைக் கேட்டாலே ஆங்கிலேயர்களுக்கு நடுக்கம் ஏற்படும். அவருடைய தேசப் பற்றும், தெய்வ பக்தியும், மதி நுட்பமும், பிறருக்கு உதவும் பெருங்குணமும் பலரது பாராட்டைப் பெற்றன. அவர் வழங்கிய தீர்ப்புகள் உலகப் புகழ்பெற்றன. அவருடைய பெருமையை விளக்கும் பத்துக் கதைகளை இத்தொகுப்பில், சுவையாகக் கூறுகிருர் பொன்வண்ணன். ஒவ்வொரு கதைக்கும் ஒரு படம் உள்ளது. பக்கங்கள்: 56, விலை: ரூ. 5.50.

திருநாவுக்கரசர்

அறுபத்துமூன்று நாயன்மார்களிலே ஒருவரான திருநாவுக்கரசரை நேரில் பார்த்து அறியாதவர் அப்பூதியடிகள். ஆயினும், அவரிடமிருந்த பக்தியின் காரணமாக, 'திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல்' நடத்துகிருர். புதல்வர்களில் ஒருவருக்குத் 'திருநாவுக்கரசு' என்று பெயர் சூட்டுகிருர்.,

இதையறிந்த திருநாவுக்கரசர் அப்பூதியடிகளைத் தேடி அவர் வீடு செல்கிருர். அவரை நேரில் கண்ட அப்பூதியடிகளாரும் அவர் மனைவி மக்களும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அன்று தங்கள் வீட்டில் விருந்துண்ண வேண்டுமென்று அவர்கள் திருநாவுக்கரசரைக் கேட்டுக் கொள்கிருர்கள். விருந்து படைக்க, திருநாவுக்கரசு என்னும் மகன் வாழை இலை பறிக்கச் சென்ற இடத்தில், பாம்பு கடித்து இறந்து விடுகிருன். 'திருநாவுக்கரசர் விஷயம் தெரிந்தால், விருந்து சாப்பிடாமல் போய் விடுவாரே' என்ற பயத்தில், மகன் இறந்ததை மறைக்கப் பார்க்கிருர்கள். ஆயினும் விஷயம் தெரிந்து விடுகிறது திருநாவுக்கரசருக்கு. இறந்த மகனைப் பத்துப் பாடல்கள் பாடி உயிர் பிழைக்கச் செய்கிருர் திருநாவுக்கரசர். இப்படிப் பல நிகழ்ச்சிகளை இந்தப் புத்தகத்தில் தருகிருர் சந்தான லக்ஷ்மி, பக்கங்கள்: 66, விலை ரூ. 6.90.

மேற்கண்ட இரு புத்தகங்களையும் வெளியிட்டோர்: பழனியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் ரோடு, சென்னை — 14.


இராமாயணம் — வினு — விடை

தசரதன் அசுவமேதயாகம் செய்தது ஏன்? இராமனும் சீதையும் அயோத்தியில் எத்தனை ஆண்டுகள் இனிமையாக இல்லறம் நடத்தினர்? 'பஞ்சவடி' எப்படிப்பட்டது? 'சிறிய திருவடி' என்று அனுமனுக்கு ஏன் பெயர் வந்தது? அனுமனிடம் சீதை கொடுத்த அடையாளம் எது?

— இப்படி 300 கேள்வி — பதில்களில் இராமாயணம் முழுவதையும் நமக்குத் தந்திருக்கிருர் எஸ். ரகுவீரன். வரிசையாக ஒவ்வொரு காண்டமாக அமைத்துத் தந்திருப்பது குறிப்பிடத் தக்கது. கடைசியில், மாதிரிக் கேள்விகளும் தரப்பட்டுள்ளன.

ஒருமுறை இந்நூலைப் படித்தால், இராமாயணம் முழுவதையும் ஓரளவு நன்கு தெரிந்து கொண்டோம் என்ற மனநிறைவு ஏற்படும்.

வெளியிட்டோர்: கடுக்கலூரர் திருமாலடியார் அருள்நெறி மன்றம், ஜி. எஸ். டி. சாலை, மதுராந்தகம் — 603 306. பக்கங்கள்: 80, விலை ரூ. 5/—.





என் குழந்தைப் பருவம்

டாக்டர். கோ. வேங்கடசாமி



தற்போது நாட்டின் பல பகுதிகளிலும் கண் முகாம்களை இலவசமாக நடத்துகிறார்கள். கண்களைப் பரிசோதனை செய்வது, அறுவைச் சிகிச்சை செய்வது போன்றவற்றின் மூலமாக இது லட்சக்கணக்கானவர்களுக்குக் கண் ஒளி வழங்கும் மாபெரும் திட்டமாகும். இத்திட்டத்தின் முன்னோடியாக விளங்குபவர்தான் டாக்டர் கோ. வேங்கடசாமி அவர்கள்.

சின்னஞ்சிறு வயதிலிருந்து பிறருக்கு உதவ வேண்டும் என்ற பெருங்குணம் கொண்டவர் இவர். மதுரை மருத்துவக் கல்லூரியில் கண் மருத்துவப் பேராசிரியராகவும், பிறகு, துணை முதல்வராகவும் பணிபுரிந்து, 1976—இல் ஓய்வு பெற்ற பின், 'கோவல் டிரஸ்ட்' என்ற பெயரில் ஓர் அறப் பணி நிறுவனத்தை அமைத்து, அதா சார்பில் மதுரையில் அரவிந்த் கண் மருத்துவமனையைத் தொடங்கினார்.' இன்று மதுரையில் மிகப் பெரும் புகழுடன் விளங்குகின்றது அரவிந்த் கண் மருத்துவமனை. தேனியிலும், திருநெல்வேலியிலும் இம்மருத்துவமனைக்குக் கிளைகள் உண்டு. கடந்த 10 ஆண்டுகளில் இம்மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற வெளி நோயாளிகள்: 15,90,361; அறுவைச் சிகிச்சை பெற்றோர்: 1,56,213, இலவச கண் சிகிச்சை முகாம்கள்: 2934. இந்த நோயாளிகளில் மூன்றில் இரண்டு பங்கு பேர் இலவசச் சிகிச்சைப் பெற்றவர்கள். பகவான் அரவிந்தரிடம் இவர் கொண்டுள்ள பக்தியினால்தான் அப்பெயரில் தொடங்கினார்.

மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் ஊட்டச் சத்து மையம் அமைத்தார்; மதுரையில் பார்வையற்றவர்களுக்குப் பள்ளி நிறுவினார். அரவிந்த் குழந்தைகள் மருத்துவமனை ஒன்றையும் இவர் நடத்தி வருகிறார்.

1973 — இல் இவரது சேவையைப் பாராட்டி இந்திய அரசு இவருக்குப் 'பத்மஸ்ரீ' விருது வழங்கியது. 1985—இல் சிகாகோவிலுள்ள இல்லினாய்ஸ் பல்கலைக் கழகம், தனிப்பட்டவர்களுக்கு வழங்கும் மிகப் பெரிய விருதான 'Honorary Doctor of Science Degree' யை அளித்துச் சிறப்பித்தது. மேலும், IAPB Award, Dr. M. P. Mehre Memorial National Award, Helen Keller Award போன்ற பல விருதுகளையும் இவர் பெற்றுள்ளார்.

நெல்லை மாவட்டத்தில் எட்டையாபுரம் அருகில் உள்ள வடமலைபுரம் என்ற கிராமத்தில் நடுத்தர விவசாயக் குடும்பத்தில் 1918 அக்டோபர் 12—ல் பிறந்தேன். என் தந்தை ஆரம்பப் பள்ளி வரை படித்திருந்



தாலும், கேள்வி ஞானம் நிறையப் பெற்றவர். திருக்குறளில் ஈடுபாடு அதிகம். திருக்குறள் புத்தகத்தை சட்டைப்பையில்எப்பொழுதும்வைத்திருப்பார். கம்பராமாயணம் அடிக்கடி கேட்டு பல பாடல்களை ஞாபகத்திலிருந்து சொல்வார். விவசாயியாக இருந்தும், பல தமிழ் நூல்களை வீட்டில் வாங்கி வைத்திருப்பார்.

இத்தகையஎன் தந்தையின் ஈடுபாட்டால், அந்தக் காலத்தில் வெளிவந்த சுவாமி விவேகானந்தரின் அமெரிக்கச்சொற்பொழிவுகளைச்சிறுவயதிலேயே படிக்க முடிந்தது. படித்த அறிஞர்கள், துறவிகள், சமுதாயப் பெரியவர்கள் முதலியோரை அடிக்கடி சந்தித்துப் பல விஷயங்களை அவர் தெரிந்து வைத்திருந்தார். அவர்களிடம் மனம் திறந்து விவாதிப்பார்.



உண்மை பேசுவது, சொன்ன பேச்சுக்குக் கட்டுப்படுவது, கறாராக இருப்பது, நேர்மையாக நடப்பது — இவையே அவருடைய குணங்கள். அவர் பல புத்தகங்களை வீட்டில் சேகரித்து வைத்திருந்ததால் என்னால் அவற்றைப் படிப்பதற்கு முடிந்தது.

என் தந்தை அன்றாடம் கணக்கு எழுதிவைப்பார். குழந்தைகளை, படிக்கும் செலவானாலும் வீட்டுச் செலவானாலும் எல்லாச் செலவுகளையும் கண்டிப்பாக எழுதச் சொல்வார். அடிக்கடி அவற்றைப் பார்ப்பார்.

தந்தையைக் கண்டால் சிறு வயதிலேயே எங்களுக்குப் பயம் உண்டு. கண்டித்துக் குழந்தைகளை வளர்க்க வேண்டுமென்பது அவரது கொள்கை. எங்களுக்குப் பொறுப்புகள் அதிகம் கொடுப்பார். அவருக்கு வயதான பின்பு, என் தங்கை, தம்பிகளை அன்புடன் அரவணைத்துப் படிக்கச் செய்வார். காந்தியவாதி. எப்போதும் கதரணிவார். எந்த விஷயத்தையும் தெளிவாக ஆராய்ந்து செய்வதில் வல்லவர். நல்ல விஞ்ஞான முறையில் விவசாயம் செய்தார். நல்ல வீடு கட்டினார். சாதாரண விவசாயியாக இருந்தாலும், பல துறைகளில் முன்னேறிய கருத்துக்களும், திறமையும் கொண்டவர். குழந்தைகள் கல்லூரிகளில்படித்துப்பட்டம்பெற்ற பின்னர் கூடப் பல துறைகளில் அவருக்கு இருந்த ஆழமான அறிவு எங்களுக்கு மிகவும் உதவியது. கட்டடம் கட்டுவதில் பல நுட்பமான கருத்துக்களை அவர் கையாள்வார். கிராமத்தில் அவரிடம் எல்லோருக்கும் மரியாதையும் பயமும் உண்டு.

அந்தக் காலத்தில் எங்கள் ஊரில் பள்ளிக்கூடம் கிடையாது. ஊருக்குத் தெற்கில் வைப்பாற்றைக் கடந்து சென்று நம்பிபுரத்தில் பள்ளியில் சேர்க்கப்பட்டேன். சிறுவர்களும் சிறுமிகளும் மத்தியானச் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு, ஒரு மைல் தூரத்திற்கு மேல் போய்ப் படித்து விட்டு வருவோம். நம்பிபுரத்தில் அக்கிரகாரம் இருந்தது. பெருமாள் கோவில், சிவன் கோவில், அம்மன் கோவில் என்ற கோயில்கள் உண்டு. அக்கிராமத்தில் பலர் படித்து அந்தக்

காலத்தில் நகரங்களில் உத்தியோகம் பார்த்து வந்தார்கள். அப்பொழுதே 'சாப்வாடி' என்பவர் பம்பாயில் பத்திரிகை நிருபராக இருந்து, லண்டனில் நடந்த வட்டமேஜை மாநாட்டுக்குச் சென்று திரும்பியவர். அவ்வூரைச் சேர்ந்த பலர் வக்கீல்களாகக் கோவில் பட்டியில் இருந்தார்கள். விடுமுறை காலங்களில் எல்லோரும் நம்பிபுரம் வருவார்கள். திருவிழாக்கள் சிறப்பாக நடக்கும்.

இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் எங்களூரிலேயே தாலுகா போர்டு ஆரம்பப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. 5 வது வரை அக்கிராமத்திலேயே படித்து வந்தேன். 1928—ல் எட்டையாபுரத்தில் ராஜா உயர்நிலைப் பள்ளியில் ஒரு வருடம் படித்தேன். உறவினர் ஒருவர் படிப்பதற்காக எட்டையாபுரத்தில் ஒரு வீடு எடுத்திருந்தார். அவருடைய பாட்டி சமையல் செய்து கவனித்துக் கொண்டார். அவர்களுடன் ஒரு வருடம் தங்கிப் படித்து வந்தேன். அப்போது எனக்கு அடிக்கடி சிரங்கு, காய்ச்சல் வந்துவிடும். அதனால் அவ்வருடம் என்னால் சரியாகப் படிக்க முடியவில்லை. என் தாயாரின் தம்பி எஸ். எஸ். எல். சி. வரை படித்து விட்டு, கோவில்பட்டி தாலுகா போர்டில் குமாஸ்தாவாகப் பணிபுரிந்தார். 1929 முதல் 1934 வரை 6 வருடங்கள் அவர் வீட்டிலிருந்து கோவில்பட்டி உயர்நிலைப் பள்ளியில் படித்து வந்தேன்.

அக்காலத்தில் விவசாயக் குடும்பங்களிலிருந்து படித்து, நகரங்களில் ஆபீஸ்களில் வேலை செய்தவர்கள் மிகக் குறைவு. எங்கள் பகுதிக் கிராமத்களிலிருந்து வேலை செய்தவர்களில் என் தாய்மாமா ஒருவர். என் மீது அவருக்கு அன்பு அதிகம். எங்கள் சமூகத்தில் மாணவர்கள் படித்து முன்னுக்கு வரவேண்டுமென்ற ஆவலால் 'கம்ம மாணவர் சங்கம்' என்ற ஒரு சங்கத்தை ஆரம்பித்து நடத்தி வந்தார். பலரிடம் சென்று ஒன்று முதல் 5 ரூபாய் வரை நன்கொடை வாங்கி, அதிலிருந்து படிக்கும் மாணவர்களுக்கு உதவி அளித்து வந்தார்.



பலர் அவ்வாறு உதவி பெற்றுப் படித்து முன்னுக்கு வந்தவர்கள். விவசாயக் குடும்பத்தினரால் அக்காலத்தில் வருஷத்திற்கு நூறு ரூபாய் செலவு செய்து பிள்ளைகளைப் படிக்க வைப்பது இயலாது. பலர் மதம் மாறிச் சலுகை பெற்றுப் படித்தனர். இந்த வயதில் ஊக்கம் அளித்துப் படிக்க வைத்து உருவாக்கியவர் என் தாய் மாமாதான்.

அந்தக் காலத்திலும் அவருடன் பணிபுரிந்தவர்களில் சிலர் லஞ்சம் வாங்குவதுண்டு. ஒரு ரூபாய் அல்லது அரை ரூபாய் லஞ்சம் பெறுவார்கள். என் மாமா லஞ்சம் தர வருபவர்களைக் கண்டித்து லஞ்சம் கொடுப்பது பெருந்தவறு என்று சொல்லி அனுப்புவார். உண்மை பேசுவது, குறித்த காலத்தில் செய்ய வேண்டிய வேலை





களைச் செய்வது, ஒழுங்காகப் படிப்பது, முதலிய நல்ல பழக்க வழக்கங்களை அவர் உண்டாக்கினார்.

அந்தக்காலம் 'காந்தி காலம்' எனச் சொல்லலாம். காந்தியின் தேசியப் போராட்டம் நாடு முழுதும் பரவியது. கிராமங்களில் எல்லாம் போராட்டம் நடந்தது. அடிக்கடி கூட்டங்கள் நடக்கும். தலைவர்கள் அந்நிய ஆட்சியின் கொடுமைகளைப் பற்றி எடுத்துரைப்பார்கள்.


அதேசமயம் காந்திஜி, கதர், தீண்டாமை விலக்கு, கள்ளுக்கடை மறியல் போன்ற பல இயக்கங்களையும் ஆரம்பித்தார். பல ஊர்களில் கதர்க் கடைகள் திறக்கப்பட்டன. அந்நிய நாட்டுத் துணி பகிஷ்கரிப்பு நடந்தது. சுதேசிய இயக்கம் மக்களிடையே நன்கு பரவியது. பத்திரிகைகள் தேசிய விடுதலைக்காகப் பாடுபட்டு, மக்களிடையே ஒத்துழையாமை இயக்கத்தை உருவாக்கின. பாரதியாரின் பாடல்கள் பிரசித்தமாயின. நாடகங்களும் தேசிய உணர்ச்சியைத்தூண்டின. மாணவர்களிடையே காந்தியக் கொள்கைகள், பிரம்மச்சரியம், அகிம்சை, அஞ்சாமை பரவின. தீண்டாதவர்களுடன் சமபந்தி சாப்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

கள்ளுக்கடை மறியல் நடக்கும். மறியல் செய்தவர்களுக்கு மாணவர்கள் பானகங்கள் அளித்து உதவுவார்கள். பலர் படிப்பை விட்டு விட்டுக் காங்கிரசில் சேர்ந்து சத்தியாக்கிரகம் செய்து ஜெயிலுக்குச் சென்றார்கள். எனக்குத் தெரிந்த பலர் அவ்வாறு ஜெயிலுக்குச் சென்று, தேச விடுதலைக்காகப் பாடுபட்டனர்.

பத்திரிகைகளில் லாலா லஜபதி ராய் தடியடியால் தாக்கப்பட்டார் என்ற செய்தியை நான் படித்ததும் என் மனம் கொந்தளிக்கும். பகவத் சிங், குருதேவ் தூக்கிலிடப்பட்டார்கள் என்ற செய்தி அறிந்து துக்க ஊர்வலம் போனோம்.

அப்பொழுது காந்திஜி தமிழ்நாட்டில் ஒரு தடவை சுற்றுப் பிரயாணம் வந்தார். அச்சமயம் நான் கோவில்பட்டியில் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். காந்தி வருவதற்காகப் பெரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஊர் மக்கள் ஆயிரக்கணக்கில் வந்திருந்தனர். பக்கத்து ஊர்களிலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்திருந்தனர். திறந்த காரில் காந்தி காலை சுமார் 10 மணிக்கு வந்தார். 5 அல்லது 7 நிமிடங்கள் அங்கு இருந்திருப்பார். அப்பொழுது ஒலிபெருக்கி கிடையாது. என்ன பேசினார் என்று என்னால் கேட்க முடியவில்லை. எங்களுக்கெல்லாம் ஒரே ஆனந்தம். காந்திஜியைப் பார்த்ததுவே போதும்; 'காந்திஜிக்கு—ஜே' என்று எல்லோரும் கோஷம் போட்டோம். சிறிது நேரத்தில் நெல்லை நோக்கிச் சென்று விட்டார்., பெரும்பாலும் காந்திஜியின் கருத்துக்கள் இளைஞர்களிடம் வேரூன்றிய காலம் அது.

அந்தக் காலத்தில் சினிமா பிரபலமாகவில்லை. மதுரை போன்ற பெரிய ஊர்களில் ஒரு திரை அரங்கு இருந்தது. பேசாத படங்கள் காட்டப்பட்டன. இப்பொழுது திரைப்படங்கள் இளைஞர்களை ஆட்டுவிக்கும் அளவிற்கு அந்தக் காலத்தில் உருவாகவில்லை. சில நாடக சபைகள் இருந்தன. கிராமங்களிலும் அபூர்வமாக நாடகங்கள் நடத்தப்படும். கோவில் திருவிழாக்களே மக்களுக்குப் பொழுதுபோக்காகவும், சமய அறிவு பெறவும், பக்தி மார்க்கமாகவும் அமைந்தன. மாணவர்களாகிய நாங்கள் அருகில் உள்ள ஊர்களுக்குச்



சுற்றுலா செல்வோம். நெடுந்தூரம் போவதோ, பஸ்களில் சுற்றுலாக்கள் நடத்துவதோ இல்லை.

பள்ளிகளிலும் மாணவர்களிடம் கடமையும் கட்டுப்பாடும் இருந்தன. பரீட்சைகளில் காப்பி அடிப்பதோ, துண்டுப் பேப்பர் கொண்டு வந்து எழுதுவதோ கிடையாது. பணம் கொடுத்து மார்க்குகள் வாங்குவதும் இல்லை. பள்ளிகள் குறைவு. ஒருமாவட்டத்தில் ஒன்றிரண்டு கல்லூரிகளே இருந்தன. அப்பொழுதும் வேலை வாய்ப்பு மிகக் குறைவே. பி. ஏ. பட்டதாரிகள் மாதம் ரூ. 25/— சம்பளத்திற்கு வேலை செய்தார்கள். கிராமத்தில் பணிபுரிந்த பள்ளி ஆசிரியர்கள் பெற்ற மாத ஊதியம் ரூ. 19/—. இதில் செலவு போக ரூ. 5 முதல் 10 வரை மிச்சப்படுத்துவர். ரேடியோவின் ஆரம்ப காலம். அபூர்வமாக நகரங்களில் சிலர் வீடுகளில் ரேடியோ இருக்கும். சிறுவர்களுக்குத் தனிப் பத்திரிகைகளோ, புத்தகங்களோ அபூர்வமாகவே இருக்கும்.


இப்பொழுது விஞ்ஞான வழிகளில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குழந்தைகள், சிறுவர்கள் கல்விக்காக ரேடியோவும் தொலைக்காட்சிகளும் உதவுகின்றன. கல்விக்காக வீடியோ டேப்புகள் கூடக் கிடைக்கின்றன. பல பத்திரிகைகள் மாணவர்களுக்கு உதவுவதற்காக வெளிவருகின்றன. உலகில் எங்கே கிரிக்கெட் போட்டி நடந்தாலும், அதை நாம் தொலைக்காட்சியில் பார்க்க முடிகிறது. மாணவர்களிடையே அறிவும், விளையாட்டுத் திறனும் பன்மடங்கு பெருகி வருகின்றது. போதை மருந்துகளை மாணவர்களிடையே கொடுத்துப் பணம் சம்பாதிக்கும் கொடியவர்கள் உலகத்தில் பல பாகங்களிலும் இருக்கின்றார்கள். அதனால், பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அக்காலத்தில் இது போன்ற பழக்கங்கள் இளைஞர்களிடையே இல்லை. நாட்டின் வருங்காலம் இப்பொழுதுள்ள இளைஞர்களிடம் இருக்கிறது. இவர்களை நன்றாக அன்புடன் பேணி, பண்புள்ளவர்களாக ஆக்குவது நம் எல்லோருடைய கடமை ஆகும்.



அடுத்த இதழில்

என் குழந்தைப் பருவம்

கவிஞர் சுரதா


1.
2
3
4
5
6









சின்னஞ் சிறுவயதில் இப்படித்தான் இருந்தார்கள் அந்தப் பெரிய மனிதர்கள். யார், யார் என்று கண்டு பிடிக்க முடிகிறதா?

விடை 94ம் பக்கம்

கேளுங்கள்; சொல்கிறோம்



* எஸ்கிமோ என்றதுமே பனிக்கட்டிகளைச் சதுரம் சதுரமாக உடைத்து, அவற்றைக் கொண்டு வீடு கட்டி வசிப்பவர்கள் என்றுதான் புத்தகங்களில் படிக்கிறோம். இப்போதுகூட அவர்கள் அப்படித்தான் வாழ்கிறார்களா?

— கே. ராஜதுரை, சென்னை — 33.

வட அமெரிக்காவிலுள்ள அலாஸ்காவிலும் கிரீன்லாந்து நாட்டிலும் உள்ள எஸ்கிமோக்களில் அநேகர் இப்போது கற்களாலும், மரங்களாலும் வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். பனிக்கட்டி வீட்டில் வசிப்பவர்கள்கூட, கோடை காலத்தில் பனிக்கட்டிகள் உருகி விடுவதால், அக்காலத்தில் பிராணிகளின் தோலினால் குடிசைகள் கட்டி, அவற்றில் வாழ்கிறார்கள்.

* குழந்தைகள் லட்சியமாகக் கொள்ள வேண்டிய பொன்மொழி ஒன்றைக் கூறுங்களேன்.

— ஆர். கே. அருள்செல்வன், விக்கிரபாண்டியம்.

'உயிர்களிடத்தில் அன்பு வேணும்'

* 'இரத்தினச் சுருக்கம்' என்கிறார்களே, அப்படியென்றால்.....?

— எம். விக்னேஷ், மதுரை.

இரத்தினம் அளவில் சிறியது. ஆனால், ஒளி மிகுந்தது. ஒருவரின் பேச்சு சுருக்கமாக இருந்து அதே சமயம் தெளிவாகவும் இருந்தால், 'இரத்தினச் சுருக்கமாகப் பேசினார்' என்கிறோம்.

'இரத்தினச் சுருக்கம்' என்ற பெயரில் இரண்டு நூல்களும் உள்ளன. ஒன்று பெண்களின் அவயவங்களுக்கு உவமை கூறுவது. மற்றொன்று, மருத்துவ சம்பந்தமான நூல்.

* கீரிப் பிள்ளையைச் சிலர் வீடுகளில் வளர்க்கிறார்களே, எதற்காக?

— ஆர். வேதநாராயணன், ஆம்பூர்.

'பாம்புக்குப் பகை கீரி' என்று தெரியுமல்லவா? சுற்றிலும் செடி கொடிகள் அடர்த்தியாக உள்ள வீடுகளுக்குள் பாம்புகள் வரலாம். அவை வராமல் தடுப்பதற்கும், வந்தால் பிடித்துக் கொல்லவும் சிலர் கீரியை வளர்க்கிறார்கள். பண்ணைகளிலும் கீரிகளை வளர்ப்பதுண்டு. பயிர்களுக்குச் சேதம் உண்டாக்கும் பூச்சிகளையும் எலிகளையும் அழிக்கக் கூடிய சக்தி கீரிகளுக்கு இருப்பதால், பண்ணைகளில் வளர்க்கிறார்கள்.

* குதிரையின் தோலில் செருப்புத் தைக்க முடியுமா?

— ப. நமசிவாயம், பேராவூரணி.

முடியாது. ஆனால் பந்து, கையுறை முதலியவற்றைச் செய்யலாம்.

* திருக்குறளுக்குப் பல உரைகள் வெளிவந்திருக்கின்றன. எளிய உரை எது?

— எஸ். இராமானுஜம், திருச்சி — 5.

டாக்டர் மு. வரதராசனார் எழுதிய 'திருக்குறள் தெளிவுரை' எளிமையானது.

* சில கம்பெனி விளம்பரங்களில் அவர்களது முகவரியில் த. பெ. எண் என்று ஓர் எண் கொடுக்கிறார்களே, அப்படியென்றால் என்ன?

— எம். சின்னசாமி, திருவிடைமருதூர்.

த. பெ. எண் என்பது தபால் பெட்டி எண் என்பதன் சுருக்கம் தான். தபால் நிலையத்தில் புறாக்கூடு போலப் பல பெட்டிகள் வரிசையாக இருக்கும். அந்தப் பெட்டிகள் ஒவ்வொன்றுக்கும் ஓர் எண் கொடுக்கப்பட்டிருக்கும். நிறையத் தபால் வரும் நிறுவனம், அந்தப் பெட்டியில் ஒன்றை ஆண்டுக்கு ரூ. 60/— செலுத்தி வாடகைக்கு எடுத்துக் கொள்ளும்.

அப்பெட்டியின் முன்பக்கம் மூடப்பட்டிருக்

கும். அதைத்திறப்பதற்குச் சாவி ஒன்று. நிறுவனத்தாரிடம் அச்சாவியைக் கொடுத்து விடுவார்கள். ஆனால், தபால் நிலையத்தின் உட்பக்கமாக உள்ள அப்பெட்டிக்குக் கதவு இராது. இந்த எண் குறிப்பிட்டு வரும் கடிதங்களை அந்தப் பெட்டிக்குள் தபால் நிலையத்தின் உள்ளிருந்தபடியே அங்கு பணிபுரிபவர்கள் போட்டு விடுவார்கள். அந்தப் பெட்டியைச் சாவி வைத்திருக்கும் நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் அங்கு போய்த் திறந்து உள்ளேயிருக்கும் கடிதங்களை எடுத்துக் கொண்டு பூட்டி விடுவார்.

இந்த ஏற்பாட்டால் தபால்காரர் கடிதங்களைக் கொண்டு வரும் வரை காத்திருக்க வேண்டியதில்லை.


* **குடகு மொழி என்கிறார்களே, அது எங்கே பேசப்படுகிறது?**

— சி. குருசாமி, வேலூர்.

கர்நாடகத்தில் குடகு என்பது ஒரு பகுதியாக இருக்கிறது.. காவிரி ஆறு இங்கிருந்துதான் தோன்றுகிறது. அங்குள்ள மக்கள் பேசும் மொழிதான் குடகு மொழி. குடகு மொழி, பழைய கன்னட மொழியின் ஒரு வகை என்கிறார்கள். ஆனால், குடகு மொழிக்கு எழுத்துக்கள் இல்லை; கன்னட எழுத்துக்களிலே எழுதுகின்றனர்.

* **ஆமையின் முட்டைகளைச் சிலர் சாப்பிடுவதாகச் சொல்கிறார்களே, உண்மையாக இருக்குமா?**

— பி. கருணாகரன், செங்கற்பட்டு.



உண்மைதான். சாப்பிடுவதோடல்ல; அதன் முட்டையிலிருந்து எண்ணெய் எடுத்து அதில் சமைக்கிறார்கள்! விளக்கு எரிக்கிறார்கள்!

* **வளையாபதியின் ஆசிரியர் யார்? தயவு செய்து தெரியப்படுத்துங்கள்.**

— எஸ். சரவணன், மேலமலையனூர்

வளையாபதியை ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று என்று கூறுகிறார்கள். ஆனால், அதன் கதை என்ன, ஆசிரியர் யார் என்பதெல்லாம் இதுவரை தெரியவில்லை.

* **உடலுக்குத் தேய்த்துக் குளிக்கும் சோப்பு யாரால் எந்த வருஷம் கண்டுபிடிக்கப் பட்டது?**

— சீர்காழி சாமா, சீர்காழி.

யாரால் எந்த வருஷம் என்று குறிப்பிட்டுக் கூற முடியவில்லை. ஆனாலும் 13 — ஆம் நூற்றாண்டுக்கு முன்பே மரச் சாம்பலையும், ஆட்டுக் கொழுப்பையும் கொதிக்க வைத்து முதல் முதலில் சோப்புத் தயாரித்ததாக ரோமானிய எழுத்தாளர் பிளினி கூறியிருக்கிறார். பி. சி. ரே என்பவர், இந்து ரசாயனம் என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அதில், தாவரச் சாம்பல், கடுகு எண்ணெய், சுண்ணாம்பு, கழுதையின் சிறுநீர் முதலியவற்றைக் கொண்டு பண்டைக் காலத்திலே நம் இந்தியாவிலே சோப்புத் தயாரித்ததாகக் கூறுகிறார். அதில் வருஷம் குறிப்பிடவில்லை. 1887 — இல் மீரட்டில் ஓர் ஆங்கிலேயர் சோப்புத் தொழிற்சாலையை ஆரம்பித்தாராம். அதுதான் இந்திய சோப்புத் தொழிலின் தொடக்கம் என்கிறார்கள்.

* **ஒரு நிமிடத்தில் இதயம் எத்தனை முறை அடிக்கிறது?**

— வே. முத்துக்குமார், கல்லிடைக்குறிச்சி.

இதயத் துடிப்பு வயதைப் பொறுத்தது. சிறு குழந்தையின் இதயம் நிமிடத்திற்கு 120 தடவை துடிக்கும். 7 வயதாகும் போது 90 தடவை துடிக்கும். நன்கு வளர்ந்த பிறகு 72 தடவை துடிக்கும்.

* **பிறருக்கு வரும் கடிதத்தை நாம் படிக்கக் கூடாது என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால், நேருஜி இந்திரா காந்திக்கு எழுதிய கடிதத்தை நாம் படிக்கலாமா?**

— ஜெ. முகம்மது பகத், சோழபுரம்.



இந்திரா காந்திக்கு நேருஜி எழுதிய கடிதங்கள்தான் அச்சடிக்கப்பட்டுப் புத்தகமாக வெளிவந்து விட்டதே! அச்சிலே வந்த கடிதத்தை அனைவருமே படிக்கலாம்.

சார் தபால்!

புலிக்குப் பிறந்தது...?

* 'ஏழைகளைக் கண்டால் அவர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டும் என்ற எண்ணம் பிள்ளைப் பருவத்திலிருந்தே வளர வேண்டும்' என்று திரு. சை. வே. சிட்டிபாபு அவர்களின் குழந்தைப் பருவத்தில் அவர் தாயார் கூறிய வார்த்தைகள் என் மனத்தைக் கவர்ந்தன.

— ப. கணேஷ் (14,478), சங்ககிரி மேற்கு.

* தமது இளம் பருவத்தில் தமக்கு நல்ல ஒழுக்கத்தைப் புகட்டிய தாய், தந்தையரையும், சிறந்த கல்வி அறிவைப் புகட்டிய ஆசிரியப் பெருமக்களையும், இனிய நண்பர்களையும் சை. வே., சிட்டிபாபு அவர்கள் நன்றி மறவாமல் நினைவுகூர்ந்த விதம் மிகவும் பாராட்டுக்குரியது.

— டி. மகேஸ்வரன், விரராக்கியம்.

* சிப்—சாப் என்னும் கருவி எங்கு கிடைக்கும் என்று அன்பு கூர்ந்து தெரிவியுங்கள்.

— டி. ஐ. அரவிந்தன் (2580), ஆத்தூர்.

(ALLARTS, 46, Central Street, Bangalore-1 என்ற முகவரிக்கு எழுதினால் Chip-Chap, Educational Electronic Kit பற்றிய முழு விவரங்களையும் அறியலாம். நூற்றுக்கு மேற்பட்ட சோதனைகளைச் செய்ய உதவுகிறது அக்கருவி.

— ஆசிரியர்.)

* புகழொளி படைத்த சாதனைகளைக் கண்டு வியந்தேன். இந்த வயதிலே இவ்வளவு பெரிய சாதனையா? அடேயப்பா! நாட்டுக்கு இவர் போன்ற மாணவர்களால் தான் பெருமை சேர்க்க முடியும்.

— எஸ். கீதா, வேதாரண்யம்.

* 'இலக்கியச் செல்வன்' புகழொளி வளரும் மாணவ, மாணவியருக்கு நிச்சயமாய் ஒரு முன்னுதாரணம்தான். புகழொளிக்கு மனமார்ந்த பாராட்டுக்களும், வாழ்த்துக்களும். தெய்வம் மேலும் கிருபை புரியட்டும்.

— கிருஷ்ணப்ரியா (ஹேமா. எஸ்) அம்மாப்பேட்டை.

* 'கோகுலம்' வாயிலாக நம்மைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த பேரளம் புகழ்மதியின் புதல்வன்தானா புகழொளி! புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

— அ. முகம்மது அபூபக்கர் (20,089), கள்ளக்குறிச்சி.

* பெற்றால் புகழொளி போன்ற மகனைப் பெற வேண்டும் என்று பெற்றோர்களையும், பிறந்தால் புகழொளி மாதிரி பிறக்க வேண்டும் என்று பிள்ளைகளையும் நினைக்க வைத்தது புகழொளி பற்றிய கட்டுரை.

— எஸ். கண்ணன், பி. எஸ்ஸி., பி.டி. ஆசிரியர், வடலூர்.

(புகழொளியின் சாதனைகளைப் பாராட்டி நூற்றுக்கு மேற்பட்ட கடிதங்கள் வந்துள்ளன. அனைவருக்கும் நன்றி. — ஆசிரியர்.)

* நல்ல நகைச்சுவையாகவும், திடுக்கிட வைத்த வித்தியாசமான முடிவோடும் இருந்தது 'அப்பு + சுப்பு' சிறுகதை.

— எஸ். ராஜா, குத்தாலம்.

* எங்கள் சகோதர சகோதரிகளுக்கு வாழ்வளிக்கும் அறிவாலயமே, உன் புகழ் வாழ்க! வளர்க!

— எல். ஆர். வெங்கட்டரமணன், செயலர், சக்தி கலைமன்றம், திருவான்மியூர்.

* 'ஆணவ எண்ணம் அழிவை உண்டாக்கும்' என்ற கருத்தை வலியுறுத்துகிறது 'வீண் சண்டை' படக்கதை.

— வி. சுந்தரராமன், குத்தாலம்.

* உலகப் புகழ்பெற்ற பிரெஞ்சுக் கதையான 'பொல்லாத அரசனுக்கு ஒரு பூச்சி அளித்த தண்டனை' படித்தேன். மிகவும் நன்றாக இருந்தது; நல்ல கருத்தை விளக்கியது.

— அழ. இராமசாமி, சென்னை — 53.

* 'சருமத்தைப் பாதுகாப்பது எப்படி?' என்ற மருத்துவக் கட்டுரையைப் படித்துப் பல புதிய செய்திகளைத் தெரிந்து கொண்டேன். டாக்டர் கு. கணேசன் அவர்களுக்கு நன்றி.


— இராம. செந்தில்குமார் (3360), திருக்கடையூர்.


* 'கோகுலம்' வாங்கியவுடன் நான் முதலில் படிப்பது 16 பக்க வண்ணப் படக்கதையைத்தான்! மிகவும் விறுவிறுப்பாக இருக்கிறது.

— க. சந்துரு நமசிவாயம், விருதுநகர்.

* எத்தனை தடவை நீங்கள் சொன்னாலும், சிலர் கவலைப்படாமல் காப்பி அடித்து அனுப்புகிறார்களே! சென்ற இதழில் ஏ. எஸ். சுரேஷ் எழுதியதாக வெளிவந்துள்ள 'பாட்டியின் தந்திரம்' ஒரு நாட்டுப்புறக் கதை. ஏற்கெனவே வெளிவந்த இக்கதையை அவர் காப்பி அடித்து அனுப்பியிருப்பது வருந்தத்தக்கது.

— இரா. நவநீதன் (19,593), பாளையங்கோட்டை; பா. வெங்கடேஷ் (13,605), சாத்தான்குளம்; தி. வெங்கடேசன் (7561), மயிலாடுதுறை; ஆர். இளஞ்செழியன், காத்தான் சாவடி; பேப்பர் கார்த்திக், இராணிப்பேட்டை.





மேலே உள்ள ஒவ்வொரு படமும் ஒரு பழமொழியை நினைவூட்டுகிறதல்லவா? எந்த எந்தப் பழமொழிகள், தெரியுமா?

விடை 23 – ஆம் பக்கம்.

கொடியும் மலரும்

— கூத்தபிரான் —

உங்கள் எல்லோருக்கும் நான் யாரென்று முதலில் சொல்லிக்கொள்கிறேன். அப்போதுதான் கதையே ஆரம்பமாகும். என் பெயர் மணிக்கொடி. நான் பேபி, பாரத தேவியின் மாமா.

'என்னடா இவன் மணிக்கொடி என்று பெயர் வைத்துக் கொண்டு இருக்கிறானே!' என்று நினைக்கிறீர்களா? எங்கள் குடும்பமே வெள்ளைக்காரன் காலத்தைக் கண்ணாலே பார்த்த குடும்பம். அந்தக் காலத்திலே தெருத் தெருவாக, நம் மூவர்ணக் கொடியைப் பறக்கவிடுவதும், ஜனங்களிடத்திலே தேசபக்திப் பாடல்கள் மூலமாக வீர உணர்ச்சியை ஊட்டுவதும், வேலையாயிருந்தது. அந்தச் சமயத்திலே பிறந்ததாலே, எனக்கு மணிக்கொடி என்று பெயர் வைத்தார்கள். அதுமட்டுமா? எங்கள் வீடு, தோட்டம், எல்லாவற்றுக்கும் கூட நாட்டுத் தலைவர்களின் பெயர்களைத் தான் வைத்தார்கள்! அந்த வழியிலேயே வந்து கொண்டிருக்கிற எங்கள் குடும்பத்திலே பிறந்த முதல் பெண் குழந்தைக்கு நாங்கள் வைத்த பெயர் 'பாரத தேவி!' சிலர், 'தேவி' என்று கூப்பிடுவார்கள். சிலர் 'அம்மா தேவி' என்று அழைப்பார்கள். ஏன், 'பேபி' என்று கூடக் கூப்பிடுவார்கள். அதையே நாளடைவில் 'தேவி பாரத தேவி' என்று எல்லோரும் கூப்பிட ஆரம்பித்து விட்டார்கள். பாரத தேவியை, 'தேவி, பாரத தேவி' என்று கூப்பிட்டால் போதும். ரொம்ப சந்தோஷப்படுவாள். ஆசையாக 'என்ன?' என்று கேட்டுக் கொண்டே ஓடி வருவாள்.

அவளுக்குப் பத்து வயது. அழகாயிருப்பாள். அகம்பாவம் கிடையாது. அன்பாகப் பேசுவாள். ஆட்டுக்குட்டி, நாய்க்குட்டியாயிருந்தால் கூட, துறுதுறுவென்று இருப்பாள். பிறருக்குத் துன்பமென்றால், 'அச்சச்சோ' என்று வருத்தப்படுவாள். உதவிசெய்ய முந்துவாள். ஒன்றாக, ஒற்றுமையாக நாலு பேர்களோடு இருக்க வேணுமென்று நினைப்பாள். நல்லதையே மற்றவர்களுக்குச் செய்வாள். படிப்பிலே படுசுட்டி. ஆடல் பாடல்களிலே அவள்தான் பள்ளியிலே முதல் மான் குட்டி! அவளுக்குக் கடவுள் மேலே பாடும் பாட்டு எவ்வளவு தூரம் பிடிக்குமோ, அதைப் போலவே நம் தேசத்தின் மேலே பாடும் பாட்டும் மிகவும் பிடிக்கும்.

ஒரு சமயம், 'நாடா? வீடா?' என்று பட்டிமன்றம். "நாடே நமக்கு வீடு" என்று வீர ஆவேசத்துடன் பேசி, முதல் பரிசாகப் பாரதியார் புத்தகத்தைத் தட்டிக் கொண்டு வந்து விட்டாள். ஓவியப் போட்டி வைத்தார்கள். அதிலும் முதற்பரிசு பெற்று விட்டாள், அவள். என்ன ஓவியம் வரைந்தாள் தெரியுமா? ஒரு பெரிய பாரத மாதா படம் போட்டு, அவளுடைய காலைத் தொட்டு ஒரு குழந்தை கும்பிடுவது போலவும், அந்தப் பாரத மாதா கண்ணீர் விடுகிற மாதிரியும், அதை ஒரு சின்னக் குழந்தை ஏணி மேலே ஏறி கம்பீரமாக, உயரமாக நிற்கும் பாரத மாதாவின் கண்களைத் தன் பிஞ்சுக் கைகளால் துடைத்து விடுகிற மாதிரியும் வரைந்து அதன் பக்கத்திலே,

''அம்மா, கவலைப்படாதே! நாங்கள் இருக்கிறோம்'' என்ற வாசகத்தையும் எழுதி விட்டாள். அதற்காக அவளுக்குக் கிடைத்த பரிசுப் பொருள் என்ன, தெரியுமா? ஒரு பெரிய கலர் பாக்ஸ். அன்று அதை வாங்கிக் கொண்டு சந்



தோஷமாக வீடு நோக்கி வீறுநடை போட்டுவருகிறாள், பாரததேவி. வரும் போதே,

"மாமா! மாமா! மணிக்கொடி மாமா! இதோ பாருங்கள். கலர் பாக்ஸ்! எனக்குத்தான் ஓவியப் போட்டியிலே ஃபர்ஸ்ட் பிரைஸ்!"

"அப்படியா! ரொம்ப சந்தோஷம்."

"மாமா, இந்தக் கலர் பாக்ஸை நன்றாய்ப் பாருங்கள், கவனிச்சுப் பாருங்கள், உங்களுக்கு என்ன தோணுது?"

"பாக்ஸுக்குள்ளே கலர்கள் நிறைய இருக்குன்னு தோணுது."

"கலர் பாக்ஸுக்குள்ளே கலர்கள் தான் இருக்கும். நெருப்புப் பெட்டிக்குள்ளே நெருப்பா இருக்கும்? தீக்குச்சிகள்தான் இருக்கும்."

"நீ சொன்னால் சரி."

"மணிக்கொடி மாமா! இந்தக் கலர் பாக்ஸைப் பார்க்கும்போது, வேறு எதுவுமே உங்களுக்குத் தோணலியா? யோசனை பண்ணுங்க."

"ம்... இது ஒரு புது கலர் பாக்ஸ்."

"பின்னே, பழைய கலர் பாக்ஸையா பரிசாக் கொடுப்பாங்க? போங்க மாமா."

"சொல்லிடட்டுமா? இந்த மாதிரி கலர் பாக்ஸ் உன்கிட்டே இல்லே. என்ன, சரிதானே?"

"போகட்டும், நான் ஒரு சின்ன துப்பு தர்றேன். அதை வெச்சு சொல்றீங்களான்னு பார்க்கலாமா?"

"துப்பு நீ கொடு. நான் உடனே துலக்கிடறேன்."

"பாரதியாருடைய பூனைக்குட்டிப் பாட்டு."

"ஆமாம், பூனைக்குட்டி, மியாவ், மியாவ்னு கத்துமே."

"பூனைக்குட்டி மியாவ், மியாவ்னு கத்தாமே, மாடு மாதிரி, 'அம்மா, அம்மா'ன்னு கத்தும்?"

"இதோ பாரு பாரததேவி, புதிர் போடாமே, நீயே சொல்லிடு."

"சரி சொல்லிடறேன். பாரதியார் என்ன பாடினார்?

வெள்ளைநிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்.
பிள்ளைகள் பெற்றதப் பூனை—அவை
பேருக் கொரு நிறமாகும்.

என்று தொடங்கி, அந்தக் குட்டிகளிலே ஒன்று சாம்பல் நிறம்; இன்னொன்று சாந்து நிறம்; அடுத்தது பாம்புநிறம்; அதற்கு அடுத்தது பாலின் நிறம்' என்று கூறுகிறார். அந்தப் பாட்டிலிருந்து என்ன தெரியுது? நாம எந்த நிறமாயிருந்தாலும், எந்த மொழி பேசினாலும் எந்த மதம், எந்த் சாதியாயிருந்தாலும் இந்தியர்கள். அதை நான் இந்தக் கலர் பாக்ஸிலே பார்க்கிறேன் மாமா."







''எப்படி? எப்படி?''

''இதுக்குள்ளே பல கலர்கள் இருந்தாலும் இதுக்குப் பேரு என்ன? கலர் பாக்ஸ்! இதுக்குள்ளே இருக்கிற ஒவ்வொரு கலர் கலரா்வா சொல்லிக்கிட்டு இருக்கோம்? அதுபோலத்தான், நாம். புரிஞ்சுதா? யோசனை பண்ணிணுப் புரியும்.''

பாரத தேவியின் இந்த விரிவான விளக்கத்தைக் கேட்டதும், எனக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. பாரத தேவியை அப்படியே தூக்கித் தலைக்கு மேலே வைத்துக்கொண்டு ஆனந்தக் கூத்தாடினேன். வீடு பூராவும் ஓடினேன்.

''என்னைக் கீழே விடுங்க, மாமா. நான் என்ன சின்னக் குழந்தையா? தலைமேல் தூக்கி வெச்சுக்கிட்டுக் குதிக்கிறீங்களே!''

''எனக்கு எப்பவும் என்னிக்கும் நீ தேவி பாரததேவிதான். ஆமாம். சொல்லிட்டேன்.''

''சரி! நான் இந்தக் கலர் பாக்ஸிலே இருக்கிற கலரை வெச்சுக்கிட்டு என்ன செய்யப் போறேன்னு தெரியுமா?''

''என்ன செய்யப் போறே?''

''கிட்டே வாங்க. உங்க காதை இப்படிக் கொடுங்க... உம்...''

''என்ன! இதை யார்கிட்டேயும் சொல்லக் கூடாது.''

''அப்படி என்னதான் அந்த பாரத தேவி மணிக்கொடி மாமாகிட்டே சொல்லி இருப்பாள்?' என்றுதானே நீங்கள் யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். அவள் என்ன சொன்னுள் தெரியுமா? அந்தக் கலர் பாக்ஸை வைத்து, நிறைய வரையப் போகிறுளாம்.''

''பூ! அதுதான் எங்களுக்குத் தெரியுமேன்னு சொல்றீங்களா? சரி நீங்கள் தான் யோசனை பண்ணி, அவள் என்ன வரையப் போறுள்னு எழுதி வைத்துக் கொள்ளுங்கள். நான் சொன்ன பிறகு அது சரியா என்று பார்க்கலாம். சரியாக இருந்தால் நீங்கள் இஷ்டப்படி மார்க் போட்டுக் கொண்டு இன்னெருத்தரை விட்டு உங்கள் முதுகிலே 'சபாஷ்'னு தட்டச் சொல்லுங்கள். என்ன ரெடியா? எழுதி வைத்துக் கொண்டீர்களா? பாரத தேவி என்ன வரையப் போறேன்னு சொன்னுள் தெரியுமா? நம் நாட்டின் மூவர்ணக் கொடியை! ஆனுல் அவள் ஒரே ஒரு கொடியை மட்டும் வரைய மாட்டாளாம். எப்படி என்று கேட்கிறீர்களா? சுதந்திர தினத்தன்று, சின்னச் சின்னக் குழந்தைகள் சட்டையிலே குத்திக் கொண்டு பள்ளிக்கூடத்துக்கு வருவார்களே, அந்த அளவிலே சின்னக் கொடிகள் ஒரு 100 தயார்



பண்ணப் போகிறாளாம்.''

''எதற்குத் தெரியுமா?''

''மணிக்கொடி மாமாக்கு எதுக்கு சிரமம்?

நானே சொல்றேனே?''

''சரி. நீயே சொல்லு.''

நம்ம தேசியக் கொடி ஒரு 100 தயார் பண்ணப் போகிறேன். எனக்கு வேண்டியவர்கள் எல்லோருக்கும் கொடுக்கப் போகிறேன். தப்புத் தப்பு. நானே என் கையாலே சட்டையிலே அழகாகக் குத்தி விடப் போகிறேன். வீட்டுக்கு யார் வந்து போனாலும், ஒரு தேசியக் கொடியோடுதான் அவர்கள் போவார்கள். போக வேண்டும். தேசியக் கொடியைக் கொடுக்கும் போது ஒரு நிபந்தனையோடுதான் அதை அவர்களுக்கு நான் கொடுப்பேன்.

''பேபி, அது என்ன நிபந்தனைன்னு தான் நீ என்கிட்டே சொல்லியிருக்கியே! அதை வேணும்னு நான் சொல்லட்டுமா?''

''தேவி, பாரத தேவின்னு கூப்பிட்டுப் பேசினாப் பேசுங்க. இல்லே, பேச வேண்டாம்.''

''தேவி பாரத தேவி, நான் அந்த நிபந்தனையைச் சொல்லட்டுமா?''

''சொல்லுங்க மாமா.''

''ரொம்பக்கடுமையான நிபந்தனை. தேவி பாரத தேவி கொடுக்கிற தேசியக்கொடியையாராவதுதொலைச்சுட்டாங்கன்னு, பாழடிச்சுட்டாங்கன்னு, அவங்க கூட கடைசி வரை பாரத தேவி பேச மாட்டாள்.''

''சரியாச் சொன்னீங்க மாமா! நான் ஆசையா அழகா வரைஞ்ச

தேசியக் கொடிங்கிறதாலே அப்படி நான் சொல்லல்லே. இது நம்மநாட்டுத் தேசியக் கொடின்னு நினேச்சு, மதிச் சாப் போதும்.''

''சபாஷ் தேவி பாரத தேவி!''

''சரி, தேவி பாரத தேவி, எனக்குத் தான் நீ வரையற முதல் கொடியைக் கொடுக்கணும்.''

''கண்டிப்பா! நம்ம தேசியக் கொடியை என் மணிக்கொடி மாமாவுக்கு முதல்லே கொடுக்கிறதாலே எனக்குத்தான் பெருமை.''

''அதை முதல்லே வாங்கிக்கறதிலே எனக்கு அதைவிடப் பெருமை.''

''சரி! அட்டென்ஷன்'' என்ருள் வீடு அதிரும்படி பாரத தேவி.

நான் அப்படியே ராணுவ வீரர் போல நின்றேன். பாரத தேவி ஓர் அழகான பூவேலேகள் செய்த தட்டில் ஒரு தேசியக் கொடியை எடுத்து வைத்தாள். தட்டைக் கீழே வைத்துவிட்டு, பயபக்தியுடன் கொடியை எடுத்து என் கதர் சட்டையில் அழகாகக் குத்தி, பிறகு என்னுடன் கைகுலுக்கிவிட்டு, ''மாமா, இப்போ சொல்லுங்க. கலர் பாக்ஸுக்கு நான் கொடுத்த விளக்கம் சரிதானே?''

''முற்றிலும் சரிம்மா பாரத தேவி! உன்னே மாதிரியே, நம்ம நாட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளும் இருக்கணும்னு நான் ஆசைப்படறேன்.''

''அதுக்கென்ன மாமா. நான் பார்க்கிற என்னேப் போல மாணவங்ககிட்டே எல்லாம் சொல்லிடறேன். சரி, மாமா, கொடி எப்படியிருக்கு மாமா?''

''பாரத தேவி கையாலே போட்ட கொடியைப் பாராட்ட முடியுமா? அதைக் கும்பிடத்தான் முடியும். கண்களிலே ஒற்றிக் கொள்ள முடியும்.''

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது, ''இப்படியே குழந்தையோட விளையாடிக்கிட்டு இருந்தா, ஆபீஸுக்குப் போக முடியுமா?'' என்று சந்தர்ப்பமாகப் பேசுவது போல் நினேத்து அதட்டியே மிரட்டினுள், என் மனேவி. நான் ஆபீஸுக்கு வேகமாகப் புறப்பட்டேன். பாரத தேவியும் பள்ளிக்குப் புறப்பட்டாள்.

நான் அலுவலகத்தில் பாரத தேவி வரைந்த தேசியக் கொடியை வருவோர், போவோருக்கெல்லாம் காட்டி அவளுடைய தேச பக்தியைச் சொன்னேன். அவர்கள் என் தங்கையின் குழந்தையை — நம் பாரத தேவியைப் பாராட்டினுர்கள். 'அந்தக் குழந்தையைப் பார்க்க வேண்டும்' என்ருர்கள்! அன்று என் அலுவலக வேலேகள் முடிந்ததும் அவசர அவசரமாக வீடு திரும்பினேன். எதற்கு? என் பாரத தேவியைப் பார்த்து அவள் வரைந்த கொடியினே மற்றவர்கள் பாராட்டியதைச் சொல்ல வேண்டும் என்று. வீட்டிற்கு வந்த நான் குழந்தையைத் தேடினேன்.

''பாரத தேவி! பாரத தேவி, நீ எங்கேயிருக்கே? எங்கேம்மா இருக்கே...?''

பதில் குரலே வரவில்லே. தோட்டத்துப் பக்கம் ஓடினேன். அவள் வழக்கமாக விளேயாடும் துளசி மாடம் அருகேயும் காணவில்லே. மாடிக்கு ஓடினேன். அங்கே நடுவே மாட்டியுள்ள காந்தித் தாத்தா படத்தின் கீழே கவலேயுடன் உட்கார்ந்து இருந்தாள்.

''என்னம்மா இது! மாலே முழுதும் விளேயாட்டாச்சே! இப்படி ஏன் உட்கார்ந்திருக்கே? என்னுச்சு உனக்கு? யார் மேலேயாவது கோபமா? யார் கூடவாவதுசண்டையா? உன்னேயாராவது ஏதாவது சொன்ஞங்களா?''

''என்னே யாராவது ஏதாவது சொன்ஞலும் பரவாயில்லே. அடிச்சாலும் பொறுத்துக்குவேன்.''

''என்ன நடந்தது?''

(தொடரும்)

பழமொழிப் புதிர்-விடை:

புதிர் — 35: குருவி உட்காரப் பனம் பழம் விழுந்த கதையாக.

புதிர் — 36: எறும்பை அடிக்க இரும்பு உலக்கையா?


(வி)சித்திரச் செய்திகள்

தவளை விஞ்ஞானி



பிரான்ஸில் ஒரு வானிலை அறிவிப்பு நிலையத்தில் ஒரு தவளையை வளர்த்து வருகிறார்கள் விஞ்ஞானிகள். காரணம் என்ன தெரியுமா? வானிலை மாறுவதை விஞ்ஞானக் கருவிகள் அறிவிப்பதை விட அந்தத் தவளை முன்னதாகவும் துல்லியமாகவும் தெரிவித்து விடுகிறதாம்.


ரோபோவின் ரசனை




மரங்களில் நன்றாக விளைந்து நன்றாகப் பழுத்திருக்கும் பழங்களை மட்டுமே தேர்ந்து பறிக்கக் கூடிய 'ரோபோ' என்னும் எந்திர மனிதனை அமெரிக்காவில் உருவாக்கியிருக்கிறார்கள். இது ஒவ்வொரு மரத்திற்கும் சென்று பழங்களைப் பறிக்கிறது. பழுக்காதவற்றையும் கெட்டுப்போன பழங்களையும் அது பறிப்பதில்லை!

பன்றியிடம் பால் குடித்த சிறுமி

சீனாவில் ஒரு கிராமத்தில், குழந்தையாக இருந்தது முதல் 13 வயது வரை பன்றியிடம் பால் குடித்து வளர்ந்த சிறுமியை மீட்டு மனிதர்களிடம் சேர்த்தார்கள் சமீபத்தில். அவள் பன்றியிடம் பால் குடித்துப் பன்றியோடு பன்றியாக வளர்ந்திருந்தாள். அவள் பெயர் ஸியான் ஃபெங். அவளுக்குப் பேசவும் தெரியவில்லை. ஆனால், அவளை வீட்டுக்குக் கொண்டு வந்து சீர்திருத்தி, எழுதப் படிக்கவும் பாட்டுப் பாடவும் கற்றுக் கொடுத்து விட்டார்கள்.



தாவர ஆஸ்பத்திரி




மேற்கு ஜெர்மனியில், வீட்டில் வளர்க்கப்படும் தாவரங்களைக் கவனிப்பதற்கென்றே ஒரு மருத்துவமனையை ஆரம்பித்திருக்கிறார்கள். வீட்டில் வளர்க்கப்படும் தாவரங்களுக்கு நோய் வந்து விட்டால், அல்லது வளர்ச்சி சரியில்லை என்றால், அந்த மருத்துவமனையில் கொண்டு வந்து கொடுத்து விட்டால் போதும். மருத்துவமனையில் உள்ள தாவரவியல் விஞ்ஞானிகள் அவற்றைக் கவனித்துச் சிகிச்சை அளித்துத் திருப்பிக் கொடுக்கிறார்கள்.

ஆமைச்சவாரி



சிசிலித் தீவில் ஆமைகள் மிக அதிகம். கரைக்கு வரும் ஆமைகளின் மேல் அங்கே உள்ள குழந்தைகள் ஏறி உட்கார்ந்து சவாரி செய்வார்கள். அவர்களை ஆமைகள் ஒன்றும் செய்வதில்லை. சில சமயம் ஆமைகள் கடலில் இறங்கும்போது குழந்தைகள் அவற்றின் முதுகிலிருந்து குதித்து விடுவார்கள். சிசிலித் தீவுக் குழந்தைகளுக்கு ஆமைச்சவாரி மிகவும் பிடித்தமான ஒன்று.

குழந்தை விஞ்ஞானி



அமெரிக்கா முழுவதும் உள்ள பள்ளிகளில், முதல் வகுப்புப் படிக்கும் மாணவர்களுக்கான அறிவியல் போட்டி ஒன்று நடத்தினார்கள். அதில் சச்சின் படேல் என்னும் 7 வயதுச் சிறுவனுக்கு முதல் பரிசு கிடைத்தது. மிகப் பெரிய செயற்கைக் கோளின் மாதிரி வடிவம் ஒன்றைச் செய்திருந்தான் அவன். இந்தியச் சிறுவனுக்கு அமெரிக்காவில் பரிசு கிடைத்தது நமக்கெல்லாம் பெருமைதானே!

மயக்கம் தந்த பென்சில்



தைவான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 59,000 பென்சில்களை இங்கிலாந்தில் உடனடியாக எரித்து அழித்து விட்டார்கள். காரணம், பென்சிலின் பின்பக்கம் இணைக்கப்பட்டிருந்த ரப்பரில் தடவப்பட்டிருந்த வாசனைத் திரவியம், குழந்தைகளுக்கு மூச்சுத் திணறலையும் மயக்கத்தையும் உண்டு பண்ணியது என்பதுதான். அந்தப் பென்சில்களை இறக்குமதி செய்த நிறுவனத்திற்கு அபராதமும் விதிக்கப்பட்டது!

டாக்டர் பக்கம்

கிரியங்களுக்கு முதல் உதவி

டாக்டர் கு. கணேசன்

விடுமுறை வந்துவிட்டது. உங்களுக்கு இனி கொண்டாட்டம் தான். வகுப்புகளுக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை; பாடங்களைப் படிக்க வேண்டிய நிர்ப்பந்தமில்லை; நினைத்த இடங்களுக்குச் செல்லலாம்; நினைத்த நேரத்தில் விளையாடலாம். மரத்தில் ஏறலாம். தரையில் குதிக்கலாம். மைதானத்தில் ஓடலாம். குளத்தில் நீந்தலாம். சைக்கிள் ஓட்டிப் பழகலாம். கிட்டியும் விளையாடலாம்; கிரிக்கெட்டும் விளையாடலாம். விடுமுறை முழுவதையும் விளையாட்டிலே கழிக்கலாம்.

மகிழ்ச்சிதான்!

நீங்கள் விளையாடும் போது எந்த விதமான விபத்தும் உங்களுக்கு ஏற்படக் கூடாது என்பதே என் பிரார்த்தனை. ஆனாலும் சிலருக்கு எதிர்பாராத விதத்தில் சில விபத்துக்கள் நடப்பதையும் உங்கள் கண்முன்னே நீங்கள் காண்கிறீர்கள் அல்லவா? அதற்கென்ன செய்வீர்கள்? யோசித்துப் பார்த்திருக்கிறீர்களா?

உதாரணமாக ஒரு தம்பி வேகமாக ஓடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அப்போது கல் தடுக்கிக் கீழே விழுந்து விடுகிறான். உடம்பில் அடிபட்டு விடுகிறது. சிராய்ப்போ, வெட்டுக் காயமோ ஏற்பட்டு விடுகிறது. அப்போது என்ன செய்வது?

இன்னொரு சிறுவன் மரத்தில் ஏறிவிளையாடுகிறான். கால் தவறித் தரையில் விழுகிறான். எலும்பு முறியுமளவிற்கு அவனது உடம்பில் பலத்த காயம் உண்டாகி விடுகிறது. அச்சமயத்தில் என்ன செய்வது?

வேறொரு சிறுமி சைக்கிளில் வேகமாகச் செல்கிறாள். எதிரே வரும் வாகனத்தின் மீது மோதி விடுகிறாள். தலையில் பலத்த காயம் ஏற்பட்டு விடுகிறது. அப்போது என்ன செய்வது?

"இதென்ன கேள்வி டாக்டர்? உடம்பில் காயம் ஏற்பட்டால் உங்களை மாதிரி மருத்துவர்களிடம் வர வேண்டும். மருந்து போட்டுக் கொள்ள வேண்டும்" என்று நீங்கள் சொன்னால் தவறில்லைதான்.

ஆனால், அதேசமயம் —

விபத்து என்பது திடீரென்று நிகழக் கூடிய எதிர்பாராத நிகழ்ச்சி என்பதும், அது நிகழும் இடத்தையோ, நேரத்தையோ முன்கூட்டியே நம்மால் நிர்ணயம் செய்ய இயலாது என்பதும் உங்களுக்குத் தெரிந்த விஷயம் தானே? இதனால் விபத்து நடக்கும் இடத்திலேயே மருத்துவர் இருப்பார் என்பதும், உடனே மருத்துவ உதவி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதும் இயலாத காரியமாகி விடலாம் அல்லவா? அப்படியே அருகில் எங்கேனும் மருத்துவர் இருந்தாலும், அவ்விடத்திற்குக் காயமேற்பட்ட நபரை அழைத்துச் செல்வதற்கு வாகன வசதியும், பொருளாதார வசதியும் அனைவருக்கும் இருக்குமா என்பதும் சந்தேகமே! ஆக, இம் மாதிரிக் காரணங்களினால் காயமேற்பட்ட நபருக்கு மருத்துவ உதவி கிடைப்பதில் கால தாமதம் ஆகலாம் அல்லவா?

அம் மாதிரி சமயங்களில் காயமேற்பட்ட நபரை வேடிக்கை பார்த்துக்

கொண்டிருக்காமல், நீங்களே சில எளிய சிகிச்சை முறைகள் மூலம் அவருக்கு உதவலாம். நீங்கள் செய்யும் அந்த எளிய சிகிச்சை முறை உதவிகளுக்கு 'முதலுதவி' என்று பெயர். இதையே ஆங்கிலத்தில் 'First Aid' என்று சொல்வார்கள்.

இந்த முதலுதவி என்பது ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் உதவியாகவும் இருக்கலாம்; உங்களுக்கு நீங்களே செய்து கொள்ளும் சுய உதவியாகவும் இருக்கலாம். எளிய காயங்களுக்கும் முதலுதவி செய்யலாம்; பலத்த காயங்களுக்கும் முதலுதவி செய்யலாம். நீங்கள் செய்யும் முதலுதவியின் மூலம் காயங்களில் கிருமிகள் தொற்றிக் கொள்வதைத் தவிர்க்கலாம். இரத்தம் கசிவதை நிறுத்தலாம். வேதனையைக் குறைக்கலாம். காயங்கள் விரைவில் குணமாவதற்கு உங்கள் முதலுதவி முறைகள் உபயோகப்படலாம். ஆக, நீங்கள் செய்யும் சில எளிய உதவிகள் எத்தனையோ பலன்களை அளிக்கலாம்.

அப்படிப் பலன் தரக்கூடிய முதலுதவி முறைகளை நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டாமா? அதற்குத்தான் இக்கட்டுரையில் காயங்களுக்குச் செய்ய வேண்டிய முதலுதவி முறைகளை விளக்கிச் சொல்லப்போகிறேன். படிக்கிறீர்களா?

— உங்களுக்கோ, உங்கள் நண்பருக்கோ காயமேற்பட்டுவிட்டது என்று வைத்துக் கொள்வோம். அப்போது நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம் அக்காயத்தின் தன்மையை அறிந்து கொள்வதுதான். அதாவது அந்தக் காயம் எளிய காயமா? அல்லது பலத்த காயமா? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். சருமத்தில் மட்டுமே காயம் பட்டுள்ளதா? அல்லது சதையும் பாதிக்கப்பட்டுள்ளதா? என்பதையும் பார்த்துக் கொள்ள வேண்டும். காயத்திலிருந்து ரத்தம் வெளியேறுகிறதா என்பதையும், எலும்பு முறிவு ஏதேனும் உள்ளதா என்ற விவரத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகே உங்கள் முதலுதவிகளைச் செயலாக்க வேண்டும்.

—சிராய்ப்புக்கள், கீறல்கள் போன்றவை எளிதான காயங்கள். இவை சருமத்தை மட்டுமே பாதித்திருக்கும். இம்மாதிரியான எளிய காயங்களை, சுத்தமான தண்ணீராலோ, அல்லது தண்ணீரையும் சோப்பையும் கொண்டோ கழுவி, சுத்தமான துணியால் துடைக்க வேண்டும். இதன் மூலம் காயத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் மண், தூசு, அழுக்கு போன்றவற்றை அகற்றி விடலாம். காயமும்



சுத்தமடையும். அதன் பிறகு, முடிந்தால் 5% டிங்க்சர் அயோடின் தோய்த்த துணியால் காயத்தை மூடிக் கட்டுப் போடலாம். இல்லையென்றால் சுத்தமான துணியைக் கொண்டு காயத்தை மூடிக் கட்டுப் போட்டாலே போதுமானதுதான். இப்படிச் செய்வதால் காயத்தில் வேறு ஏதேனும் பாக்டீரியா போன்ற கிருமிகள் தொற்றிக் கொள்வதைத் தடுத்து விடலாம்.

— வெட்டுக் காயங்கள், துளைத்த காயங்கள், சின்னாபின்னமாகக் கிழிந்த காயங்கள் போன்றவை பலத்த காயங்களாகும். இவை சருமத்தை மட்டுமன்றி, சதையையும் பாதித்திருக்கும். இக்காயங்களின் விளிம்புகள் விரிந்திருக்கும். சதை கிழிபட்டிருக்கும். இரத்தம் வெளியேறிக் கொண்டிருக்கும். இம்மாதிரிக் காயங்களைச் சுத்தமான தண்ணீராலோ அல்லது, டெட்டால், 3% ஹைட்ரஜன் பெராக்சைடு ஊற்றியோ நன்றாகச் சுத்தம் செய்ய வேண்டும். பிறகு சுத்தமான துணி ஒன்றை, பலமடிப்புகளாக மடித்து காயத்தின் மீது வைத்துப் பல நிமிடங்கள் அழுத்திப் பிடிக்க வேண்டும். இதனால், காயத்திலிருந்து இரத்தம் கசிவது நின்றுவிடும். அப்படியும் இரத்தம் கசிவது நிற்கவில்லையென்றால் காயமேற்பட்ட உறுப்பை உயர்த்திப் பிடிக்க வேண்டும். இப்போதும் நிற்கவில்லையா? கீழ்க்காணும் முறையைக் கையாளலாம். முன் கையில் காயம் பட்டு இரத்தம் வெளியேறினால் முழங்கையை நன்றாக மடக்கிக் கொள்ள வேண்டும். காலில் காயமிருந்தால் முழங்காலை மடக்க வேண்டும். இதனால் இரத்த நாளங்கள் அழுத்தப்படுவதால் இரத்தம் வெளியேறுவதும் நின்றுவிடும். பிறகு சுத்தமான துணியால் காயத்தை மூடி நன்கு அழுத்தமாகக் கட்டுப் போட வேண்டும். பொதுவாக, வெட்டுக் காயங்களும், கிழிபட்ட காயங்களும் தையல் போட்டு (suture) மூட வேண்டியிருக்கும். எனவே, இக்காயங்களுக்கு முதலுதவி செய்துவிட்டு, மருத்துவர் உதவியையும் உடனே நாட வேண்டியது அவசியமாகும்.

— காயங்களோடு எலும்பு முறிவும் ஏற்பட்டிருந்தால் காயங்களுக்கு மேற் சொன்ன முறைகளில் முதலுதவி செய்துவிட்டு, முறிந்து போன, எலும்புகள் அசையாதபடி அவற்றின் இருபக்கங்களிலும் மூங்கில் தப்பைகளை வைத்து கனத்த துணியால் அல்லது துண்டால் நன்கு சுற்றி விட வேண்டும். பொதுவாக எலும்பு முறிந்த பாகத்தைத் தொங்கப் போடக் கூடாது. கை எலும்பு முறிந்திருந்தால் முழங்கையை 'ட' வடிவில் மடக்கிவைத்துக் கொள்ள வேண்டும். கால் எலும்பு முறிந்திருந்தால் காலை உயர்த்திப் பிடித்துக் கொள்ள வேண்டும். எலும்பு முறிவு என்று சந்தேகப்பட்டாலே மருத்துவர் உதவியை உடனே நாட வேண்டும்.

—சிலசமயம் மேல்தோலில் காயம் இருக்காது. பதிலாக தோலின் உட்பக்கம் பாதிக்கப்பட்டு இரத்த உறைவு உண்டாகியிருக்கும். இதனால் தோலுக்கடியில் வீக்கமும், வலியும் உண்டாகும். தோல் கருநீல நிறமாக இருக்கும். இம் மாதிரி சமயங்களில் வீக்கத்தின் மேல் அரை மணிக்கு ஒருமுறை ஐஸ் கட்டியை வைத்தால் வலியும் குறையும்; வீக்கமும் வற்றிவிடும். ஐஸ் கட்டி கிடைக்காவிட்டால் குளிர்ந்த நீரையே அவ்வீக்கத்தின் மீது ஊற்றலாம்.

— சிலர் அவசரத்தில் கதவிடுக்குகளில் விரல்களை நசுக்கிக் கொள்வார்கள். பார்த்திருக்கிறீர்களா? அப்போது நகத்தினுள் இரத்தம் கட்டிக் கொண்டு வேதனையுண்டாகும். அதைத் தவிர்க்க, துரு ஏறாத சுத்தமான ஊசியினால் நகத்தின் அடியில் குத்தி, உறைந்துள்ள இரத்தத்தை வெளியேற்றிவிட்டு, சுத்தமான துணியால் கட்டுப் போட வேண்டும்.

— முள், ஊசி, கம்பி, பீங்கான், கண்ணாடித் துண்டு போன்றவை காலில் குத்திக் காயமேற்படலாம் அல்லவா? அப்போது காயத்தில் நுழைந்த மேற்சொன்ன பொருட்களைப் பக்குவமாக வெளியே எடுத்துவிட்டு, பின்பு துணியால் அழுத்தமாகக் கட்டுப் போட வேண்டும்.


— அறியாமையின் காரணமாகவும், அவசரத்தின் காரணமாகவும் சிலர் காயத்திலிருந்து இரத்தம் கசி


வதைத் தடுக்கக் காயத்தின் மேல் மணல், கரி, சுண்ணாம்பு, மூக்குப் பொடி, காப்பிப் பொடி, சாணம், சர்க்கரை, விபூதி, குங்குமம் போன்ற வற்றைப் போட்டு மூடிவிடுகிறார்கள். இது மிக மிகத் தவறான செயல். இதனால் காயத்தில் போய்க் கிருமி கள் தொற்றிக் கொள்வதற்கு நல்ல வாய்ப்பு உண்டாவதோடு, காயம் குணமடைவது கால தாமதமாகலாம். எனவே, இத்தவறான செயலை இனிமேல் மேற்கொள்ளாதீர்கள்.

— எந்த ஒரு காயமாக இருந்தாலும் மருத்துவர் ஆலோசனை யின் பேரில் 'டெட்டனஸ் டாக்சாய்டு' (tetanus Toxoid) என்ற தடுப்பு ஊசியை காயம் பட்ட 24 மணி நேரத்திற்குள் போட்டுக் கொள்ள வேண்டும். ஏனென்றால் சில சமயம் காயத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டு, உயிருக்கு ஆபத்து வரக் கூடிய 'இசிவு நோய்' (Tetanus) வரக் கூடும். மேற்சொன்ன தடுப்பு ஊசி போட்டுக் கொள்வதன் மூலம் இசிவு நோயை வரவிடாமல் தடுத்துக் கொள்ளலாம்.

— காயங்கள் முழுமையாக ஆறு கிற வரைக்கும் மருத்துவர் சொல் லும் ஆலோசனைகளை முறையாகப் பின்பற்றுங்கள். காயங்களை விரல் களால் அடிக்கடி தொடுவதையும், காயங்களைச் சுற்றிச் சொறிவதையும், தவிர்க்க வேண்டும். ஏனென்றால் காயங்களில் கிருமிகள் தொற் றிக் கொண்டு சீழ் வைக்கும். நிணநீர்க் கட்டிகள் வீங்கும். வலி எடுக்கும். காய்ச்சல் வரும். காயம் ஆறுவதற்குத் தாமதமாகும். இத்தனை தொந்தரவுகள் நமக்கு அவசியமா? எனவே காயங்களைக் கட்டுப் போட்டு மூடிய பிறகு, நம் விரல்களுக்கு அங்கே வேலை இல்லை என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஆக, குழந்தைகளே! இனிமேல் உங்களுக்கோ உங்கள் நண்பர் களுக்கோ காயம் பட்டுவிட்டால் கவலையில்லைதானே! முதலுதவியே சிறந்த உதவி (First Aid is best aid) என் பதை நிரூபிப்பீர்கள், அல்லவா? மிக்க மகிழ்ச்சி.





கவிதை பிறந்த கதை

நூலகம் என்பது தேன்கூடு!

கொ.மா. கோதண்டம்

கவிஞர் கொ. மா. கோதண்டம், ஓய்வு நேரத்தில் தம் ஊரிலுள்ள ஒரு நூலகத்திற்குச் செல்வதுண்டு. அந்த நூலகத்தில் ஒரு பையன் இருந்தான். அவன்தான் எல்லாருக்கும் நூல்களை எடுத்துக் கொடுப்பான். 'இதைப் படித்து விட்டேன், வேறு நூல் கொடு' என்றால், 'அந்த நூல் இல்லை, வெளியே போய் விட்டது' என்பான் அலட்சியமாக. அவ்வளவு சோம்பல் அவனுக்கு!

கவிஞர் அடிக்கடி நூலகத்துக்குப் போய் வந்ததால், இந்தக் காட்சியைக் காண நேர்ந்தது. ஒரு சமயம், கவிஞரே அந்தப் பையனிடம், தாம் படித்த புத்தகத்தைக் கொடுத்து விட்டு, 'வேறு நல்ல புத்தகமாகக் கொடு!' என்று கேட்டார். உடனே அந்தப் பையன், 'நல்ல புத்தகத்தில் தேனா தடவி இருக்கும்?' என்று 'வெடுக்'கென்று கேட்டானே பார்க்கலாம்! கவிஞருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது என்றாலும் அவர் அதை அடக்கிக் கொண்டு, 'இவனுக்கு நூல்களின் அருமையை உணர்த்த வேண்டுமே!' என்று சிந்திக்கலானார். நூலகத்துக்கு வரும்போதெல்லாம் அந்த நினைப்பே அவருக்கு வரும். நாளடைவில் அதுவே ஒரு கவிதையாகப் பிறந்தது.

நூலகம் என்பது தேன்கூடு.
நூல்ஒவ் வொன்றும் தேன்துளிகள்.
நூலகம் என்பது பூக்காடு.
நூறுயிர மாம்நன் மலர்கள்!

நூலகம் என்பது பழந்தோப்பு.
நூல்ஒவ் வொன்றும் தீங்கனிகள்.
நூலகம் என்பது தனிஉலகம்.
நுழைந்தால் புதுப்புது அனுபவங்கள்!

நூலகம் என்பது பெருங்கோவில்.
நூல்ஒவ் வொன்றும் கலைத்தூண்கள்.
நூலினுள் இருப்பது அறிவிறைவன்.
நுழைந்தோர்க் கெல்லாம் அருளுண்டு!



இப்படி, தாம் எழுதிய கவிதையை அந்த நூலகப் பையனிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார் கவிஞர். கவிதையைப் படித்த பையன், தன் தவறை உணர்ந்தான். "ஐயா! இனி நான் இப்படியெல்லாம் நடந்து கொள்ள மாட்டேன், அலட்சியமாகப் பதில் சொல்லவும் மாட்டேன்!" என்று பணிவன்புடன் கூறினான். அதைக் கேட்டதும் கவிஞரின் மனம் மிகவும் மகிழ்ந்தது.

கவிஞர் வீட்டு முன்புறத்தில் ஒரு தென்னை மரம் இருந்தது. அதில் குருவிகள் பல கூடுகள் கட்டியிருந்தன. எந்நேரமும் குருவிகளின் 'கீச் கீச்' சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். சில குருவிகள், வீட்டினுள் நிலைக் கண்ணாடிச் சட்டத்தில் அமர்ந்து கொண்டு, கண்ணாடியில் தெரியும் தம் பிம்பங்களை, நிஜக் குருவிகள் என நினைத்துக் கொண்டு 'டக் டக்'கென்று கொத்தி அதனை அழைக்கும். கவிஞர்


இந்த அழகிய காட்சியைக் கண்டு மகிழ்வாராம்.

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் இவர் வீட்டுக்கு வரும் சிறுவர்கள், குருவிகளைப் பார்த்ததும் 'ச்சூ ச்சூ' என்று விரட்டுவார்களாம். அது மட்டுமல்ல; சிறிய கற்களை எடுத்து குருவிகள் மீது எறிந்து மகிழ்வார்களாம். அதைக் கண்டு வருந்திய கவிஞர், குருவிகள் ஒற்றுமையாக வாழ்வதையும், தன்னம்பிக்கையுடன் கூடு கட்டிக் கொள்வதையும் எடுத்துக் கூறி, அவைகளிடம் அன்புடன் பழக வேண்டும் என்று அறிவுறுத்துவாராம்.

இந்தக் கருத்தை வைத்து ஒரு பாட்டு எழுத வேண்டும் என்று கவிஞர் எண்ணினார்; பாட்டும் எழுதினார்; சிறுவர்களிடம் பாடியும் காட்டினார். அந்தப் பாட்டு —

எங்கள் தென்னை மரத்திலொரு
சின்னக்குருவி
எங்கிருந்தோ பறந்துவந்து
அமர்ந்து கொண்டது.
தங்கக்கழுத்தை ஆட்டியாட்டி
தாவிப் பறந்தது.

பின்னிப்பின்னிக் கூடு ஒன்றைக்
கட்டிக்கொண்டது.
பெருமையோடு சொந்தவீட்டில்
குடியிருந்தது.
சின்னச்சின்ன முட்டைரெண்டு
கூட்டிலிருந்தன.
சிறகில்லாத குஞ்சுகளாய்
வெளியே வந்தன.



மரத்தின்மேலே கூடுபல
கூடி வருகுது.
வகைவகையாய்க் குருவிகளும்
வந்து சேருது.
அரவணைத்து ஒன்றையொன்று
அன்பு செலுத்துது.
அவற்றிடையே பேதமின்றிக்
கூடி வாழுது!

கவிஞர் வகுப்பில் பாடம் நடத்தும் போது, அறிவியல் கருத்துக்களையும் சேர்த்துச் சொல்வதுண்டாம். சூரிய மண்டலம், கோள்கள் முதலானவற்றை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும்படி கூறுவரார்.

கவிஞர் ஒரு நாள், விண்ணில் உள்ள சிறு சிறு கோள்கள் பற்றிக் கூறினார். அப்போது கவிஞரின் இளைய மகன் இளங்கோ எழுந்து நின்று, "அப்பா! இதைப் பாட்டா பாடுங்களேன்?" என்றான். மற்ற மாணவர்களும் 'ஆமா சார்!' என்று ஆமோதித்தனர். அருகிலிருந்த ஆசிரியர் ஒருவரும், குழந்தைங்க கேக்கறாங்க, பாருங்க சார்!" என்று தூண்டினார். உடனே கவிஞர், தாம் சொல்ல வந்த கருத்தைக் கவிதையாக்கி, ராகத்துடன் உரக்கப் பாடிக் காட்டினாராம். அந்தப் பாட்டைக் கேட்டு மாணவர்கள் கை தட்டி ஆரவாரம் செய்தார்களாம்.


சூரிய மண்டல எல்லைக்குள்
சுற்றும் பெரிய கோள்களுடன்
ஆயிர மாயிரம் சிறுகோள்கள்
அவையும் சுற்றி வருகிறதாம்.

புகையே சூழ்ந்த கோளம்போல்
ஒளியணுக் களினால் வாலமைத்து
வகையால் எப்போ தேனும்வரும்
வால்நட் சத்திரங்கள் பலவாகும்.

இரவினில் தீயெரி அம்பெனவே
எங்கோ பாய்வது போல்தெரியும்.
எரிமீன் என்னும் விண்கற்கள்
எங்கும் விழலாம் சிலவேளை.

விண்ணில் எத்தனை விந்தையடா!
வியக்க வைக்கும் சந்தையடா!
விண்ணை இன்னும் ஆய்வோமே.
விஞ்ஞான அறிவை வளர்ப்போமே!

பேட்டி: பி. வி. கிரி.


ரவி, காரை 'எடுத்துக்' கொண்டு வீட்டுக்குப் 'பறந்தான்'
கதாசிரியரின் வாக்கியங்களுக்குப் பொருள் புரியாமல், நமது ஓவியர் அவசரத்தில் படம் வரைந்து விட்டார்.
...அந்த இருவரின் 'குடுமியும்' ராமுவின் கையில் சிக்கியிருந்தது....
அப்பாவுக்குப் பயந்து கொண்டு ராஜு 'வாலைச் சுருட்டிக் கொண்டு' உட்கார்ந்தான்.
கமலாவுக்கு 'ரெட்டை நாக்கு' (நம்மிடம் ஒன்றும் பிறரிடம் ஒன்றும் சொல்வாள்)
அவனுக்குக் 'கை கொஞ்சம் நீளம்' எதைப் பார்த்தாலும் திருடி விடுவான்,
செய்தியைக் கேட்டவுடன் அவன் அப்படியே 'உடைந்து போனான்.'

இரு மொழிகளில் பழமொழிகள்



PARALLEL PROVERBS



கருப்புக் கோழியும் வெள்ளை முட்டைதான் இடும்.

A black hen lays a white egg.

கப்பல்காரன் வாழ்வு காற்றடித்தால் போச்சு


A merchant's happiness hangs upon change of winds.

காணிச் சோம்பல் கோணிக் கேடு.

A small neglect breeds great mischief.

பலநாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்.

An old thief will one day be caught.



சுற்றச் சுற்றத் தூசும் கிடைக்காது.

A rolling stone gathers no moss.

அதிக ஆசை அதிக நஷ்டம்.

All covet; all loss.

ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.

A hasty man never wants woe.

இளங்கன்று பயமறியாது.

An young calf knows no fear.

துஷ்டருடன் சேருவதை விடத் துணையின்றி இருப்பதே மேல்.

Better be alone than in bad company.

— ஆர். நடராஜன் (2634) தில்லை ஸ்தலம்.

குழந்தைகளே! கடந்த 87 செப்டம்பர் 'கோகுலம்' இதழில் புதிய ஜனாதிபதியின் கதை படித்தீர்கள் அல்லவா?

அவர் அதற்கு முன்பு துணை ஜனாதிபதியாக இருந்தார். அவர் ஜனாதிபதி

புதிய துணை ஜனாதிபதி கதை



ஜானகி மணாளன்

ஆனதும், அந்த இடத்தில், துணை ஜனாதிபதியானவர் யார் தெரியுமா? திரு. எஸ். டி. சர்மா அவர்கள்.

அவருடைய வாழ்க்கைக் குறிப்பைப் பார்ப்பதற்கு முன்பு, அந்தத் துணை ஜனாதிபதி பதவி பற்றிய சில தகவல்களை அறிந்து கொள்ளுங்கள்.

இந்திய 'பார்லிமெண்ட்' இரு சபைகள் கொண்டது. மேல் சபைக்கு 'ராஜ்ய சபா', என்று பெயர். கீழ் சபைக்கு 'லோக் சபா' என்று பெயர். இந்த இரு சபை உறுப்பினர்களும் சேர்ந்துதான் துணை ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இவர், ஜனாதிபதிக்கு அடுத்தபடியாக, நாட்டில் இரண்டாவது மிகப் பெரிய தலைவர்.

ஆனால், சாதாரண சமயங்களில் இவருக்கு ஜனாதிபதிக்குத் துணையாக இருந்து செயல்படும் எந்தவித தனிப் பணிகளும் கிடையாது. அப்படியானால் துணை ஜனாதிபதி என்ற ஒரு பதவி எதற்காக? ஐயம் ஏற்படுகிறது அல்லவா? சொல்கிறேன்.

திடீரென்று ஜனாதிபதி வெளிநாடு போகிறார்; ராஜினாமா செய்கிறார். பதவி நீக்கம் செய்யப்படுகிறார். நோய்வாய்ப்படுகிறார்; அல்லது அவருக்கே ஏதாவது ஒன்று ஆகிவிடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தச் சமயங்களில் உடனே பதில் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க முடியாது அல்லவா? அப்போது, ஜனாதிபதியாகத் தற்காலிகப் பொறுப்பு ஏற்பதற்காகத்தான் இந்தத் துணை ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுகிறார். அப்போதும் இவர் ஆறு மாதம்தான் பொறுப்பு வகிக்கலாம். அதற்குள் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டுவிட வேண்டும்.

அப்படியானால் சாதாரண சமயங்களில் இவருக்கு எந்தவிதப் பணியுமே கிடையாதா? — உண்டு. ராஜ்ய சபாவின் தலைவர் இவர்தான். அதற்கான சம்பளத்தைத்தான் இவர் பெறுகிறார். துணை ஜனாதிபதி பதவிக்கு என்று இவருக்குத் தனிச் சம்பளம்

கிடையாது.

சரி! இப்போது திரு. எஸ். டி. சர்மா பற்றிப் பார்ப்போம். இவரது முழுப் பெயர் சங்கர் தயாள் சர்மா என்பது. போபாலில் ஒரு வைத்தியர். குஷிலால் என்று பெயர். அவர் வீட்டில் 1918 ஆகஸ்ட் 19ஆம் நாள் பிறந்தார். எழுபது வயதாகிறது. சென்ற பிறந்த நாளுக்கு இரண்டு நாள் முன்புதான் துணை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிலர் செய்யும் தொண்டு, அப்போதே பிரபலமாகிப் 'பளிச்' என்று வெளிப்படும். வேறு சிலரது தொண்டு அடக்கமாக இருக்கும். அப்போதேவெளிப்படாது.ஆனால்.காலப் போக்கில் மெல்ல மெல்ல வெளிப்பட்டு, பல நாட்கள் நீடித்துப் புகழ் பரப்பிக் கொண்டிருக்கும். இவரது தொண்டு இரண்டாவது வகையைச் சார்ந்தது.

ஒன்றுமில்லை. அவரது படிப்பையே எடுத்துக் கொள்ளுங்கள். 'ஏ.... அப்பா! இத்தனை படிப்பா...!' என்று ஆச்சரியப்பட்டு அசந்து போவீர்கள்.

முதலில் ஆக்ரா செயின்ட் ஜான் கல்லூரியில் கல்வி கற்றார். பிறகு லக்னோ பல்கலைக் கழகத்தில் எல். எல். எம். படிப்பில் முதலாவதாகத் தேறினார். லண்டன் சென்று, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்து, 'அரசியல் துறை டிப்ளமா' பெற்றார். 'லிங்கன்ஸ்—இன்'னில் பயின்று பார்—அட்—லா ஆனார். அது சட்டப்படிப்பு. பிறகு ஹார்வர்டு சட்டக் கல்லூரியின் 'ஃபெலோ' ஆனார். இவை தவிர, சுவிட்சர்லாந்தின் 'ஜூரிச்' மற்றும் பிரான்சின் 'பாரிஸ்' பல்கலைக் கழகங்களிலும் கூடச் சேர்ந்து பயின்றார்.

இவை மட்டுமல்ல இவரது சாதனை! இவர் ஒரு பன்மொழிப் புலவர். ஆம்! பலமொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். ஆங்கில இலக்கியம், ஹிந்தி மற்றும் சமஸ்கிருத எம். ஏ. பட்டப் படிப்பில் பல்கலைக் கழகத்திலேயே முதலாவது இடத்தைப் பெற்றுத் தேறினார். இப்போதும் கூடப் பல மொழிகளைக் கற்பது இவருக்குக் கரும்பு தின்பதைப் போல! மகாராஷ்டிர மாநில கவர்னராக இருந்த போது மராட்டி மொழியைக் கற்றுக் கொண்டார்.

ஒரு சமயம் ஆந்திர மாநில அரசியலில் பெரும் நெருக்கடி! தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் கவிழ்க்

ஷி. சுப்பிரமணியத்திற்கு அனுவிரத விருதினை வழங்குகிறார்.



கப்பட்டு விட்டது. தொடர்ந்து பல விபரீதங்கள் நடந்து விட்டன. நிலைமையைச் சாதுர்யமாகச் சமாளிக்கப் பொருத்தமான ஒருவர் தேவைப்பட்டார். அங்கு கவர்னராக அனுப்பப் பட்டவர் யார் தெரியுமா? சர்மாதான்!

அங்கு சென்றதும், கோபாவேசத்தில் துடித்துக் கொண்டிருந்த தலைவர்களைச் சந்தித்தார். அவர்கள் கூறிய சூடான புகார்களை அமைதியாகக் கேட்டுக் கொண்டார். தக்கவாறு பரிகாரம் கண்டார். மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைப் பதவியில் அமர்த்தினார். அதன் மூலம் அனைவரது ஒருமித்த பாராட்டுதலையும் பெற்றார்.

சதா புன்முறுவல் தவழும் முகம். அதன் மூலம் பல அற்புத சாதனைகளை நிகழ்த்திக் காட்டினார். முதலில் போபால் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தமது பொதுத் தொண்டைத் துவக்கினார். கடந்த முப்பது ஆண்டுகளில், படிப்படியாக உயர்ந்து, கட்சியின் தலைமைப் பதவி வரையில் பல உயர் பொறுப்புகளை வகித்தார். எனினும், இதுவரையில் அவராக எந்தப் பதவியையும் தேடி ஓடியவர் இல்லை. பதவி அவரை நாடி ஓடி வந்தது. எந்தப் பொறுப்பில் இருந்தாலும் சரி! அப்போது தமது கருத்து எதையும் பிறர் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்க முயலமாட்டார். ஆனால், சுமுக உறவின் மூலமாகவே சாதுர்யமாகத் தமது கருத்துக்களைப் பிறர் ஏற்றுக் கொள்ளுமாறு செய்து விடுவார்.


இவர், எந்த விதமான வாத விவாதங்களிலும் சிக்கிக் கொள்ளாமல் ஒதுங்கியே வாழும் குணம் உடையவர். எனவேதான் அவரால் துணை ஜனாதிபதி என்ற உயர்ந்த பதவிக்கு வர முடிந்தது. இவர் துணை ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட உள்ளார் என்ற செய்தி அறிந்ததுமே, அத்தனை எதிர்க் கட்சியினரும் கூடித் தமது சார்பில் எவரையும் நிறுத்தாமல் ஒதுங்கிக் கொண்டு, போட்டியின்றி இவர் தேர்ந்தெடுக்கப்பட ஒத்துழைத்தனர் என்றால், இவரது செல்வாக்கைப் பார்த்துக் கொள்ளுங்களேன்!

1967, பல மாநிலங்களில் காங்கிரஸ் கட்சிக்குப் படுதோல்வி. அதற்கு மீண்டும் புத்துயிர் ஊட்ட வேண்டியிருந்தது. பல்வேறு தலைவர்களிடம் பலவிதப் பணிகள் ஒப்படைக்கப்பட்டன. அவர்களில் சர்மாவும்

• பாராளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் உரை நிகழ்த்த வருகிறார். முன்னால் துணை ஜனாதிபதியும், லோக சபைத் தலைவர் பலராம் ஜாக்கரும் பின்னால் பிரதமரும் காணப்படுகிறார்கள்



* டில்லியில் சென்ற பிப்ரவரி மாதம் நடந்த 8—வது உலகப் புத்தகக் காட்சியைத் திறந்து வைத்துப் பார்வையிடுகிறார்.



ஒருவர். அது வரையில் மத்தியப் பிரதேச அரசியலில்தான் தொண்டாற்றி வந்தார். அதன் பிறகு, தேசிய காங்கிரசின் செயலர் ஆனார். 1968லிருந்து நான்கு ஆண்டுகளுக்கு அப்பதவியில் இருந்தார்.

பிற்பாடு காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளந்தது. ஒரு பிரிவுக்குத் திருமதி இந்திராகாந்தி தலைவர். மற்றொன்றுக்கு திரு நிஜலிங்கப்பா. இவர் எந்தப் பக்கம் என்று எவராலும் கணிக்க முடியவில்லை. நான்கு நாட்கள் வரையில், இருபிரிவில் எவரையும் சந்திப்பதைத் தவிர்த்தார். நிலைமையைத் துல்லியமாக எடை போட்டார். அதன் பிறகு அவர் ஏற்றுக் கொண்டது, இந்திராஜியின் தலைமையை.

இவர் 1974 வரையில் காங்கிரசின் தலைமையை ஏற்று நடத்தினார். அப்போது இவர் ஆற்றிய பணி மிகவும் மகத்தானது.

இந்திய — ரஷ்ய உறவு பற்றிய நூல் ஒன்றையும் இவர் எழுதியுள்ளார். இவருடைய முன்னேற்றப் பாதைக்கு அது பெரிதும் உதவியது. துணை ஜனாதிபதி பதவிக்கு இவர் பெயர் சிபாரிசு செய்யப்பட்ட போது கூட, இவர் தம் மனைவியுடன் ரஷ்ய நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். பயணத்தைப் பாதியில் முடித்துக் கொண்டு திரும்பி வருமாறு திருப்பி அழைக்கப்பட்டார்.

1974ல் இரண்டு தடவை மத்திய அமைச்சர் பதவி இவரை நாடி வந்தது. பிரதமர் இந்திராஜி இவரை ராஜாங்க அமைச்சராக்க விரும்பினார். அதற்கு இவர் என்ன சொன்னார் தெரியுமா, குழந்தைகளே — 'காங்கிரஸ் தலைமைப் பதவியே மந்திரிப் பதவிக்கு நிகரானதுதான்' என்று கூறி மறுத்து விட்டார். எனினும், பிற்பாடு மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சராக மூன்று ஆண்டுகளுக்குப் பதவி வகித்தார். அப்போது, தொலை தூரக் கிராமப்புறத் தகவல் தொடர்புக்கான பல திட்டங்களைச் செயல்படுத்தினார்.

தலையில் காந்திக்குல்லாய். சாதாரண கதர் வேட்டி. சட்டை. காந்திஜியைத் தமது தந்தை ஸ்தானத்தில் நினைப்ப



சிறந்த பத்திரிகைக்கான, 'தினமலர்' விருதைப் பெற்ற 'கல்கி' ஆசிரியர் கி. ராஜேந்திரனுடன்.

வர். எளிய வாழ்க்கை. இவர் ஓர் எழுபது வயது இளைஞர். சுறுசுறுப்பானவர். முகத்தில் எப்போதும் ஓர் இளமைப் பொலிவு. கம்பீரமான தோற்றம்!


இதற்கெல்லாம் என்ன காரணம் தெரியுமா? இளமையில் இவர் ஒரு தலைசிறந்த விளையாட்டு வீரராகச் சிறந்து விளங்கியதுதான். இன்றும் கூட, நீச்சலடிப்பதில் இவருக்குத் தனி விருப்பம்.


இவர் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். சிறந்த எழுத்தாளர். இது வரையில் முப்பத்தைந்துக்கும் அதிகமான நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துள்ளார்.

இவரது மனைவி பெயர் விமலா. மத்தியப் பிரதேச சட்டமன்றத் தலைவியாக உள்ளார். அரசியலில் இவருக்குப் பக்கபலமாக இருந்து துணை புரிந்து வருகிறார்.

நம் நாட்டில் துணை ஜனாதிபதியாக இருந்த சிலர் பிற்பாடு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். அது போன்று, இன்றைய துணை ஜனாதிபதியாகிய திரு. எஸ். டி. சர்மாவும் நாளைய ஜனாதிபதியாக வரலாம். இல்லையா குழந்தைகளே!

ஓவியராகலாம்





மரத்தைப் போல நீ பயன் கொடு!

மண்ணில் மரங்கள் பல உண்டு — அதில்
மலர்களும் கனிகளும் மிக உண்டு!
உண்மையில் அவற்றால் பயன் உண்டு — நம்
ஊருக்கும் உலகுக்கும் மரம் நன்று!

வண்டிகள் செய்திடப் பயன்படுமே — நம்
வாழ்க்கைக்கு மரம் மிக முக்கியமே!
கண்களைப் போலே மரங்களையும் — நாம்
கவனமாய்க் காத்துப் பயன் பெறுவோம்

வீடுகள் கட்ட மரம் வேண்டும் — நிதம்
விறகுக்கும் மரங்கள் தான்வேண்டும்!
நாடுகள் செழிக்க வளங்கொழிக்க — நாம்
நாட்டம் கொண்டு மரம் வளர்ப்போம்'

பறவைக்கு வீடு மரமாகும் — அது
பயன் மிகத்தருமே எப்போதும்!
உறவுகள் கூடப் பகையாகும் — மரம்
ஒவ்வொன்றும் நமக்குத் துணையாகும்!

சாலையில் நமக்கு நிழல்தருமே — நல்ல
சந்தனம் இனிய மணம்தருமே!
பாலையில் மட்டுமே இருக்காது — மரம்
பயனைக் கொடுத்திட மறுக்காது!

கோழை மரங்களில் கிடையாது — என்றும்
கொடுஎன எதுவும் கேட்காது!
ஏழை செல்வர் பார்க்காது — மரம்
எவர்க்கும் சமமாய்ப் பயன்தருமே!

— புதுக்கோட்டை அழகுநிலவன்.

உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்



சிவ. வசந்த் (13,229)




இரா. சுமதி (17,578)




பெ. பிரகாஷ் (19.465)




U.A.B. திருமக செல்வி (13,331)


கபிலவாஸ்த்து நகரில் அரசி மாயாதேவி தூங்கும்போது....
சித்தார்த்தன்
கதை: ஆனந்தி
படம்: வினு
மறுநாள்...
தேவி! என்ன, ஒரே மகிழ்ச்சியாய் இருக்கிறாய்!
ஆறு தந்தங்களையுடைய வெள்ளை யானை வானிலிருந்து இறங்கி வந்து என் வயிற்றில் புகுவது போல் கனவு கண்டேன்!
அரசனும் அரசியும் அரண்மனைப் புரோகிதரை அழைத்து....
கனவுக்கு என்ன அர்த்தம்?
உங்களுக்குப் பின் நாடாளத் தேவனைப்போல் ஓர் இளவரசன் பிறக்கப் போகிறான்...!


நாட்கள் சென்றன... மாயாதேவி பிறந்தகம் செல்ல விரும்பினாள்....
போய்வா! மகளே! திரும்பி வா!
பல்லக்கு ஒரு வனத்தைக் கடந்த போது மாயாதேவி இளைப்பாற இறங்கினாள்....
அடடா! இந்த வனம் எவ்வளவு அழகு!
ஓர் மரத்தின் மறைவில் குழந்தை பிறந்தது!
அரசி! ஆண் குழந்தை!
குவா! குவா!
மரங்கள் பூக்களைச் சொரிந்தன; நாடு முழுவதும் குளிர் தென்றல் வீசியது...
ஆகாயத்தில் இரட்டை வானவில் தோன்றியது!
ஆ! என்ன அதிசயம்!
நந்நிமித்தம்!



நாட்டில் எல்லோர் மனத்திலும் அன்பு பெருகியது. அமைதி நிலவியது.
எனக்கு இன்று என்ன வந்து விட்டது? ஒரே உற்சாகமாய் இருக்கிறேனே!
ரிஷிகள் புரிந்து கொண்டார்கள்...
இன்று பௌர்ணமி புனித நாள்! அன்பும் அமைதியும் தழைக்க ஓர் அவதார புருஷர் பிறந்திருக்கிறார்!
வனத்தில் குழந்தையைத் தேவதைகள் பூஜித்தன....
அற்புதமான குழந்தை...
அரசர் ரொம்ப மகிழ்ச்சி அடைவார்...
மாயாதேவி குழந்தையுடன் திரும்பும் செய்தி அறிந்த மன்னன் சுத்தோதனன்...
நாடெங்கும் அலங்காரம் செய்யுங்கள்! ஏழைகளுக்கு உணவிடுங்கள்!
மாயாதேவிக்கும் வருங்கால மன்னனுக்கும் மாபெரும் வரவேற்பு...
மன்னர் வாழ்க!
மாயாதேவி வாழ்க!
இளவல் வாழ்க!


அரண்மனைப் பண்டிதர்கள் ஜாதகம் கணித்தார்கள்...
சித்தார்த்தன் உலகப் புகழ் பெறுவான்...
ஒரு நாள் ஆசிதர் மகரிஷி அரண்மனைக்கு வந்தார்...
நாட்டுக்கே வராமல் தவம் புரியும் தாங்கள் வந்தது என் பாக்கியம்.
சுத்தோதனரே! தங்கள் மகன் பிறந்தபோது ஏற்பட்ட நல் நிமித்தங்கள் அவனைத் தரிசிக்க என்னை அழைத்து வந்தன!
மாயாதேவியிடமிருந்து குழந்தையை ஆர்வத்தோடு பெற்றுக் கொண்டார் ஆசிதர்...
அவர் கண்களில் கண்ணீர் பெருகிற்று...
சுவாமி ஏன் கலங்குகிறீர்கள்?
இந்தக் குழந்தை பெரிய மகானாக வளரப் போகிறான். அதற்கு முன் என் காலம் முடிந்து விடுமே; இத்துறவி உபதேசிப்பதைக் கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்காதே என்றுதான் வருந்துகிறேன்!


ஆசிதர் விடை பெற்றுச் செல்ல...
என் மகனைத் துறவியாக விட மாட்டேன். இவனுக்கு எந்தத் துயரமும் தெரிய வராமல் வளர்ப்பேன்!
சித்தார்த்தனின் அன்னை மாயா இறந்துவிட, அவள் சகோதரி கௌதமியே சித்தார்த்தனை வளர்த்தாள்...
மிருகங்கள் இவனிடம் எவ்வளவு அன்பாய் இருக்கின்றன!
சித்தார்த்தன் எல்லாக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றான்....
ஆடலும் பாடலும் அவனை எப்போதும் சூழ்ந்திருந்தன....
ஒரு நாள் நந்தவனத்தில்...
ஆகா! அழகிய அன்னங்கள்!



சித்தார்த்தன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஓர் அன்னம் அம்பு பட்டு விழ...
ஐயோ!
ஓடிப்போய் அன்னத்தை எடுத்து...
நல்லவேளை, அம்பு ஆழமாகப் பதியவில்லை.... காயத்தை ஆற்றிவிடலாம்.
அதே அம்பினால் தன் கையில் குத்திக் கொண்டான் சித்தார்த்தன்...
ஆ! எனக்கு இவ்வளவு வலிக்கிறதே! அன்னத்துக்கு எப்படி இருக்கும்!
மைத்துனன் தேவதத்தன் வந்தான்...
அன்னத்தை அடித்தது நான். அது என்னுடையது...
தேவதத்தா! பறவையை ஏன் இப்படி துன்புறுத்தினாய்?
வில் வித்தை பயின்றேமே எதற்கு?
உயிரைப் பறிப்பது எளிது; உயிர் கொடுக்க உன்னால் முடியுமா? பிராணி வதை செய்யாதே!


அன்றுமுதல் சித்தார்த்தன் ஆடல்பாடலில் நாட்டம் இழந்தான்... சுத்தோதனர் கவலைப்பட... கௌதமி...
சித்தார்த்தனுக்குத் திருமணம் செய்தால் சரியாகிவிடுவான்.
வஸந்தோத்ஸவத்துக்குப் பல அரசகுமாரிகளை அழைத்தனர்....
இந்தா உனக்குப் பரிசு! இது உனக்கு!
கடைசியாக சுப்ரபுத்தர் என்ற அரசனின் குமாரி வந்தாள்...
அடேயப்பா! என்ன அழகு!
யசோதரா அவன் மௌனத்தைக் கலைத்தாள்.
எனக்குப் பரிசு கிடையாதா? எல்லாம் தீர்ந்து விட்டன போலிருக்கே....!
சித்தார்த்தன் தன் விரல் மோதிரத்தைக் கழற்றி...
இதோ!
சுத்தோதனரே! யசோதரா, சித்தார்த்தன் மனசைக் கவர்ந்து விட்டாள்!


சுப்ரபுத்தரிடம் சுத்தோதனரின் தூதர்கள் செல்ல...
என் மகள் வீர குலத்தில் பிறந்தவள்; வீரனுக்கே மாலையிடுவாள்...
வீர விளையாட்டுக்கு ஏற்பாடாயிற்று. தேவதத்தனின் அம்பு....
இலக்கின் மத்தியில் பாய்ந்தது! இதை விஞ்சும் வகையில் உன்னால் எப்படி அம்பு எய்ய முடியும்?
சித்தார்த்தன் முன் வந்து...
முயன்று பார்க்கிறேன்!
சித்தார்த்தன் அம்பு தேவ தத்தனின் அம்பைப் பிளந்தது! இலக்கின் பின்புறம் வெளியேறியது.
ஆ! அற்புதம்! என் மகளுக்கு ஏற்ற கணவன் கிடைத்து விட்டான்!
அதிசயம்!... சித்தார்த்தன் வாழ்க!


திருமணம் நடந்து முடிந்த பிறகு, மணமக்கள் இன்பமாய் வாழ.....
மகனே! மூன்று அழகு கொழிக்கும் மாளிகைகளை உங்களுக்காகக் கட்டி யிருக்கிறேன்!
யசோதரா! இத்தனை சந்தோஷத்திலும் என் மனம் அமைதி அடையவில்லையே!
ராஜகுமாரன் பிறந்தால் இப்படிப் பேச மாட்டீர்கள்!
குலம் விளங்க மகனை அடைந்தாள் யசோதரா. அனைவருக்கும் ஆனந்தம்....
இவனுக்கு ராகுலன் என்று பெயரிடுவோம்.
ஒரு நாள் சித்தார்த்தர்...
சுகபோகங்களிலேயே காலம் கழித்து வருகிறேனே? நகர மக்களைப் பார்க்க வேண்டாமா?
சுத்தோதனரும் மந்திரிகளும் நகரை அலங் கரிக்கச் செய்தனர்...
இளவரசர் நகர் வலம் வருகிறார்... வியாதியுள்ளவர், வயதானவர் எதிரே வரக் கூடாது! மீறினால் தண்டனை!



சித்தார்த்தர் நகர் வலம் வந்தார்...
சித்தார்த்தர் வாழ்க!
இளவல் வாழ்க!
வழியில் ஒரு கிழவன்...
ஏ, கிழவா! இளவரசர் உன்னைப் பார்க்கக் கூடாது! போ! போ!
நில்! விரட்டாதே!
இந்த மனிதன் ஏன் இப்படி வளைந்திருக்கிறான்? ஏன் உடல் சுருங்கியிருக்கிறது? பற்கள் எங்கே?
தேர்ப்பாகன் விளக்கினான்...
அவனுக்கு வயதாகிவிட்டது... மூப்பிலிருந்து யாரும் தப்ப முடியாது!
ஆ! நாமும் இப்படி ஆவோமா?
துயரத்துடன் அரண்மனை நந்தவனத்தில் உலாவினார் சித்தார்த்தர்...
உணவருந்த வாருங்கள்!
யசோதரா! உனக்கும் நரை, திரை, மூப்பு உண்டா?


அதைப்பற்றி இப்போதே என்ன கவலை?
அதுதான் முடிவு என்றால் இந்த இன்பங்களில் என்ன அர்த்தம்?
மறு நாள்...
நான் இன்றும் நகர மக்களைப் பார்க்கப் போகிறேன்... வேறு பக்கமாகப் போ!
மக்கள் மகிழ்ச்சியில் மிதந்தார்கள்... ஆனால் ஒருவன்...
ஐயோ! ஏன் இவன் இப்படி இருமுகிறான்? ஏன் நடுங்குகிறான்?
இவனுக்கு ஜுரம்...
வியாதி ஏன் வருகிறது?
கர்ம வினைதான்!
இரவு. சித்தார்த்தர் ஆழ்ந்த சிந்தனை வயப்பட்டார்...
கர்ம வினை என்றால் என்ன? வியாதி, மூப்பு எல்லாம் ஏன் வருகிறது?


மறுபடி நகர்வலம் போனபோது...
அவனை ஏன் படுக்க வைத்துத் தூக்கிப் போகிறார்கள்? எல்லோரும் அழுகிறார்களே, ஏன்?
தேர்ப்பாகன் விளக்கினான்...
அது இறுதி ஊர்வலம். உடலை எரியூட்ட எடுத்துப்போகிறார்கள்.
இதுதான் எல்லோருக்கும் முடிவா?
மரணத்திலிருந்து யாருமே தப்ப முடியாது...
அன்றிரவு...
யசோதரா, ராகுலா! உங்களைப் பிரிவது கஷ்டந்தான். ஆனால் வாழ்க்கையின் பயன் என்ன என்பதை நான் அறிந்து கொள்ள வேண்டும்... போய் வருகிறேன்....
மனைவியும் மகனும் தூங்கிக் கொண்டிருந்த போது அவர்களைப் பிரிந்த சித்தார்த்தர்...
கண்டகி! புறப்படு போகலாம்!



கண்டகி காட்டில் சித்தார்த்தரை விட்டு விட்டு....
நீ அரண்மனைக்குத் திரும்பு.
அராதர் என்ற முனிவரிடம் முதலில் பாடம் கேட்டார் சித்தார்த்தர். பிறகு...
...வேறு ரிஷிகளைச் சந்தித்தார்...
முனிவர்களே! ஏன் உடலை வருத்திக் கொள்கிறீர்கள்?
அவர்களைப் போலவே சித்தார்த்தரும் தவமிருந்தார்...
புலன்களை அடக்கி, ஜிதேந்திரியர் ஆனால், பிறகு சித்திகளை அடையலாம் என்றார்களே...
உடல் மெலிந்தது. சித்தார்த்தரால் நடக்கவும் முடியவில்லை...
உண்ணாமல், உறங்காமல் தவமிருந்து என்ன பலன்? ஒன்றுமில்லை.
காட்டின் அருகே இருந்த கிராமத்திலிருந்து சுள்ளி பொறுக்க வந்தாள் சுஜாதா...
பல நாள் பட்டினி போலும்! பார்க்கப் பரிதாபமாய் இருக்கிறது...


வீட்டுக்கு ஓடிப் போய்ப் பசும் பால் எடுத்து வந்தாள் சுஜாதா...
பூஜ்யரே! இந்தப் பாலை அருந்துங்கள்...
சித்தார்த்தருக்குக் கொஞ்சம் பலம் திரும்பியது..
உன் அன்பினால் நலமடைந்தேன். உனக்கு நன்மைகள் உண்டாகட்டும்...
சித்தார்த்தர் கயை என்ற இடத்தில் ஆற்றைக் கடந்து அரச மரத்தடியில் அமர்ந்தார்.
இன்று வைசாக பௌர்ணமி...
மாரா என்ற துர்த்தேவதை ஏவ, பல பூதங்களும் பிசாசுகளும் சித்தார்த்தரைச் சூழ்ந்து கூத்தாடின...
இதற்கெல்லாம் அஞ்சமாட்டேன்!



அழகிய பெண்கள் சித்தார்த்தரைச் சூழ்ந்து ஆடிப் பாட...
இதற்கும் அசைய மாட்டேன்!
பின்னர் நெடுநேரம் தியானத்தில் ஆழ்ந்தார்...
குளிர்ந்த ஒளி தமக்குள் பரவுவதை உணர்ந்தார். .. பூரண ஞானம் பெற்று, புத்த பகவான் ஆனார்.
காசி செல்லும் வழியில் ஸாரநாத் என்னுமிடத்தில் தமது முதல் உபதேசம் செய்தார்...
ஆசைதான் துன்பங்களுக்குக் காரணம். ஆசை ஒழிந்தால் சாந்தம் உண்டாகும். அகிம்சையே இன்பம்.
புத்தர் பாரதத்தின் பல நாடுகளுக்கும் சென்று உபதேசம் செய்தார்... சீடர்கள் சேர்ந்தனர்...



மகத நாட்டில்...
ஆடுகளை எங்கே ஓட்டிப் போகிறாய்?
யாகசாலையில் பலி கொடுக்கத்தான்...
யாகசாலையில் உபதேசித்தார்...
உயிர்க் கொலை வேண்டாம்! அஹிம்சையே சிறந்த தர்மம்.
ராஜகிருஹத்தின் மன்னன் பிம்பிசாரன்...
வரவேண்டும்! உங்கள் பெருமை அறிவேன். பாக்கியசாலியானேன்.
புத்தர் கபிலவாஸ்து திரும்பினர்... அவர் தந்தையும், மனைவியும் மகனும் அதிசயித்தனர்.
புத்தருடைய அன்புமதம் உலகெல்லாம் பரவியது...
புத்தம் சரணம் கச்சாமி! தர்மம் சரணம் கச்சாமி! சங்கம் சரணம் கச்சாமி!



டாமி! எங்கே,
அப், அப்,அப்!
ஒண்டர் புல்!
ஒண்டர் புல்!
இன்னொருதரம்
அப், அப், அப்!
டக்கர்!
டக்கர்!
ராஜாவோல்லியோ
இன்னொருதரம், அப்!
அடப்பாவி!
மாலா—

உப்பின் கதை

சாந்தா



நாம் அன்றாடம் நம் சமையலில் உபயோகப்படுத்தும் ஒரு பொருள் என்ன? எந்தச் சுவையில்லாத பண்டத்தைக் குப்பையில் போட வேண்டும் என்கிறார்கள்? எது அதிக அளவிலும் குறைந்த விலையிலும் எங்கும் கிடைப்பது? எது கிடைப்பதற்கு எளிதானாலும் மிக அத்தியாவசியமானது?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில்-உப்பு.

இந்த உப்பின் கதையோ சுவையானது.

கிரேக்க அறிஞர் ஹோமர் உப்பைப் 'புனிதமானது' என்றும், ப்ளேட்டோ, 'கடவுளுக்கு மிக விருப்பமானது' என்றும் வருணித்துள்ளனர்.

இங்கே நம் நாட்டில் உப்பு, 'லவணம்' என்ற பெயரில் மிகப் பழங் காலத்திலிருந்தே புழக்கத்தில் இருந்து வந்ததாக அறியப்படுகிறது.

ஆனால், பல நாடுகளில் உப்பைப் பற்றி வெகுகாலம் அறியாதிருந்திருக்கின்றனர் என்பதும் தெரிகிறது.

கிரேக்க நாட்டுக் கவி ஹோமர் எழுதிய ''ஒடிஸே'' என்ற இதிகாசத்தில், உப்பையே கண்டிராத ஓர் இனத்தைப் பற்றிய குறிப்பு இருக்கிறது.

அமெரிக்கக் கண்டத்தில்கூட, சில பழங்குடிகளுக்கு உப்பை முதல் முதலாக அறிமுகப்படுத்தியது ஆங்கிலக் குடிமக்கள்தான்!

ஏன், நம் நாட்டிலேயே, தோடர்கள் என்ற பழங்குடியினர், கடந்த நூற்றாண்டுகளில்தான் உப்பைப் பற்றி அறிந்து கொண்டனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

இப்போது நாமெல்லாம் வெகு சகஜமாக உபயோகப்படுத்தும் உப்பு, சிறிது காலம் முன்பு வரை மத்திய ஆப்பிரிக்க நாடுகளில் மிக அரிய பண்டமாயிருந்ததாம்!

மெக்ஸிகர்கள் உப்பின் தேவதையாகக் கருதும் 'உயிக்தோசியுவாதி'யை கௌரவிக்கும் வகையில், ஆண்டுக்கு ஒரு முறை பண்டிகை கொண்டாடி மகிழ்கின்றனர்.

அந்த உப்புத் தேவதையைப் பற்றி ஒரு வேடிக்கையான கதை: முன் காலத்தில் அவள் வருணபகவானின் தங்கையாகப் பிறந்தாளாம். ஆனால், அவர்களிடம் கோபித்துக் கொண்டு கடலரசனை வந்தடைந்தாளாம். அதனால்தான் கடல் உப்புக் கரிக்கிறதாம். கடலிலிருந்து உப்பைப் பிரித்தெடுக்கும் ரகசியத்தை அவள் சொன்னதால், அவளைக் கௌரவிப்பதற்காகப் பண்டிகை கொண்டாடப்படுகிறதாம். இது கர்ண பரம்பரைக் கதை.



முற்காலத்தில் பணக்காரர்கள் மட்டுமே அனுபவிக்கத் தக்க ஓர் அரிய பொருளாயிருந்த உப்பு, காலப் போக்கில், அன்றாடச் சமையலுக்கு உபயோகப்படும் அத்தியாவசியப் பொருளாகி விட்டது. உப்பில்லாத சமையலை நம்மால் இப்போது நினைத்துப் பார்க்க முடியுமா?

வெகு காலத்திற்கு முன் பாறைகளில் படிந்துவரும் உப்பை உபயோகப்படுத்தினர். இன்னும் சில நாடுகளில், சிலவகை உப்புத் தன்மையுள்ள தாவரங்களை எரித்து உருவாக்கிய சாம்பலைக்கூட உபயோகித்து வந்தனர். பிறகு, உப்பளங்கள் கட்டி, உப்பு நீரைக் காய்ச்சித் தட்டுகளில் பிரித்தெடுக்கும் முறை தெரிந்தவுடன், உப்புக் கிடைப்பது எளிதாகி விட்டது.

இதைத் தொடர்ந்து கடற்கரைகளிலிருந்து உள்நாடுகளுக்கு உப்பைக் கொண்டு செல்வதற்கான பாதைகள் உருவாயின. உப்பு வாணிபமும் பல்கிப் பெருகலாயிற்று.

உப்பு மிகப் பரவலாக உபயோகப்படுத்தப்பட ஆரம்பித்த பின், சந்தைகளில், கடைகளில் எங்கும் கிடைக்கும் ஒரு சாதாரணப் பண்டமாகி விட்டது.

அது மாத்திரமா? மேலை நாடுகளில், பண்டமாற்று வியாபார முறையில் ஒரு முக்கிய பொருளாகவும் உப்பு கருதப்பட ஆரம்பித்தது.





இத்தாலி நாட்டில் 'ஸலேரியா' என்னும் நகரின் வழியாக உப்பு வாணிபம் பெருகத் தொடங்கியது. மத்திய தரைக் கடலை ஒட்டியிருந்த பல துறைமுகங்களிலிருந்து கிளம்பும் கப்பல்களில் உப்பு மூட்டைகள் இல்லாதிருந்ததே இல்லை என்னும் நிலைமையும் உருவாயிற்று என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

இந்தியாவில் உப்புச் சுரங்கங்களிலிருந்து உப்பு கிடைத்து வந்தது. மாவீரன் அலெக்ஸாந்தர் காலத்திலேயே, பஞ்சாப் மாநிலத்திலிருந்த உப்புச் சுரங்கங்களில் பல்லாயிரக் கணக்கானோர் வேலை செய்து வந்தனர் என்று சரித்திரம் உரைக்கிறது.

ஆங்கிலத்தில் ''ஸாலரி'' என்ற சொல்லுக்குப் பின்னால் ஒரு சுவையான கதை. முற்காலத்தில் ரோமானியப் படை வீரர்களுக்கு ஊதியமாக, மாதா மாதம் அவர்களுக்குத் தேவையான பண்டங்கள் வழங்கப்பட்டன. இதில், உப்பும் சில தானியங்களும் அடக்கம். உப்புக்கு லத்தீனில் ''ஸலேரியம்'' என்று பெயர். காலப் போக்கில், பண்டங்களுக்குப் பதிலாகப் பணம் வழங்கும் முறை தோன்றினாலும், ஊதியத்துக்கு ''ஸலேரியம்'' அதாவது ''உப்பு — ஊதியம்'' என்ற சொல்லே புழக்கத்திற்கு வந்து நிலைத்தும் விட்டது. 'ஸாலரி' என்னும் சொல் 'ஸலேரியம்' என்பதிலிருந்து தோன்றியதுதான்.

உப்பைப் பற்றிய சில மூட நம்பிக்கைகள் இன்னமும் பல நாடுகளில் இருக்கின்றன.

இங்கிலாந்து, ஹாலந்து, ருசியா போன்ற நாடுகளில், உப்பைக் கீழே சிந்துவது தீமையைத் தரும் என்பது நம்பிக்கை.

இன்னும் சில நாடுகளில், மரித்தவர்களைப் புதைப்பதற்கோ எரிப்பதற்கோ செய்யப்படும் சடங்குகளில் உப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இறந்தவர்களின் ஆன்மாவைத் தீய சக்திகளிடமிருந்து காப்பாற்றப் பயன்படுவது உப்பே என்பது அம் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை!



நம் நாட்டில் கூட, வட இந்தியாவில் ஒரு வேடிக்கையான நம்பிக்கை. தித்திப்பான பாலைச் சாப்பிட்டு விட்டுக் குழந்தைகள் வெளியே சென்றால், இனிப்பில் ஆசை கொண்ட தீய — ஆவிகள் அவர்களைத் தொடரும் என்று சில தாய்மார்கள் நம்புகின்றனர். எனவே, இனிப்புப் பண்டங்களுக்குப் பிறகு சிறிது உப்பைச் சாப்பிட்டு விட்டே வெளியே செல்ல அனுமதிக்கின்றனர்!

மலேயாவில், பிறந்த குழந்தைக்கு முதல் முதலாக அளிக்கப்படுவது உப்புதான்! குழந்தைகளின் வாயைத் திறப்பது உப்புதான் என்பது அவர்களது நம்பிக்கை.

ஸயாம் நாட்டில், குழந்தைகள் பிறந்தவுடன், தாயும் சேயும் உப்புத் தண்ணீரில் நீராடுகின்றனர். இது பில்லி சூனியம் போன்றவைகளிலிருந்து அவர்களைக் காப்பதாக நம்புகின்றனர்.

முற்காலத்தில் உப்பு புனிதமாகக் கருதப்பட்டதால், சபதம் எடுக்கும் போது ஒரு கையில் உப்பை வைத்துக் கொண்டே பிரதிக்ஞைகள் செய்தனர்!

நம் நாட்டுப் பாட்டி வைத்தியம் போன்ற சிகிச்சை முறைகளில் உப்பு மிகப் பிரதானமான பண்டமாயிருந்தது. இதற்குக் காரணம், உப்பு மிகச் சிறந்த கிருமிநாசினி. நோய் எதிர்ப்புச் சக்தியும் அதற்கு உண்டு என்பதால்தான்!

பல நாடுகளில், உப்பு, மனிதர்களின் வாழ்க்கையில் மிகப் பெரிய முக்கியத்துவம் பெற்று விட்டது.

அரபு நாடுகளில் உப்பை உயர்ந்த எண்ணங்கள், நம்பிக்கை போன்றவைகளுடன் சம்பந்தப்படுத்திப் பேசி வந்தனர்.

நம் நாட்டில் கூட, 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்று செய்நன்றியறிதலுடன் சம்பந்தப்படுத்திப் பேசுகிறோம் அல்லவா?

முற்காலத்தில் உப்பு மிக அரிய பண்டமாயிருந்ததால், விருந்தோம்பலில் உப்புப் பண்டங்கள் சிறப்பானதாகக் கருதப்பட்டன.



ஓர் ஆப்பிரிக்க நாட்டின் ஒரு பகுதியில் ஜமீன்தார்களும் அவர்களுடைய பணியாளர்களும் ஒன்றாக அமர்ந்து உணவு உட்கொள்ளும் பழக்கம் இருந்தது. எனவே, அவர்களிடையே பேதம் காண்பிக்க ஓர் உப்புக் கிண்ணம் நடுவில் வைக்கப்படும். உப்புக் கிண்ணத்திற்கு ஒரு புறம் அமர்ந்திருப்பவர்கள் (உப்பிற்கு) 'மேலோர்கள்' என்றும், மறுபுறம் அமர்ந்திருக்கும் பணியாளர்கள் (உப்பிற்கு) 'கீழோர்கள்' என்றும் வித்தியாசப்படுத்துவது வழக்கம்!


உப்பு நல்லெண்ணங்களின் சின்னமும் கூட.

இரு நாடுகள் நட்புறவுடன் இருக்கும் வரையில் உப்பு வாணிபம் அந்த இரு நாடுகளுக்கிடையில் நடை




பெறும். பகை மூண்டு போர் தொடங்கினாலோ, பகை நாட்டிற்கு அனுப்பப்படும் உப்புதான் முதல் வேலையாகத் தடை செய்யப்படும். இதனால் பகையுணர்வும் பகிரங்கமாக அறிவிக்கப்படும்!

மெக்ஸிகோ நாட்டில் உள்நாட்டுக் கலவரங்கள் நடப்பது சகஜம். அப்படி ஓர் உள்நாட்டுக்கலவரம் ஏற்பட்டு, புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் பிறப்பிக்கும் முதல் ஆணையில், எதிர்க் கட்சியில் கலவரம் செய்தவர்களுக்கு உப்பு அளிக்கப்படும் உரிமை பறிக்கப்படும்!



இதைப் போலவே, ஹாலந்து தேசத்தில் ஒரு முறை கைதிகளுக்கு உப்பு மறுக்கப்பட்டது.

நம் நாட்டில், அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்திய மகாத்மாவும், ராஜாஜியும் பல தேச பக்தர்களை வழி நடத்திச் சென்ற 'உப்புச் சத்தியாகிரகம்' என்ற உத்தியின் மூலமாக ஆங்கிலேயர்களைக் கண்டித்ததை நம்மால் மறக்க முடியுமா?




இப்படிப் பல தேசங்களில் பல விதங்களில் முக்கியத்துவம் பெற்றுவிட்ட பெருமை உப்பையே சாரும்.

அடுத்த முறை நீங்கள் கடைக்கு உப்பு வாங்கச் சென்றால், அந்தச் சாதாரண உப்பின் மகத்துவத்தை ஒரு கணம் எண்ணிப் பார்த்து வியப்படைவீர்கள் அல்லவா?

பறவைகள் பல விதம்!

விமலன்




ஹம்மிங் பேர்ட் ஒரு விநாடிக்கு 80 தடவை இறக்கைகளை அடித்து ஒரே இடத்தில் நிலையாக நிற்கும் தன்மை பெற்றது.




ஆண்டியன் காண்டார் என்ற கழுகு வகைதான் பறவை இனங்களில் அதிக ஆண்டு-கள் உயிர்வாழுமாம்.



ஸ்பீன்வால் ஸ்விப்ட் என்னும் பறவை மணிக்கு 171 கி.மீ. வேகத்தில் பறக்கும் திறன் கொண்டது.



தேன்சிட்டு என்ற குருவி மற்ற பறவைகள் பாடுவதுபோல் பாடுவதில் மிகவும் திறன் உள்ளதாம்.



நீண்ட கழுத்தும், நீண்ட காலும் உடைய பிளாமிங்கோ என்ற பறவையினம் வெப்ப நாடுகளில் வசிக்கும். ஒற்றைக் காலில் நின்று கழுத்தை மடித்து முதுகில் தலை வைத்துக் கொண்டு தூங்குமாம்.

பிறந்த நாள்

லென்ஸ்



"அம்மா, 'பர்த்டே' பார்ட்டின்னு என்னும்மா?" ஆச்சரியக் கண்களை அகல விரித்துக் கொண்டே, வீட்டினுள் நுழைந்தான் தங்கவேலு.

ஈர வறட்டியிலிருந்து புகையை எப்படிப் பிரிப்பது என்று நொந்து கொண்டிருந்த நாச்சம்மாள், "அது என்னவோ யார் கண்டா? பிறந்த நாள் கொண்டாட்டமாக் கூட இருக்கலாம். அதுக்கு என்ன இப்போ?"

"ஒண்ணுமில்லையம்மா... ம்... எனக்கு எப்போ பிறந்த நாள் வரும்?"

"உங்க அப்பனைக் கேளு. எனக்கு இந்த அகராதியெல்லாம் புரியாது." என்று வேலையில் ஈடுபட்டாள் நாச்சம்மாள்.

"அம்மா!... எங்க ஸ்கூல் பசங்க பிறந்த நாள்னு வீட்டிலே 'கேக்' வெட்டுவாங்களாம். நாம ஏம்மா.........?" தங்கவேலு பேசி முடிப்பதற்குள் நாச்சியப்பன் உள்ளே நுழைந்தான்.

"ஆமா! பெரிய துரை வீட்டுப் பிள்ளை! ஏழு ஏக்கர் ஏர் கட்டி உழுது, விளையுது! கம்பஞ் சோத்துக்கு வழியைக் காணும், கப்பல் கட்டுறானாம். டேய், துரைங்க பழக்கம் நமக்கெல்லாம் சரிப்பட்டு வராது. என்ன?" அப்பா போட்ட அதட்டலில் தங்கவேலு அரண்டு போனான்.

"இல்லேப்பா!" என்று அந்தப் பக்கம் நழுவினான்.


இதற்கெல்லாம் காரணம் இல்லாமல் போகவில்லை. மறுநாள் சுரேஷ் வீட்டில் பிறந்த நாள் பார்ட்டியாம். சுரேஷ், தங்கவேலுவை வலுக்கட்டாயமாக அழைத்திருந்தான்.

சுரேஷ் பார்ட்டியைப் பற்றிக் கனாக் கண்ட தங்கவேலுவுக்கு, 'நாமும் ஏன் அப்படிக் கொண்டாடக் கூடாது' என்று தோன்றியது.

வீட்டில் நுழைந்தவுடன், கேட்டு வாங்கிக் கட்டிக் கொண்டான் — தகப்பனிடம்.

சுரேஷின் பிறந்த நாள் விருந்துக்குப் போய் விட்டு வந்த தங்கவேலுவுக்கு மனசில் என்னவோ குடைந்தது.

அன்று முழுவதும் அவனுக்கு இதே நினைவுதான்.



நல்ல பெயர்

''பத்திரிகை உலகில் புதிதாக நான் ஆரம்பிக்கப் போகும் உன் மாதிரிக் குழந்தைகளுக்கான பத்திரிகைக்கு ஒரு நல்ல பெயர் சொல்லு தம்பி!''

''குவா... குவா!''

— எஸ். மீனலோசனி.

''பர்த்டே பார்ட்டி..... கோலாகலம்.....'' இவைதான் அப்போதைக்கு அவனுடைய ஏக்கக் கனவுகள்.

''எப்படியாவது எல்லாருக்கும் இனிப்பாவது கொடுக்கணும்.''

''ஆனால் காசு?.....''

தங்கவேலு தடுமாறிக் கொண்டிருந்தான்.

சுமார் ஒரே வாரத்தில் ஆசிரியர் நல்ல தம்பிக்கு ''தங்கவேலுவின் தடுமாற்றம்'' புரிந்து விட்டது.

''என்னடா? மென்று முழுங்கிறே? என்னாச்சு உனக்கு? வீட்டிலே ஏதாவது தகராறு?'' என்று விஷயத்தை உடைத்துக் கேட்டதும் தங்கவேலு தயங்கித் தயங்கி விஷயத்தை வெளியிட்டான்.

''அட பைத்தியமே! பிறந்த நாளை நினைச்சு எல்லாரும் சிரித்துக் கொண்டு இருப்பாங்க நீ என்னடான்னா, விசனப்பட்டுக்கிட்டு....''

''சார்! பையன்களுக்கு இனிப்பாவது தரணும்னு எனக்குத் தோணுது சார்......

''ஆசைப்பட்டால் தாசில் பண்ண முடியுமா? இனிப்பு வழங்கினாத்தான் பிறந்த நாளா? எதுக்கு இன்னும் இந்தப் போலித்தனத்தை நாம் வளர்க்கணும்?'' என்று நல்லதம்பி பொரிந்து தள்ளினார்.

''இல்லே சார்! இருந்தாலும், ஆசைப்பட்டால் தப்பா சார்! மன்னிச்சிடுங்க'' என்றான் தங்கவேலு.

''தங்கவேலு! பிறந்த நாளை நாம் எப்படி வேணும்னாலும் கொண்டாடலாம். எல்லாருக்கும் இனிப்புக் கொடுத்துட்டு மனசுல கசப்போட உட்கார முடியுமா? எல்லாருக்கும் விருந்து கொடுத்துட்டு அடுத்த வேளைக்கு ஆருடம் பார்க்கலாமா.........'' என்று பேசிக் கொண்டே வந்தவர் சற்று நிறுத்தி விட்டு, கண்களில் பிரகாசத்துடன் அவனிடம் கேட்டார்.

''தங்கவேலு! பிறந்த நாள் இனிப்பு வழங்குவது உன்னைப் பற்றி மற்றவர்களுக்குத் தெரியணும்னு தானே?......''

''ம்''

''அதை விட இன்னும் பலருக்குத் தெரிய வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கு''

''புரியலையே சார்.....''

நல்லதம்பி சார், தங்கவேலுவின் காதுகளில் என்னவோ கிசுகிசுத்தார்.

தங்கவேலுவும் அதைப் புரிந்து கொண்டு பலமாகத் தலையாட்டினான்.

''அம்மா, நாளைக்கு என் பிறந்த நாள் அம்மா!''

''ஏண்டா டேய்! அன்னிக்கே உன் அப்பங்கிட்ட வசவு வாங்கிக் கட்டிக்கினியே! அதை இன்னும் மறக்கலியா?'' என்று அதிர்ந்தாள் அம்மா.


''இல்லேம்மா! நாளைக்குப் பிறந்த நாளை முன்னிட்டு நம்ம ஊர்க்கோவிலின் மதிலுக்கு வெள்ளையடிக்கப் போகிறேன். அடுத்த வருஷம் பிறந்த நாளில் தபாலாபீஸில் விலாசம், கடிதம், மணியார்டர் எழுதித் தரப் போகிறேன். அதற்கடுத்த வருஷம்.... முதியோர் கல்வி'' என்று தங்கவேலு அடுக்கிக் கொண்டே போன வேகத்தில், நாச்சம்மாளுக்குத் தன்முன்னே நிற்பது தன் மகனா, இல்லை வளர்ந்து வரும் ஒரு இலட்சிய புருஷனா என்ற சந்தேகம் தோன்றியிருக்குமோ என்னவோ!

அவனைப்பார்த்து முறுவலித்தவள், ''மவராசனா இருப்பா. ஊரில் நல்ல பேரு வாங்குப்பா'' என்று நெட்டி முறித்தாள்.

இனிப்பில் கிடைக்காத சந்தோஷத்தை அடைந்ததாகவே நினைத்து மகிழ்ந்தான் தங்கவேலு.

சித்திரப் புதிர்! 27


ஆழி ———



1 இது உங்களுக்குத் தெரிந்த பிராணிதான். ஆனால் புது மாதிரித் தோற்றத்தில் வரையப்பட்டிருக்கிறது. என்ன பிராணி இது?



2 இதற்குப் பிடிக்காத நிறம் — — —



3 தேசப்படத்தில் இந்த அடையாளம் இருந்தால், அங்கே என்ன பொருள் கிடைக்கும்?



4 பூர்த்தி செய்யுங்கள்: இதற்கு ____ கிடையாது.




5 இவர் என்ன விளையாட்டில் ஈடுபட்டிருக்கிறார்?

விடை: வேறு பக்கம்

சீன தேசத்துக் கதை

மாயக் குகை



சிங்க்சா ஓர் ஆடு மேய்க்கும் சிறுவன். அவனுக்கு அப்பாவும் இல்லை; அம்மாவும் இல்லை. பாட்டிதான் அவனை வளர்த்து வந்தாள்.

ஒரு நாள் மாலை நேரம். சிங்க்சா வழக்கம் போல் தன்னுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அப்போது,

'கல்லால் ஆன கதவே,
கருணை செய்து திறவே!'

என்று ஒரு குரல் கேட்டது.

திடீரென்று எழும்பிய அந்தக் குரலைக் கேட்டதும், சிங்க்சா திடுக்கிட்டான். சுற்று முற்றும் பார்த்தான். சிறிது தூரத்தில் ஒரு மலைப் பாறையின் எதிரே ஒரு கிழவன் நின்று கொண்டிருப்பதைக் கண்டான்.

அந்தக் கிழவன் மறுமுறையும் அதே பாட்டைப் பாடினான். மூன்றாவது முறை அவன் பாடியதும், அந்த மலைப்பாறை — பாறைக் கதவு — 'கரகர' என்ற சப்தத்துடன் திறந்து கொண்டது.

இதையெல்லாம் மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த சிங்க்சாவுக்கு ஒரே ஆச்சரியம்! மறுபடியும் என்ன நடக்கப் போகிறதோ என்று காத்திருந்தான்.

அரை மணி நேரம் சென்றது. அந்தக் கிழவன் மெதுவாக வெளியே வந்தான்.

'கல்லால் ஆன கதவே,
கதவை நன்றாய் மூடு.'

என்றுமூன்றுமுறைபாடினான். உடனே பாறைக் கதவு மூடிக் கொண்டது. கிழவனும் போய்விட்டான். அவன் தலை மறைந்ததும், மலைப்பாறையிடம் ஓடினான், சிங்க்சா.

'கல்லால் ஆன கதவே,
கருணை செய்து திறவே!'

என்று அந்தக் கிழவன் பாடியதைப் போல மூன்று முறை பாடினான். என்ன ஆச்சரியம்! அவன் எதிர் பார்த்தது போலவே பாறைக் கதவு திறந்து கொண்டது!

சிங்க்சா வெளியே மேய்ந்துகொண்டிருந்த தன் ஆடுகளை மறந்தான். குகைக்குள் தைரியமாக நுழைந்து நடந்தான்.

உள்ளே வரிசையாக ஏழு பாறைகள் இருந்தன. ஒவ்வொரு பாறையாக சிங்க்சா பார்த்துக் கொண்டே வந்தான். அந்தப் பாறைகளில் விசேஷமாக ஒன்றையும் காணோம்!

சிங்க்சா உதட்டைப் பிதுக்கினான். "ம்... இந்தக் கல் பாறைகளைப் பார்ப்பதற்குத்தானா இதற்குள் வந்தேன்!" என்று அலுத்துக் கொண்டான்.

அதே சமயம் அவனுக்கு ஒரு சந்தேகமும் தோன்றியது.

"வெறும் பாறைகளைப் பார்க்கவா அந்தக் கிழவன் வந்திருப்பான்! இருக்கவே இருக்காது. ஏதாவது அங்கே அதிசயம் இருக்க வேண்டும். நிச்சயம் இருக்கத்தான் வேண்டும்." என்று எண்ணினான்.

ஆறு பாறைகளையும் பார்த்துவிட்டு, ஏழாவது பாறையின் அருகே வந்தான். அந்தப் பாறையையும் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். அப்போது அவனுடைய பாதங்கள் மெத்தை போல மிருதுவாக இருந்த ஒரு கல்லில் பட்டன.

அதே சமயம், ஏழாவது பாறை சுற்ற ஆரம்பித்தது! முதலில் மெதுவாகச் சுற்றியது! பிறகு, 'கரகர' வென்று வேகமாகச் சுழன்றது!

அதையே கவனித்துக் கொண்டிருந்த சிங்க்சாவுக்கு மயக்கம் வரும் போலிருந்தது. ஆனால், சுழன்று கொண்டிருந்த அந்தப் பாறை திடீரென்று பூமியில் புதைந்து மறைந்து கொண்டது.

உடனே, அந்த இடத்தைப் பார்த்தான் சிங்க்சா. அங்கே ஒரு பெரிய துவாரம் காணப்பட்டது. அதன் வழியாகப் படிகள் கூடத் தெரிந்தது. சிங்க்சா கொஞ்சம்கூட யோசிக்கவில்லை. துவாரத்தில் இறங்கினான்; படிகளில் நடக்க ஆரம்பித்தான்.

வளைந்து வளைந்து சென்ற அந்தப்



படிகளின் வழியாக அவன் வேகமாக நடந்தான்.

கடைசியில் ஒரு பெரிய மரக் கதவின் எதிரே வந்து நின்றான். அந்தக் கதவு மூடப்பட்டிருந்தது. அதில் கைப்பிடியையோ பூட்டையோ காணோம்!

சிங்க்சா யோசித்தான். மலைப் பாறையின் எதிரே பாடியதைப் போல இப்போதும் பாடினால் என்ன என்று நினைத்தான். உடனே,

'மரத்தால் ஆன கதவே,
மனது இரங்கித் திறவே'

என்று பாடினான். மூன்று தடவைகள் பாடினான். கதவும் திறந்து கொண்டது!

திறந்ததுதான் தாமதம். பளிச் சென்று பிரகாசமான ஒரு வெளிச்சம் தெரிந்தது. அந்த வெளிச்சம் சிங்க்சாவைத் திடுக்கிட வைத்தது; அவன் கண்களைக் கூச வைத்தது.

சிங்க்சா இதற்கு முன் அந்த மாதிரியான வெளிச்சத்தைக் கண்டதே இல்லை. அப்போது, அங்கிருந்த சுவரில் இரத்தினங்கள் மினுமினுத்தன; வைரங்கள் பளபளத்தன; அற்புதமான, அழகான வர்ணப் படங்கள் கண்ணைக் கவர்ந்தன.

அதுமட்டுமா? அந்தப் பிரகாசமான ஒளியில் பற்பல வர்ணங்கள் மாறி மாறித் தெரிந்தன. ஒவ்வொரு வர்ணத்திலும், மனத்தை மயக்கும் அழகிய படங்களை அவன் கண்டான்.

இதோ அந்த ஒளி சிவப்பாக மாறிவிட்டதே! அதிலே, ஒரு சீனச் சிறுமி அழகான ஒரு குடையைப் பிடித்துக் கொண்டு ஒய்யாரமாக நடந்து வரும் காட்சி நன்றாகத் தெரிகிறது!

இதோ பச்சை நிறம்! அதிலே ஓர் இயற்கைக் காட்சி! தெளிவாக ஓடும் ஆற்றிலே ஒரு படகு. அந்தப் படகிலே ஒரு வீடு. ஒரு தம்பியும், தங்கையும் படகில் உட்கார்ந்து கொண்டு ஆனந்தமாகப் பாடிக் கொண்டே செல்கிறார்கள். ஆற்று நீருக்கு மேலே நட்சத்திரங்களைப் போலத் துள்ளித் துள்ளிக் குதிக்கின்றன, அழகான மீன்கள்.

இதோ மஞ்சள் நிறம்! மஞ்சள் மணல் நிறைந்த ஓர் ஆற்றங்கரை. அங்கே ஒரு புத்தர் கோயில். ஏராளமான மக்கள் அங்கே மௌனமாக நின்று கடவுளை வேண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இதோ நீலம்! படர்ந்த மேகக் கூட்டத்தில் ஒரு வளைந்த வான வில். அற்புதமான காட்சி!

எத்தனையோ இதைப் போலக் காட்சிகள்!

சிலையாக நின்ற சிங்க்சா மெதுவாக நகர்ந்தான். குகைக்குள் கொஞ்ச நேரம் சுற்றினான். கடைசியில் ஓர் அழகான பூஞ்சோலையை அடைந்தான்.

அந்தப்பூஞ்சோலையில்பற்பலநிறங்களில், கண்ணைக் கவரும் அழகிய மலர்களைக் கண்டான். அங்கும் இங்கும் பறந்தோடும் அற்புதமான பறவைகளைப் பார்த்தான். இனிமையாகப் பாடும் குயிலைப் பார்த்தான். அழகாக ஆடும் மயிலைப் பார்த்தான்; இன்னும் எத்தனை எத்தனையோ அவன் கண்டிராத அதிசயங்களையெல்லாம் கண்டான்.

வெகுநேரம் இப்படியே கழித்தான். கடைசியில் அவனுக்குப் பசி தோன்றிவிட்டது. உடனே வீட்டு ஞாபகம் வந்தது. தனது ஆடுகளின்




ஏன் தேய்க்கிறாய்?

இவன்: ஏன்டா இப்படிக் கழுதையை விடாம தேய்ச்சுக்கிட்டே இருக்கே?

அவன்: கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பு ஆகும்னு நீதானே சொன்னே? அதான் கழுதை கட்டெறும்பு ஆகுதான்னு பார்க்கிறேன்.

— கடலூர் கன்னியப்பன்.



ஞாபகமும் வந்து விட்டது. உடனே படிகளையும், குகையையும், கடந்து வேகமாக வெளியே ஓடிவந்தான். 'கல்லால் ஆன கதவே, கதவை நன்றாய் மூடு' என்று மூன்று முறை பாடினான். உடனே, பாறைக் கதவு மூடிக் கொண்டது. அவனது ஆடுகள் அந்த இடத்திலேயே பத்திரமாக மேய்ந்து கொண்டிருந்தன. சிங்க்சா அவைகளை ஓட்டிக் கொண்டு, தன் குடிசையை நோக்கி நடந்தான்.

இரவு சாப்பாடு முடிந்தது. சிங்க்சா தான் கண்ட அதிசயங்களைத் தன் பாட்டியிடம் கதை கதையாகச் சொன்னான். அதையெல்லாம் கேட்கக் கேட்கப் பாட்டிக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது!

அவள் ஆச்சரியப்படுவதைக் கண்டதும், ''பாட்டி, நாளைக்கு நீயும் என்னுடன் வா. குகைக்குள்ளே உன்னை அழைத்துப் போகிறேன். நேரிலே எல்லாவற்றையும் பார்க்கலாம்'' என்றான்.


பாட்டி தயங்கினாள். ஆனால், சிங்க்சா தைரியம் கூறினான்.

மறுநாள் விடிந்ததும், பாட்டியை அழைத்துக் கொண்டு நேராகக் குடிசைக்குச் சென்றான். பாட்டைப் பாடி, பாறைக் கதவைத் திறக்க வைத்தான். பிறகு, பாட்டியை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

பாட்டி அங்குள்ள அதிசயங்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டே வந்தாள். 'பாட்டி, இதோ பார், அழகான படத்தை!' 'பாட்டி இங்கே பார், அற்புதமான தோட்டத்தை!'' 'இதோ பாரேன், அதிசயப் பூக்களை!'' என்று பலவிதமாகக் கூறிக் கொண்டே முன்னால் நடந்தான், சிங்க்சா.

பாட்டி பின்னால்தான் வருகிறாள் என்று அவன் நினைத்தான். ஆனால், கொஞ்ச தூரம் சென்று அவன் திரும்பிப் பார்க்கையில், பாட்டியைக் காணோம்!

''பாட்டி! பாட்டி!'' என்று கத்தினான். சுற்றும் முற்றும் பார்த்தான். குகை முழுவதும் தேடினான். காண



வில்லை! 'திரும்பிக் குடிசைக்கே போய் விட்டாளோ!' என்று நினைத்துக் குகைக்கு வெளியே ஓடிவந்தான். நேராகக் குடிசையை நோக்கிப் பறந்தான். அங்கேயும், பாட்டியைக் காணோம்!

மறுபடியும் வேகமாகக் குகையை நோக்கி ஓடிவந்தான். ஆனால், அப்போது பாறைக் கதவு நன்றாக மூடப்பட்டிருந்தது. கதவைத் திறப்பதற்கு, அவன் பழைய பாட்டைப் பாடினான். மூன்று முறை பாடியும் கதவு திறக்கவில்லை! கைகளால் ஓங்கி அடித்தான்; கால்களால் பலமாக உதைத்தான்.

கடைசியில் ஒரு வழியாகக் கதவு திறந்து கொண்டது. உடனே, வேகமாக உள்ளே நுழையப் பார்த்தான், சிங்க்சா. ஆனால் குகை வாசலில் நின்று கொண்டிருந்தான், ஒரு கிழவன். முன்பு சிங்க்சா பார்த்தானே, அதே கிழவன்தான்!

''தம்பீ! உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டான், அந்தக் கிழவன்.

''நான் உள்ளே செல்ல வேண்டும்.''

''ஏன்? நீ எதற்காக உள்ளே செல்ல வேண்டும்?''

''நான் என் பாட்டியை உள்ளேயே விட்டு விட்டேன். அவளை அழைத்துப் போக வேண்டும்.''

''ஓ! அப்படியானால், நீ இதற்கு முன்பு கூட இங்கே வந்திருக்கிறாயோ?''

''ஆமாம்! நான் ஒரு குறும்பும் செய்யவில்லை. மாயக் குகையையும், தோட்டத்தின் அழகையும் பார்த்தேன். பிறகு, என் பாட்டியையும் அழைத்து வந்தேன். அவளை உள்ளேயே விட்டு விட்டேன். அழைத்துக் கொண்டு போக வேண்டும்'' என்றான், சிங்க்சா, தட்டுத்தடுமாறிக்கொண்டே.

அதைக் கேட்டதும், அந்தக் கிழவன், ''நான் யார் தெரியுமா? நான்தான் இந்தக் குகையின் சொந்தக்காரன். நான் ஒரு பெரிய மந்திரவாதி. உன் பாட்டியை நான் வீட்டிற்கு அனுப்பப் போவதே இல்லை. உன்னைப் போன்ற குறும்புப் பையன்கள் இனிமேல் இந்தக் குகைக்குள் வராமல் இருப்பதற்காக அவளைக் காவல் வைக்

கப் போகிறேன்'' என்றான்.

''அப்படியானால் என் பாட்டியை நான் பார்க்கவே முடியாதா?''

''பார்க்கலாம். ஆனால், வருஷத்திற்கு ஒரு முறைதான் பார்க்க முடியும்.''

இதைக்கேட்டதும், சிங்க்சா அழுது விட்டான். ''ஐயோ, என் பாட்டியை விட்டுவிடேன், அவள் குகைக்குள் இருக்கச் சம்மதிக்க மாட்டாளே!'' என்று கதறினான்.

உடனே மந்திரவாதி, ''அவள் சம்மதித்துவிட்டாள். காரணம் என்ன தெரியுமா? 'உன் பேரனுக்குப் பிறக்கப் போகும் மூத்த குமாரனைச் சீனாவின் அரசகுமாரனாக்குவேன்' என்று அவளிடம் சொன்னேன். அவள் சம்மதித்து விட்டாள்'' என்றான்.

''அரசகுமாரனா? நானோ ஓர் ஆடு மேய்க்கும் ஏழைப் பையன். என் மகன் எப்படி அரசகுமாரனாக முடியும்?'' என்று கேட்டான் சிங்க்சா.

''தம்பி! நான் நினைத்தால் உன்னையே அரசகுமாரனாக்குவேன். ஆனால், நீ என் உத்தரவின்றி என் குகைக்குள் நுழைந்து விட்டாய். அது ஒரு பெருங்குற்றம். அதனால்தான் உன் மகனை அரசனாக்குவேன். உன் மகன் அரசகுமாரனாகப் போகும் அதே தினத்தில் நீ இறந்து போய் விடுவாய்!'' என்று கூறிவிட்டு மந்திரவாதி பாறைக் கதவைச் சாத்திக் கொண்டான். வெளியே கண் கலங்கிப் பைத்தியம் பிடித்தவன் போல நின்றான், சிங்க்சா.

வருஷங்கள் பல சென்று விட்டன. சிங்க்சா பெரியவனாகிவிட்டான். ஓர் உழவனின் மகளையும் கல்யாணம் செய்து கொண்டிருந்தான்.

அந்தப் பெண்ணின் அப்பா, அம்மா யாரென்று ஒருவருக்குமே தெரியாது. அவள் சிறு குழந்தையாக இருக்கும் போது காட்டில் கிடந்து கண்டெடுக்கப்பட்டவளாம். அவளைத் தூக்கி வந்து ஓர் உழவன் அருமையாக வளர்ந்து வந்தான். கடைசியில், சிங்க்சாவுக்கு அவளைக் கல்யாணம் செய்து கொடுத்தான்.

இரண்டு வருஷங்கள் சென்றன. சிங்க்சாவுக்கு ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது; வளர்ந்தது. குழந்தையுடனும், மனைவியுடனும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தான், சிங்க்சா.

ஐந்து வருடங்கள் சென்றன.

ஒரு நாள், சிங்க்சா வீட்டில் இருந்தபடியே அழகான காகிதக் குடை ஒன்றைச் செய்து கொண்டிருந்தான். அவனுடைய ஐந்துவயதுப்பையன் காகிதப் பட்டம் ஒன்றைக் கையிலே வைத்துக் கொண்டு அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தான்.

அதேசமயம், வாசலில் ஏதோ சப்தம் கேட்டது. சிங்க்சா நிமிர்ந்து பார்த்தான். தன் வீட்டிற்குள் சீன அரசனும் அவனுடைய பரிவாரங்களும் வருவதைக் கண்டான். சிங்க்சாவும், அவன் மனைவியும் அரசனைக் கண்டதும் பணிவுடன் வணக்கம் செலுத்தினார்கள்.

மன்னன் சிங்க்சாவின் மனைவியைப் பார்த்தான்.

''ஆ! என் மகளைக் கண்டுபிடித்து விட்டேன்! குறிகாரன் சொன்னது பலித்து விட்டது. அம்மாவின் முகச் சாயல் அப்படியே இருக்கிறது இவளுக்கு'' என்று கூறிக் கொண்டே, சிங்க்சாவின் மனைவியை அன்புடன் அணைத்துக் கொண்டான்.

அவள் சிறு குழந்தையாக இருந்த போது திருடர்கள் திருடிக் கொண்டு போய் விட்டார்களாம். பின், நகைகளை மட்டும் கழற்றிக் கொண்டு, காட்டில் விட்டுவிட்டுப் போய்விட்டார்களாம். அப்போதுதான் அந்த உழவன் கண்டானாம்.

இதையெல்லாம் கேட்ட சிங்க்சாவும் அவன் மனைவியும் மகிழ்ந்தார்கள்.


அப்புறமென்ன? சிங்க்சாவின் குடும்பம் அரண்மனையை அடைந்தது. சிங்க்சாவின் மகன் அரசகுமாரனானான். ஆனால், மந்திரவாதியின் வாக்குப்படி, சிங்க்சா அன்றே இறந்து விட்டான், பாவம்!

தமிழில் தந்தவர்:

— 'நம்பி' —

பாவம்! கருங்குரங்கு...

படக்கதை :- ஓவியர் - எஸ். கே. ராமானுஜம் (ராநு:-)




"என்னிடமா.. உன்.. வேலையைக்காட்டுகிறாய்?" என்று கூறி.. காகத்திடமிருந்து குரங்கு வடையைப்பிடுங்கிக்கொண்டது..
"கருங்குரங்கே.. நான் உன்னை என்ன செய்கிறேன் -பார்..!"
பாவம்! குரங்கு..... அந்தக்குழந்தைக்கு.. வடையைக்கொடுக்க ஓடி வருகிறது...
குழந்தை.. மகிழ்ச்சியோடு வடையை.. ..வாங்கிக் ..கொள்ளுகிறது
குழந்தை சாப்பிடுவதைக் கண்டு குரங்கு மனம்- -மகிழ்ந்தது.
திருட்டுக் காகம் குழந்தையின் முதுகில் கொத்தியது
குழந்தை வலி தாங்கமுடியாமல்.. ஓ..வென்று அழுகிறது
காகம் பறந்து போய் விட்டது.
குழந்தையின் கையிலுள்ள வடையைப் பிடுங்க, குரங்கு வந்திருக்கிறது என்று கற்களால் அடித்துத் துரத்தினார்கள்
அடிபட்ட குரங்கு அழுது கொண்டே... "இனி.. அவர், அவர் வாழும் இடத்தில் தான்... அவர், அவர்களுக்கு... சுதந்திரமும், சந்தோஷ- -மும் உண்டு என்பதைப் புரிந்து கொண்டேன்" என்று கூறிக்கொண்டே காட்டிற்கு ஓடிவிட்டது.

ஓடும் ராணி

—இந்திரா அனந்தகிருஷ்ணன்—

அன்று, தில்லியிலுள்ள இந்திரபுரி எனும் குடியிருப்பு வட்டாரத்தில் சிறுவர்கள் பரபரத்தனர். பலர், ஒரு சிறுமியைச் சூழ்ந்து கொண்டு நின்றிருந்தனர். என்னவோ ஏதோவொன்று நான் அங்கு விரைந்தேன். "என்னாச்சு?" சிறுவர்களை விசாரித்தேன்.

"ஆண்டி! ராணிக்கு, 10 கிலோ மீட்டர் 'ஜூனியர் ரன்'னில் வெற்றி!" என்று சத்தம் போட்டான், என் பக்கத்து வீட்டுக்காரரின் மகன் அஷோக்.

"ஓஹோ! இரண்டு நாட்களுக்கு முன் ஆயிரக்கணக்கான சிறுவர்களும், பெரியோர்களும் 'Freedom Run' என்னும் விடுதலை ஓட்டத்தில் கலந்து கொண்டார்களே! பிரதமர் ராஜீவ் காந்தியும், மற்றும் சுனில் காவஸ்கர் போன்றவர்களும் பங்கெடுத்துக் கொண்டனரே! அதில் ராணிக்குப் பரிசு போலிருக்கு!" நான் ஊகித்துக் கொண்டேன்.

"ஆனால், ராணி யார்? இளையவர் பிரிவினில் ஒரு சிறுமி பத்துக் கிலோ மீட்டர் ஓடவேண்டுமென்றால், நல்ல சத்துள்ள ஆகாரம் உட்கொள்ளும் பலமான வடிவமுள்ள பெண்ணாக இருக்கவேண்டும். ஒருவேளை, டாக்டர் குமாரின் மகளோ? அல்லது, இரும்பு வியாபாரி குமன் ஸிங்கின் பெண்ணோ?" வீணாகக் குழம்புவானேன்? நான் அஷோக்கைக் கேட்டேன்:

"உங்களுக்குத் தெரியாதா, ஆண்டி? அவள் தான் அதோ, அந்தக் குடிசையில் வசிக்கும் சங்கரின் மகள்;" என்றான் அஷோக்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. சங்கர் என்பவன் பல ஆண்டுகளாக இந்திரபுரியின் செல்வர்களின் ஆடைகளை இஸ்திரி போட்டுப் பிழைக்கும் ஏழைக் குடிமகன்.

இதற்குள் சிறுவர்களின் கூட்டம் கலைந்தது. ராணி அங்கிருந்து ஓடிவிட்



டாள். நான் அவள் ஓடுவதைப் பார்த்துக் கொண்டே நின்றேன். மெல்லிய வடிவமுள்ள ராணி உண்மையில் மான் குட்டி போலத் துள்ளி ஓடினாள். சிறிது நேரத்தில் அவள் என்னைக் கடந்து திரும்பவும் ஓடிச் சென்றாள். அவளுடைய தகப்பன் சைக்கிளை உதைத்தபடி விரைந்து கொண்டிருந்தான். சைக்கிளின் பின்பகுதியில், பெட்டி போடுவதற்கு வேண்டிய ஒரு மூட்டை கட்டைக்கரி. அது விழுந்து போகாமலிருக்க, அம்மூட்டையைப் பிடித்துக் கொண்டு, சிரித்தபடி சைக்கிளுடன் வேகமாக ஓடினாள் ராணி. அவள் கால்களைச் சுற்றிச் சுற்றி வந்தன அவளுடைய இரண்டு நாய்க்குட்டிகள்.

ராணி ஏழாவது வகுப்பில் படிக்கும் பதினொன்கு வயதுச் சிறுமி.

'அவள் ஓடப் பிறந்தவள்' என்கிறார் மிஸஸ் கன்னா—ராணி படிக்கும் Inderpuri Govt. Girls Senior Secondary School-ல் உடற்பயிற்சி கற்றுக் கொடுக்கும் பி. டி. டீச்சர்.

"நான் தினந்தோறும் காலையில் சிறுமிகளைப் பள்ளியைச் சுற்றி ஓட வைப்பேன். ராணி மட்டும்தான் நான்கு முறை ஓடுபவள். அதுவும், மகிழ்ச்சியுடன், பெருமூச்சு வாங்காமல்! மற்ற சிறுமிகள் இரண்டு முறை சுற்றி வருவதற்குள் அலுத்துக் கொள்வார்கள். விடுதலை ஓட்டத்தில் அவள் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் வற்புறுத்தினேன். அவள் மகிழ்ச்சியுடன் சம்மதித்தாள். ஒரு வாரம் தினம்தோறும் பள்ளியில் பயிற்சி செய்தாள்.

பிப்ரவரி மாதக் குளிர்ந்த காற்று முகத்தில் வீச, ராணி மற்றும் பல பேருடன் சேர்ந்து, விஜய் சௌக் எனும் நாற்சந்தியிலிருந்து ஓடத் தொடங்கினாள். சில சிறுவர்கள் தடுக்கி விழுந்தனர். மற்றும் சிலர் ஓய்ந்து போய்ப் பாதி வழியிலே நின்றுவிட்டனர். ராணி விடாமல் ஓடினாள். "தாய்நாட்டுக்காக ஒரு சிறு முறையில் தான் செய்யும் பணி' என்னும் மகிழ்ச்சி ஒருபுறம்; மேலும், ஓடுவதில் அவளுக்குள்ள பிரியம் இரண்டும் அவளை உந்த, சிறிதும் களைப்புத் தெரியாமல் ராணி பத்துக் கிலோமீட்டர் ஓடி முடித்தாள்; வெற்றியும் பெற்றாள்!

நான் கேட்டதும், அவள் உற்சாகத்துடன் என்னைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றாள். "அவள் ஆகாரம் என்ன?" நான் ஆவலுடன் அவள் தாய் பூல்வதியை விசாரித்தேன். "பாலும் பழமும் நான் எப்படி வாங்கித் தருவேன்? சூடாக ரொட்டி தட்டிப் போடுவேன். அவ்வளவுதான். அதை ராணி மகிழ்ச்சியுடன், ருசித்து, ஊறுகாய் அல்லது பொறியலுடன் கலந்து தின்பாள்" என்றாள் பூல்வதி.

பள்ளியிலிருந்து திரும்பினாலும், ராணிக்கு உட்கொள்ள அதே ரொட்டிதான். ராணியின் தங்கையும், தம்பியும் கிழிந்த பாயில் உட்கார்ந்தபடி என்னைக் கூர்ந்து கவனித்தனர். இருவரையும் ராணியுடன் சேர்ந்து அமரச் சொல்லி நான் படம் பிடித்தது அவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி! "ராணிக்குக் கிடைக்கப் போகும் பரிசுத் தொகை; ரூபாய் மூவாயிரத்தை எப்படிப் பயன்படுத்துவீர்கள்?" என்று நான் சங்கரைக் கேட்டேன்.

"அது அவளுடைய பணம். நான் அதைத் தொட மாட்டேன். அவளுடைய முன்னேற்றத்திற்கே அது பயன்பட வேண்டும்," பெட்டி போட்டுக் கொண்டே அழுத்தமாகப் பதிலளித்தார் சங்கர்.

மறுநாள் செய்தித்தாளில் பரிசு பெற்றவர்களின் பெயர்கள் வெளி வந்தன. அதில் ராணியின் பெயரைக் கண்டு என் உடல் புல்லரித்தது. ராணியின் பெற்றோருக்குப் பெருமை பொங்கியது. அவளுடைய தங்கையும் தம்பியும் மகிழ்ச்சியுடன் அவளை ஏறிட்டுப் பார்த்தார்கள்.

பள்ளியில் ராணிக்குத் தக்க ஊக்கம் கிடைத்தால், வருங்காலத்தில் அவள் மற்றொரு பி. டி. உஷாவாகத் திகழமாட்டாளா, என்ன?

சித்திரப் புதிர் — விடை:

1. தேரை 2. வெள்ளை

3. இரும்பு 4. குரல்

5. டிஸ்கஸ் (வட்டெறிதல்)

பிருந்தாவனக் கவியரங்கம்



இரு குருவிகள்

எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
இரண்டு குருவிகள்!
ஒன்றை யொன்று துரத்தி ஓடும்
இனிய குருவிகள்.

கீச்சு கீச்சு என்று கத்தி
என்னை எழுப்புமே,
எழுந்து சென்று பார்க்கப் போனால்
பறந்து போகுமே!

அம்மா வந்து அரிசி போட்டால்
பொறுக்கித் தின்னுமே.
ஆசையுடன் பிடிக்கப் போனால்
அலறி ஓடுமே!

பசியினாலே குஞ்சு கத்தப்
பரித விக்குமே!
பாய்ந்து சென்று நெல் கொணர்ந்து
பசியைப் போக்குமே!

— வி. வீரராகவன் (17,973),

தேரை

தேரை ஒன்று தத்தித் தத்திப்
பாறை நோக்கிப் போகுது.

கொர் கொர் என்று கத்திக்கொண்டு
குளக்கரையில் வாழுது;

தரையில் வாழும் தேரை அது
தண்ணீரிலும் வாழுது;

ஈரிடத்தும் வாழும் வரம்
இறைவனிடம் பெற்றது.



இரட்டை நாக்கை நீட்டி நீட்டிப்
பூச்சிகளைப் பிடிக்குது.

பூச்சிகளை விழுங்கி அது
பசியாற்றிக் கொள்ளுது.

பாம்பும் வாயால் ஒலி எழுப்பி
பாம்புக்கு இரை ஆனது.

வாயினாலே கெட்ட கதையை
மனத்தில் நாமும் கருதுவோம்.

— எம். பெரியசாமி (18,892),
கபிலர்மலை — 4.

நல்ல பயன்

எங்கள் வீட்டின் பின்புறத்தில்
என்றும் உள்ளது வெற்றிடமே.
எங்கள் அப்பா ஒரு நாளில்
எல்லா விதையும் வாங்கினரே!



அவற்றையெல்லாம் விதைத்தோமே,
அழகாய்த் தோட்டம் அமைத்தோமே!
அனைத்து விதையும் முளைத்திடவே
அதிக மகிழ்ச்சி அடைந்தோமே


செடிகள் யாவும் தழைத்திடவே
சீராய் நாங்கள் உழைத்தோமே!

செடிகள் யாவும் சீக்கிரமே
செழிப்புடன் நன்கு வளர்ந்தனவே!

நன்கு வளர்ந்த செடிகளுமே
நல்ல பலனைத் தந்தனவே;
நாங்கள் பட்ட பாட்டிற்கு
நல்ல பயனை அடைந்தோமே.

— கே. கணேசன் (20,184), திருச்சி.

தந்தி



தந்தி தந்தி என்றதும்
தொந்தி கூடக் கலங்குதே!

வந்த சேதி என்னவோ,
என்று மனமும் பதறுதே!

ஊரில் உள்ள உறவினர்
உடல் நலம் குறைந்ததோ!
வேறு துக்கச் செய்தியா?
விபத்து நடந்து விட்டதோ?

பள்ளி நண்பன் தேர்விலே
பாஸ் செய்த செய்தியோ!
அள்ளிக் கொடுக்கும் லாட்டரி
அதிர்ஷ்டம் காட்டி விட்டதோ!

இன்பச் செய்தி வந்திடில்
இதயம் பொங்கி மகிழுது!
துன்பச் செய்தி கண்டிடில்
துயரம் மனத்தை வாட்டுது!

— தேனி எம். செந்தில்வேலன் (141),
தேனி, (குமார்).

மறந்து விடாதே



படித்து விட்டேன் என்று சொல்லிப்
படுத்து விடாதே! — உன்
படிப்பின் பயனைச் செயலில் காட்ட
மறந்து விடாதே!

உழைத்து விட்டேன் என்று சொல்லி
உறங்கி விடாதே! — உன்
உழைப்பில் மேலும் உயர்வு தேட
மறந்து விடாதே!

கடமை முடித்தேன் என்று சொல்லிக்
களைத்து விடாதே! — உன்
கடமை யாவும் தொடர்கதைதான்
கலக்கம் கொள்ளாதே!

வென்று விட்டேன் என்று சொல்லி
நின்று விடாதே! — உன்
வெற்றிப் பாதை நல்ல பாதை
விலகி விடாதே!

— து. காயத்ரி (14,641), சேலம் — 1.

மலையில் 4 தலைகள்!



ஆழி

அமெரிக்காவில், தென் டகோடாவில், 6,200 அடி உயர ரஷ்மூர் மலைச் சிகரத்தில், ஜார்ஜ் வாஷிங்டன், ஜெபர்ஸன், தியேடர் ரூஸ்வெல்ட், ஆப்ரஹாம் லிங்கன் ஆகிய 4 அமெரிக்க ஜனாதிபதிகளின் மார்பளவுச் சிற்பங்கள் பிரம்மாண்டமான அளவில் செதுக்கப்பட்டிருக்கின்றன! ஒரே பாறையில் செதுக்கப்பட்ட சிற்பங்களில் உலகத்திலேயே மிகப் பெரியவை!



ஒவ்வொரு மார்பளவுச் சிற்பமும் சுமார் 100 அடி உயரம்! தலைமட்டும் உச்சியிலிருந்து தாடை வரை 60 அடி! சிற்பம் செதுக்குவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட பரப்பளவு 1,50,000 சதுர அடி! 465 அடி உயரமுள்ள ஒரு மனிதன் இருந்தால் அவனுக்கு எவ்வளவு பெரிய முகம் இருக்குமோ அந்த அளவில் செதுக்கப்பட்டது ஒவ்வொரு சிற்பமும்! ஆப்ரஹாம் லிங்கனின் வாய்மட்டும் 22 அடி அகலம்! ஜெபர்ஸனின் கண்ணில் ஒரு மனிதன் தாராளமாக நிற்கலாம்!

தென் டகோடாவிலுள்ள அரசாங்க சரித்திர ஆசிரியர் டோன்னி ராபின்ஸன், 1923-24 ஆண்டுகளில் இவ்விதம் சிற்பங்கள் செதுக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை வெளியிட்டார். மிகவும் புகழ்பெற்ற சிற்பியான 'கட்ஸன் போர்க்ளம்' என்பவர் 1927-ஆம் ஆண்டு செதுக்கத் தொடங்கினார். முற்றுப்பெறுவதற்கு முன்பே அவர் இறந்துவிட்டதால் அவர் மகன் லிங்கன் போர்க்ளம்தான் சிற்பங்களை முடித்தார்.


அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த 'கால்வின் கூலிட்ஜ்' காலத்தில் இது தொடங்கப் பட்டது.


இந்தச் சிற்பங்களைச் செதுக்கி முடிக்க ஆன செலவு 4 லட்சம் டாலர்கள்!

சிந்து சிரிப்போமா


கூடைப் பந்து போட்டியில் உனக்கு மட்டும் முதல் பரிசு கிடைத்து விடுகிறதே! எப்படிடா?


காத்தாடிக்கு தாடி வச்சது போதுமா?



என் காலில் முள் குத்தி விட்டது டாக்டர்!
வெடர்னரி டாக்டர்



தபால்தலை கூறும் வரலாறு

சி.கல். சுந்தரம்





குழந்தைகளே, குழந்தைகளே,
'கோகுலக்' குழந்தைகளே,
நான் சொல்லும் வரலாற்றை
நல்லோரே கேளுங்கள்.

'தபால் தலை' என்றதொரு
தமிழ்ப் பெயரைப் பெற்றவன் நான்.
ஆங்கிலத்தில் 'ஸ்டாம்பெ'ன்றே
அழைப்பார்கள், என்னையுமே.

உங்களிலும் சிறியவன் தான்.
உள்ளங்கவர் கள்வன் நான்.
மூர்த்திமிகச் சிறியதுதான்,
கீர்த்தியிலே பெரியவன் நான்.

அவனன்றி ஓரணுவும்
அசையாது என்பார் சிலர்.
நானின்றி ஓர்நிகழ்வும்
நடவாது நானிலத்தில்.

புத்லிபாய் பெற்றெடுத்த
புனிதமான குழந்தையொன்று.


மோதிலால் பெற்றெடுத்த
மேன்மைமிகு குழந்தையொன்று.

நேருஜீ தான் பெற்ற
நேர்த்தியான குழந்தையொன்று.

சிவகாமி தவப்புதல்வன்,
ஜெகம்புகழும் காமராஜர்.


ஆகியோர் அனைவரையும்
அனுதினமும் புகழுகின்றேன்.















Parry's

Funpage

மிட்டாய் மன்னன் சொல்லித் தருகிறார் - கற்றுக்கொள்ளவும் பொழுது போக்கவும் அருமையான யோசனைகள்!



உங்களுக்கென்று ஒரு ஜலதரங்கம் செய்து கொள்ளுங்கள். செய்வது மிகச் சுலபம்.




THE KING OF SWEETS

The King of Sweets
P.O. Box No 2040
Madras 600 001

HTA 7166

பூந்தாவனம்



காந்திஜி பார்த்த சினிமா

தொலைக் காட்சியில் ஞாயிறு தோறும் காட்டப்படும் இந்தி ராமாயணத்தை நாமெல்லாம் எவ்வளவு ஆர்வமாகப் பார்த்து மகிழ்கிறோம்! பல ஆண்டுகளுக்கு முன்பு இந்தியில் வெளிவந்த 'ராமராஜ்யா' என்றபடத்திற்கும் நல்ல வரவேற்பு இருந்ததாம். சினிமாவே பார்க்காத மகாத்மா காந்தி கூட அந்தப் படத்தைப் பார்த்துப் பாராட்டினாராம். அந்தப் படத்தை அப்படியே தமிழில் 'டப்' செய்து வெளியிட்டார் ஏவி. மெய்யப்ப செட்டியார். தமிழில் மட்டுமல்ல; மலையாளத்திலும் அது மிகச் சிறந்த வெற்றிப்படமாக அமைந்ததாம்.

— மா. தா. ஸ்ரீதர் (13,601),
சென்னை — 106.

குழந்தைக்குத் தாலி

திருமணத்தில் பெண்ணுக்குத் தாலி கட்டுவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால், குழந்தைக்குத் தாலி கட்டிப் பார்த்ததுண்டா? இப்போது பார்க்க முடியாது. முன் காலத்தில் 'ஐம்படைத் தாலி' என்ற ஒரு தாலியைக் குழந்தைக்கு அணிவிப்பார்களாம்!



அது என்ன ஐம்படைத் தாலி?

காக்கும் கடவுளாகிய திருமாலின் ஐந்து படைகள் — அவையாவன சங்கு, சக்கரம், கதை, வாள், வில் அத் தாலியிலே காணப்படுமாம்!

— ஏ. ஆர். ஆனந்த் (421),
காரைக்குடி.




மயில் கூட்டம்

நாமெல்லாம் மரத்தில் குரங்குக் கூட்டத்தையோ, காக்கைக் கூட்டத்தை

யும் தான் பார்க்கிறோம். ஆனால், மயில் கூட்டத்தை மரங்களில் காண வேண்டுமானால், விராலிமலை முருகன் கோயில் பக்கத்தில் காணலாம். பலர் மயில் கூட்டத்தைப் படம் பிடித்ததையும் நான் பார்த்தேன்.


— த. கார்த்திகைராஜா (16,097),
விருத்தாசலம்.



கடைசி, கடைசி

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முதல் ஜனாதிபதியான ஜார்ஜ் வாஷிங்டன் 18 — ஆம் நூற்றாண்டின் கடைசி ஆண்டின், கடைசி மாதத்தில், கடைசி வாரத்தில், கடைசி நாளில், கடைசி மணியில், கடைசி நிமிடத்தில் உயிர் துறந்தார்.

— மு. துரைமுருகன் (14,381),
நல்லிபாளையம்.



பொன்மொழிகள்

* சான்றோர்கள் பிழையைத்தான் வெறுப்பார்கள்; பிழை செய்தவனை வெறுக்க மாட்டார்கள்.
— ஷிண்டோ

* ஒழுக்கம் என்ற பேராற்றின் கிளை நதிகள்தாம் நற்பழக்கங்கள்.
— ஓ. எஸ். மார்ட்டின்

* புத்திசாலி சிரித்து வாழ்கிறான். முட்டாள் பிறர் சிரிக்க வாழ்கிறான்.
— சாணக்கியர்

* செயல் புரியும் ஆற்றல் படைத்தவன் செயல்புரிவான். அது இல்லாதவன் வெறுமனே பேசிக் கொண்டிருப்பான்.
— பெர்னார்ட்ஷா

தொகுப்பு: எஸ். ஜெயஸ்ரீ (1254),
திருச்சி — 14.



புதுக் கவிதை

தென்னை மரத்திலே
ஒரு தேள் — அது
என்னைப் பார்த்துச்
சிரித்தது.
"பொல்லாத தேளே — உன்
பல்லை உடைப்பேன்" என்றேன்.
"ஹஹ்ஹா — எனக்குப்
பல்லே இல்லையே — என்
சொல்லை நம்பு" என்றது தேள்.
ஆம், தேளுக்குப் பல் இல்லை.
தெரிந்து கொண்டேன் நான்.

— எம். அருணாசலம் (20,816),
கோயில்பட்டி.

தென்னையும் பசுவும்

தேர்வில் நிச்சயமாக வரும் என்று எதிர்பார்த்து, ஒரு மாணவன், தென்னை மரத்தைப் பற்றிய கட்டுரை ஒன்றை மனப்பாடம் செய்து வைத்திருந்தான். ஆனால், தேர்வில் தென்னை மரத்தைப் பற்றிய கட்டுரை



வரவில்லை; பசுவைப் பற்றிய கட்டுரையை எழுதும்படி கேட்டிருந்தது. உடனே, அந்த மாணவன் என்ன செய்தான், தெரியுமா? தென்னை மரத்தைப் பற்றிய கட்டுரையை எழுதிவிட்டு, 'இவ்வளவு சிறப்புப் பொருந்திய தென்னை மரத்தில் பசு கட்டப்பட்டுள்ளது' என்று எழுதி முடித்தான்!

—- அ. சாகீர் (5450), மழையூர்.




வேடிக்கைப் புதுமொழிகள்

* பொக்கை வாய்ப் பாட்டிக்குப் பொரிவிளங்காய் வேணுமாம்.
* பூனையைக் கண்டு நடுங்குகிறவன் புலிவேட்டைக்குப் புறப்பட்டானும்.
* வண்ணாத்திப் பூச்சியைப் பிடிக்க வாள்வேணுமென்றுசொன்னானும்.
* மதுக்கடைக்குச் சொந்தக்காரர் மகாத்மா காந்தியின்சீடர் என்பார்.
* சமயபுரத்துக் குளிரைத் தாங்காதவன் இமயமலையிலே ஏறப் போகிறானும்.

—- ஏ. எல். விஜி (397), மதுரை.

பறவைகள் பலவிதம்



மிகப் பெரிய பறவை — நெருப்புக் கோழி.

மிகச் சிறிய பறவை — ஹம்மிங் பேர்ட்

மிக வேகமாகப் பறக்கும் பறவை — ஸ்விஃப்ட்

மிக அதிகமாகச் சாப்பிடும் பறவை — கண்டூர்.

இறக்கை இல்லாத பறவை — கிவி.

கூடு கட்டாத பறவை — குயில்.

மண்ணில் குழி தோண்டி வாழும் பறவை — காடை.

எஸ். மஹேஷ்வரன் (18344),
வேலூர் — 6.



கேள்விச் சீட்டு

பிரிட்டிஷ் பிரதமராயிருந்த வின்ஸ்டன் சர்ச்சில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். அவரை மடக்க நினைத்த ஒருவர், ஒரு காகிதத்தில் 'முட்டாள்' என்று எழுதி அவரை நோக்கி வீசினார். அதை எடுத்துப் படித்துப் பார்த்த சர்ச்சில், ஒலிபெருக்கியில் கூறினார்: ''எவனோ ஒருவன் எனக்குக் கேள்விச் சீட்டு அனுப்பியிருக்கிறான். அதில் அவன், 'முட்டாள்' என்று தன் கையெழுத்தை மட்டுமே போட்டிருக்கிறான். வேறு எதுவும் எழுதவில்லை'' என்று புத்தி சாலித்தனமாகப் பேசினார்.

— செ. குமார் (9102),
மயிலாடுதுறை.

முன்பகுதியும் பின் பகுதியும்



கீழேயுள்ள ஒவ்வொரு பழமொழியின் முன் பகுதியும் பின் பகுதியும் இடம் மாறியுள்ளன. சேர்த்துப் படியுங்கள்:

1. நோயற்ற வாழ்வே	அ. சும்மா சும்மா வருமா?
2. காற்றுள்ள போதே	ஆ. பொன்னல்ல.
3. அமாவாசைச் சாப்பாடு	இ. குறைவற்ற செல்வம்.
4. மின்னுவதெல்லாம்	ஈ. சூரிய நமஸ்காரம்.
5. கண் கெட்ட பிறகா	உ. பல்லுக்கு உறுதி.
6. ஆலும் வேலும்	ஊ. தூற்றிக் கொள்.

விடை: 1 + இ; 2 + ஊ; 3 + அ; 4 + ஆ; 5 + ஈ; 6 + உ.

— எம். சொக்கலிங்கம் (20678), மன்னார்குடி.

விமர்சனப் போட்டி முடிவு அடுத்த இதழில்

பிருந்தாவனக் கலையரங்கம்

அவன் செய்த வேலை!

எஸ். கோகுலகிருஷ்ணன் (7755)



'என் தம்பி, என்னைவிடப் புத்தி சாலியாக இருக்கிறானே!' என்று பெருமை கொள்ளாமல், தம்பி மீது பொறாமை கொண்டிருந்தான் குமார். ஆனால், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், தன் உள்மனத்திலேயே போட்டுப் புதைத்து வைத்திருந்தான்.

அன்று குமார் தன் அன்னையிடம், "அம்மா, நேரமாச்சு. எனக்குச் சீக்கிரம் சாப்பாடு போடு!" எனக் கூறினான்.

உடனே அவனது தாய், "போடா, மக்குப் பயலே! நீ அங்கே போய் என்னத்தைக் கிழிக்கப் போறே? கொஞ்சம் இரு. வாசு சாப்பிடுறான். அவன் சாப்பிட்ட பிறகுதான் உனக்குச் சாப்பாடு" எனக் கூறினாள்.

இச்சொற்கள் குமாரின் மனத்தைக் குத்தத் தொடங்கின. குத்தி அங்கு புதைந்து கிடந்த பொறாமை என்னும் தீயை, கொஞ்சம் கொஞ்சமாகக் கொழுந்துவிட்டு எரியச் செய்தன.

அடுத்த நாள் காலை அவர்களது மாமா வந்தார். உடனே குமார் வேகமாக ஓடிப் போய், "மாமா! எனக்கு என்ன வாங்கிட்டு வந்தீங்க?" என ஆசையாகக் கேட்டான்.

உடனே அவனது மாமா, "சீ, போடா மக்குப் பயலே! உனக்கு என்ன வாங்கிட்டு வருவாங்க? நான் வாசுக்குத்தான் அழகான ஒரு பைலட் பேனா வாங்கி வந்துள்ளேன்" எனக் கூறிவிட்டு, வாசுவை அழைத்து, அவனிடம் பேனாவைக் கொடுத்துவிட்டு, மேற்கொண்டு ஐந்து ரூபாய் பணமும் கொடுத்துவிட்டுச் சென்றார்.

இது "எரிகிற கொள்ளிக்கட்டையில் மேலும் எண்ணெய் வார்த்தாற் போல் ஆயிற்று" குமாருக்கு. தனக்கு இந்த நிலை ஏற்படக் காரணமாக இருக்கும் தன் தம்பியின் மீது அடுத்த நாளே தனது வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளத் தீர்மானித்தான்.

அன்றிரவு அனைவரும் தூங்கிய பின் மெல்லச் சத்தம் போடாமல் எழுந்து சென்றான் குமார். அங்கிருந்த கடிகாரத்தை எடுத்து அதிலுள்ள முட்களைப் பின்னால் திருப்பி, அதை கால் மணி நேரம் தாமதமாக ஓடும்படி செய்தான்.

அடுத்த நாள் காலை குமார் சீக்கிரம் பள்ளிக்குச் சென்று விட்டான். அவனுக்குத்தான் தெரியுமே கடிகாரம் தாமதமாகச் செல்வது. ஆனால், அது வாசுவுக்குத் தெரியாது. ஆகையால், கால் மணி நேரம் தாமதமாகப் பள்ளிக்குச் சென்றான். அங்கு இறைவணக்கம் முடிந்து பள்ளி ஆரம்பித்துப் பாடம் நடந்து கொண்டிருந்தது.

தாமதமாகச் செல்பவர்கள் யாராக

இருந்தாலும் அவர்கள் எவ்வளவு நேரம் தாமதமாக வருகிறார்களோ, அவ்வளவு நேரம் முட்டிக்கால் போட வேண்டும். 'வாசு மட்டும் இதற்கு விதி விலக்கா என்ன? அவனும் கால் மணி நேரம் முட்டிக்கால் போட்டான். இதைத் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த குமாரின் மனம் ஆனந்தத்தில் மூழ்கியது. தம்பிதானே அவன் என்ற பாச உணர்வு அவனிடம் கடுகளவு கூட இல்லை. அப்பொழுது அவனிடம் மிஞ்சியிருந்தது எல்லாம் பகை உணர்வும், பொறாமையும்தான்.

இரு தினங்கள் கழித்து குமாருக்கு முழு ஆண்டுத் தேர்வு நடைபெற இருந்தது. இந்த முழு ஆண்டுத் தேர்வில் எப்படியும் வெற்றி பெற்று, தன்னை மக்கு என்று கிண்டல் செய்தவர்கள் அனைவரையும் வியக்கச் செய்து, அவர்கள் வாயை அடக்க வேண்டும் என எண்ணினான், குமார். எனவே, இரண்டு நாட்களாக இரவு பகல் பாராமல் கடுமையாக உழைத்துப் படித்தான்.

தேர்வும் வந்தது.

குமார், தான் படித்ததை எல்லாம் ஒரு முறை திருப்பிப் பார்த்துக் கொண்டு தேர்வுக்குச் சென்றான். தேர்வு அறையை அடைந்ததும், அங்கே இருந்த ஆசிரியர், "தேர்வு ஆரம்பித்து கால் மணிக்கு மேல் ஆயிற்றே! எங்கே போனாய் இவ்வளவு நேரம்?" என்று கண்டித்து அவனை உள்ளே அனுமதித்தார்.

நேரமாகி விட்டதே என்று குமார் அவசர அவசரமாக, வியர்க்க விறுவிறுக்க, தான் படித்ததை எல்லாம், ஒன்று கிடக்க ஒன்று மாற்றி எழுதினான்.

குமார் தேர்வுக்குத் தாமதமாக வரக் காரணம் என்ன? தன் தம்பியின் மீது பொறாமை கொண்டு அவனைப் பழி வாங்குவதற்காகக் கடிகார முட்களைத் திருப்பி வைத்தான் அல்லவா? அந்தக் கடிகாரத்தை யாரும் சரி செய்யாமல் விட்டு விட்டதால், அது இன்று அவனுக்கே எதிரியாகி விட்டது.

அனைத்துத் தேர்வுகளும் நடந்து முடிந்தன. மூன்று மாதங்கள் இனிதாகக் கழிந்தன. அரசுத் தேர்வுக்கான ரிசல்ட்டும் வந்தது. ஆனால், அதில் குமாரின் நம்பரைத்தான் காணவில்லை.

எப்படி வரும்? வினையை விதைத்தவன் வினையை அறுத்துத்தானே தீர வேண்டும்!"

ஒரு வாரம் கழித்து குமாருக்கு மதிப்பெண் பட்டியல் கிடைத்தது. அதில் அவன் முதலில் எழுதிய தேர்வாகிய தமிழ்த் தேர்வில் தோல்வி அடைந்திருந்தான்.

இதைப் பார்த்த குமாரின் கண்கள் குளமாயின. அவனது மனத்தில் கொழுந்து விட்டு எரிந்த பொறாமைத் தீ இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக அணையத் தொடங்கியது.



"அரசே! நம் நாட்டில் உள்ள போஜனூர் கிராமத்திலிருந்து அக்கிராமத்தின் நாட்டாண்மையும், அங்குள்ள முனியப்பன் கோயில் பூசாரியும் வந்துள்ளனர்" என்று கூறினான், வாயிற் காவலன்.

"உள்ளே வரச் சொல் அவர்களை," என்றான் அரசன். நாட்டாண்மையும், பூசாரியும் அவையினுள் நுழைந்தனர்.

ஒரு விளக்கு, சென்ற வாரம் திருட்டுப் போய் விட்டது.''

''என்ன, திருட்டா! நான் ஆளும் நாட்டிலா?''

நாட்டாண்மை, ''ஆமாம் அரசே, அந்தத் திருட்டுக்குச் சம்பந்தப்பட்ட இருவரைப் பிடித்துள்ளோம். அவர்களை அரண்மனைக்குக் கொஞ்ச தூரம் தள்ளி, ஒரு மரத்தில் கட்டி வைத்துள்ளோம்.''

அரசன், ''அவர்கள் இருவரையும் அவைக்கு இழுத்து வாருங்கள்,'' என்று ஆணையிட்டான். உடனே நான்கு காவலர்கள் சென்றனர்.

பூசாரி தொடர்ந்தார், ''அரசே! பஞ்சாயத்து நடத்தி, அவர்களைப் பல முறை விசாரித்தும், யார் திருடியது என்பது இன்னும் புலப்படவில்லை. ஆகவே, நீங்களும் கொஞ்சம் விசாரித்தால் நன்றாக இருக்கும்.'' என்றான்.

அரசன், ''சரி! சரி!'' என்றான்.

அரசன் அவர்களை விசாரித்தான், சித்திரவதை செய்தான். எதற்கும் பயனளிக்கவில்லை. ஆதலால், அரசன் யோசிக்கலானான்.

அப்போது அங்கே, அவைச் சிற்பி கனகன் வந்தான். அவன் ஒரு சிறந்த சிற்பி மட்டுமல்ல; தந்திரசாலியும் கூட. அவன் அரசன் மூலம் விஷயம் அறிந்து கொண்டு, அரசனின் அனுமதி பெற்று, பூசாரியை அழைத்துக் கொண்டு போஜனூர் சென்றான்.

போஜனூரிலிருந்து பூசாரியுடன் திரும்பிய கனகன், தன் கையில் ஒரு விளக்கைப் பிடித்துக் கொண்டு, ''அரசே! கண்டுபிடித்து விட்டேன்! விளக்கைக் கண்டுபிடித்து விட்டேன்!'' என்று கூறிக் கொண்டே வர, அவையோர் ஆச்சரியத்தால் கனகனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கனகன், ''இதோ, இவன்தான் விளக்கைத் திருடியிருக்கிறான்,'' என்று இருவரில் ஒருவனைக் காட்ட,

அவன், ''அ... அது.... உ... உங்களுக்கு.... எப்படி... கி... டை... கிடைத்தது?'' என்று தடுமாற,

அரசன், ''இவன்தான் திருடியிருக்கிறான், கைது செய்யுங்கள் இவனை'' என்று ஆணையிட்டு விட்டு,

''கனகா! உனக்கு எப்படி, அவன் திருடிய விளக்குக் கிடைத்தது?'' என்று கேட்க,

கனகன், ''அரசே! இது அவன் திருடிய விளக்கல்ல; இது கோயிலில் இருந்த இரண்டு விளக்குகளுள் மீதியிருந்த ஒன்று. இரண்டும் ஒரே மாதிரி இருப்பதால், இதைக் காட்டி, இவன்தான் திருடினான் என்று அவர்களில் ஒருவனைக் காட்டினேன். உடனே அவன் தடுமாறியதன் மூலம், அவன்தான் குற்றவாளி என்பது தெரிந்து விட்டது'' என்று கூறினான்.

அரசன், ''திருடப்பட்ட விளக்கைக் குற்றவாளியின் மூலம், எங்கே இருக்கிறது என்பதை அறிந்து, எடுத்து வாருங்கள்'' என்று ஆணையிட்டான்.

பின்னர், கனகனைப் பாராட்டி, அவனுக்குப் பொன்னும், பொருளும் பரிசாக வழங்கினான். திருட்டுக்குச் சம்பந்தப்பட்ட இருவரில், மற்றொருவனை விடுதலை செய்தான்.

நாட்டாண்மையும், பூசாரியும், அரசனிடமிருந்து விளக்கைப் பெற்றுக் கொண்டு, தக்க காவலோடு தம் கிராமத்திற்குக் கிளம்பினர்.

செருப்பும் விருப்பும் (கதை)

பி. ஆனந்த்



மாலு, அன்று எப்படியாவது அம்மாவிடம் மன்றாடிக் கடைத் தெருவில் புதிதாக வந்து விற்பனையாகிக் கொண்டிருக்கும் செருப்பை வாங்கி விட வேண்டும் என்று தீர்மானமாக

இருந்தாள். பள்ளியிலிருந்து வந்து டிபன், காப்பி சாப்பிட்ட உடனேயே அம்மாவிடம் கடைத் தெருவுக்குப் போய்ச் செருப்பு வாங்கி வரலாமெனக் கூப்பிட்டாள்.

அவளுடைய அம்மா கோமதி மிகவும் புத்திசாலி. அவள், தன் மகள் நல்ல குணங்களுடனேயே வளர வேண்டும் என விரும்புபவள் ஏற்கெனவே மாலுவிடம் இரண்டு ஜோடி செருப்புகளும், இரண்டு ஜோடி ஷூக்களும் இருப்பது அவளுக்குத் தெரியும். இப்பொழுது மாலு கேட்பது அநாவசியம் என்பதை அவளுக்கு உணர்த்த எண்ணினாள். போதும் என்ற மனம் வேண்டும் என்பதை மாலுவுக்குக் கற்பிக்க விரும்பினாள்.

மாலுவிடம் "ஏன் மாலு, உன்னிடம்தான் 2 ஜோடி செருப்புகளும் 2 ஜோடி ஷூக்களும் இருக்கிறதே. அவையே உனக்கு அதிகம். அதற்கு மேல் இன்னொரு புதிய செருப்பு இப்பொழுது எதற்கு?" என்றாள்.

அதற்கு மாலு, "என் வகுப்பில் நிறையப் பேர் அது மாதிரி செருப்பு போட்டுக் கொண்டு வருகிறார்கள். எனக்கும் அதுபோல் வேண்டும். நீ வாங்கிக் கொடுத்தால் அப்பா என்ன சொல்லப் போகிறார்? ஒரு 25 ரூபாய் நமக்கு ஒன்றும் பெரிய பணம் இல்லையே!" என்றாள்.

அதற்கு கோமதி கண்டிப்பாக "நான் உனக்கு அந்தச் செருப்பை வாங்கித் தர மாட்டேன். பணம் ஒன்றும் பெரிதல்ல. எப்பொழுதும் நம்மிடம் இருப்பதைக் கொண்டே மகிழ்ச்சி அடையத் தெரிந்து கொள்ள வேண்டும். இன்னும் வேண்டும். இன்னும் வேண்டும் என்கிற ஆசைக்கு அளவே கிடையாது. அந்த மாதிரியான அநாவசிய ஆசைகளை வளர்த்துக் கொள்ளக் கூடாது. உன் வகுப்பில் எத்தனையோ பேருக்கு ஒரு ஜோடி செருப்புத்தான் இருக்கிறது. நம்மைச் சுற்றி உள்ளவர்களைப் பார். காலில் போட ஒரு ஜோடி செருப்புகள் கூட இல்லாத ஏழைகள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? அளவிற்கு மேல் எதற்கும் ஆசைப் படாதே" என்ற அறிவுரைகளைக் கூறினாள்.

அவை எதையும் காதில் வாங்காத மாலு ஏமாற்றத்தினால் அழ ஆரம்பித்தாள். அதைப் பார்த்த கோமதி "நீ எத்தனை அழுதாலும் நான் கண்டிப்பாக வாங்கித் தர முடியாது. இப்போது நான் என் சிநேகிதி வீட்டிற்குப் போக வேண்டும். சீக்கிரம் கிளம்பு" என்று கூறிவிட்டு மற்ற வேலைகளைக் கவனிக்கச் சென்றாள்.

மாலுவுக்கு அம்மாவுடன் வெளியில் செல்லவே சற்றும் விருப்பமில்லை. ஆனாலும், வீட்டில் தனியாக இருப்பது பயமாக இருக்குமென்பதால், வேண்டா வெறுப்பாகத் தன் தாயுடன் கிளம்பினாள். அவள் அம்மாவும், அவளுடைய சிநேகிதி லலிதாவும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். திருமணமான பின் டில்லி சென்று விட்ட லலிதாவின் கணவர், டில்லியில் ஒரு விபத்தில் இறந்து விட்டதால் லலிதாவும் அவளுடைய 12 வயதான ஒரே மகள் லீலாவும் சென்னையில் தங்கி விட்டனர். கோமதியும் மாலுவும் அவர்கள் வீட்டிற்குச் சென்ற போது, லீலா ஒரு சக்கர நாற்காலியில் அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். இவர்களைக் கண்டதும், லீலா, "வாருங்கள் வாருங்கள். உங்களை அம்மா இரண்டு நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று அன்போடு வரவேற்றாள். அழகான உருண்டை முகமும் சுருண்ட தலை முடியும் கொண்ட லீலாவிற்கு, தொடைக்குக் கீழ் இரு கால்களும் இல்லை. அவள் அப்பா இறந்து போன அதே விபத்தில்தான் அவளுடைய கால்களும் துண்டிக்கப்பட்டு விட்டன.

அவள் அருகில் சென்ற கோமதி, "என்னம்மா லீலா நன்றாக இருக்கிறாயா? கால் வலியெல்லாம் இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்றாள்.

"அதெல்லாம் இப்பொழுது இல்லை. டாக்டரும் அதைப் பற்றியே நினைக்காமல் வேறு விஷயங்களில் மனத்தைச் செலுத்தச் சொல்லியிருக்

கிறார். நானும் படங்கள் வரைந்தும், புத்தகங்கள் படித்தும் என் பொழுதைக் கழிக்கிறேன்'' என்று தன் கால்கள் இல்லாத குறையைப் பெரிதாக நினைக்காமல், மகிழ்ச்சியாகப் பேசிய லீலாவைக் கண்ட மாலுவுக்கு, கண்களில் கண்ணீர் துளிர்த்தது. லீலாவிற்குத் தெரியாமல் அவள் பின்னால் சென்று, தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

அன்று வீடு திரும்பும் போது, மாலுவின் மனம் மாறியிருந்தது. ''அம்மா, எனக்குப் புதிய செருப்பு வேண்டாம். லீலா, பாவம், அவளுக்கு எவ்வளவு பெரிய துன்பம்! அவள் அதைப் பற்றிச் சற்றும் நினைக்காமல் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறாள்! எனக்கு இரண்டு கால்கள் இருக்கின்றன. பாவம், அவளுக்கு எத்தனை ஜோடி செருப்புகள் இருந்தாலும் அவளால் போட்டுக் கொள்ள முடியாது. அவளுக்குக் காலே இல்லையே'' என்று கூறினாள்.

மாலு திருந்தி விட்டதை அறிந்த அவள் தாயும், ''ஆமாம், நம்மிடம் இருப்பதைக் கொண்டே நாம் திருப்தி அடைய வேண்டும். கடவுள் இவ்வளவு கொடுத்திருக்கிறாரே என்று நாம் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று நீ படித்திருக்கிறாயில்லையா.'' என்றாள். அன்றிலிருந்து மாலு எதிலும் அதிக ஆசைப்படுவதை விட்டு விட்டாள்.





உங்களுக்காக ஏராளமான விஞ்ஞானப் புத்தகங்களை எழுதியவர்; பல சரித்திர நாடகங்களைத் தந்தவர், மாணவர்களோடு மாணவராக இருந்து வாழ்க்கையைக் கல்விக்காகவே அர்ப்பணித்தவர், 'மாண்டிசோரி கல்விமுறை'யை வகுத்த மாண்டிசோரி அம்மையாருக்குத் துணை ஆசிரியராக 1942 முதல் 49 வரை பணியாற்றியவர் சி. என். வைத்தீஸ்வரன் என்ற வைத்தண்ணா. இவர் சமீபத்தில் தமது 85 — வது வயதில் காலமான செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம்.

தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, ரஷ்யன் முதலிய பல மொழிகளை அறிந்தவர். இவர் எழுதிய 'பூச்சி வாழ்க்கை,' 'விநோதக் குருவிகள்' இரண்டும் தமிழக அரசின் பரிசையும், 'பீங்கானின் கதை' இந்திய அரசின் பரிசையும், 'காற்றுடன் குட்டிப் பரிசோதனைகள்' ஏவி. எம். பரிசையும் பெற்றவை.

மாண்டிசோரி அம்மையார் எழுதிய மூன்று புத்தகங்களை இவர் தமிழில் மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார்.

1972 — ல் சென்னையில் நடந்த நான்காவது குழந்தை இலக்கிய மாநாட்டில் இவரது குழந்தை இலக்கியப் பணியைப் பாராட்டி, குழந்தை எழுத்தாளர் சங்கம் வெள்ளிக் கேடயம் வழங்கி கௌரவித்தது.

உயர்ந்த பண்பாளர்; சிறந்த கல்வியாளர்; செய்வன திருந்தச் செய்யும் இயல்பு உடையவர்; காலமெல்லாம் கல்வித் தொண்டாற்றியவர். இவரது மறைவு கல்வி உலகுக்கும், குழந்தை இலக்கிய உலகுக்கும் பேரிழப்பாகும்.

5000 குழந்தைகள் கூடிய ஆனந்த மாநாடு



"என்ன! 5000 குழந்தைகளா! அவர்கள் கூடி மாநாடு நடத்தினர் களா? எங்கே? எப்பொழுது? எத் தனைநாட்கள்?என்றுகேட்கத்தோன்று கிறதல்லவா?

ஐயாயிரம் குழந்தைகள் மட்டு மல்ல: 10 குழந்தைகளுக்கு ஓர் ஆசிரி யர் என்ற முறையில் ஐந்நூறுக்கு மேற் பட்ட பள்ளி ஆசிரியர்கள், வெவ் வேறு மொழிகளில் குழந்தைகளுக் காக எழுதுகின்ற எழுத்தாளர்கள், இன்னும் அமைச்சர்கள், பொது மக்கள் எல்லாரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

இந்த மாநாடு சென்ற ஜனவரி 23—ஆம் தேதி தொடங்கி மூன்று நாட்கள் நடந்தது. நடந்த இடம் கர் நாடகத்திலுள்ள ஒரு சின்னஞ்சிறு கிராமம் தான். சிறு கிராமமாயினும், அது ஓர் அழகான, புனிதமான இடம். ஒரு புறம் உயர்ந்த மலைகள், இன் னொரு பக்கம்



தொடக்க விழாவில் கர்நாடக முதலமைச்சர், ஆசி வழங்கிய ஸ்ரீ பாலகங்காதரநாத சுவாமிகள். 'மால்குடி நாட்கள்' புகழ் மாஸ்டர் மஞ்சுநாத் முதலியோர்.



• சிறுவர் அரங்கம் — பெரிய பெரிய நாற்காலிகளில் அமர்ந்து சிறுவர் சிறுமியர் நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள்!

பெரிய பெரிய கட்டடங்கள். மற்ற இரு பக்கங்களிலும் அழகான சோலைகள். மலையிலே கூட்டம் கூட்டமாக மயில்கள், சோலைகளில் பறவைகளின் பலவித ஒலிகள். கடல் மட்டத்திலிருந்து 3321 அடி உயரத்தில் உள்ள இந்த இடத்தைப் பார்க்கப் பார்க்கப் பரவசமாயிருந்தது.

பெங்களூரிலிருந்து சுமார் 110 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது தான் இந்தப் புனித இடம். இதன் பெயர் ஆதிசுஞ்சனகிரி. பொல்லாத அரக்கனாகிய சுஞ்சா என்பவனைப் போராடி அழித்த பிறகு, சிவபெருமான் இந்த அழகான இடத்தைத் தேர்ந்தெடுத்து, இங்கு யாகம் நடத்திப் பிராயச்சித்தம் செய்து கொண்டாராம். அதனால் இது 'ஆதி சுஞ்சனகிரி' என்று அழைக்கப்படுகிறது.

இந்த மாநாட்டை நடத்தியவர்கள் யார்?

'கர்நாடக மக்கள சாகித்ய அகாடமி' (கர்நாடகக் குழந்தை இலக்கியக் கழகம்) என்றஓர் அமைப்பு 1984—ல் பீஜப்பூரில் தொடங்கப் பெற்றது குழந்தை இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபடுவது, குழந்தைகளின் திறமைகளை வளர்ப்பது — இவையே இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள்.

ஆமாம், இத்தனை குழந்தைகளையும், பெரியவர்களையும் எங்கு தங்க வைப்பது? எப்படி உணவளிப்பது?

கவலையே வேண்டாம். ஆதி சுஞ்சனகிரியிலுள்ள மடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ பாலகங்காதரநாத சுவாமிகள் எல்லோரும் வசதியாகத் தங்கவும் வேளா வேளைக்கு உணவு அருந்தவும் ஏற்பாடு செய்திருந்தார். மற்ற செலவுகளுக்கு, கர்நாடக அரசும் பல அன்பர்களும் தாராளமாக நிதி உதவி அளித்திருந்தார்கள்.

முதல் நாள் காலை இந்த மாநாட்டை புகழ் பெற்ற கன்னட எழுத்தாளர் திரு. பி. எஸ். பாண்டுரங்கராவ் தலைமையில், கர்நாடக முதலமைச்சர் திரு. இராமகிருஷ்ண ஹெக்டே தொடங்கி வைத்தார். மாநாட்டு மலரை அமைச்சர் திரு. ஒய். கே. இராமையா வெளியிட்டார். ஸ்ரீ பாலகங்காதரநாத சுவாமிகள் வாழ்த்துரை வழங்கினார்.

அன்று மாலை குழந்தைகளே மேடையேறி நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். கே. ராஜசேகர் என்ற ஏழாம் வகுப்பு மாணவன் தலைமை தாங்க, கே. எஸ். பவித்ரா என்ற ஆறும் வகுப்பு மாணவி நிகழ்ச்சிகளை நடத்தி வைத்தார்.

இரவு எட்டு மணிக்கு, குழந்தைகளின் கலைநிகழ்ச்சி ஆரம்பமானது. அந்த நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தவர் யார், தெரியுமா? 'சுவாமியும்

'நண்பர்களும்' புகழ் மாஸ்டர் மஞ்சுநாத்! இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்த குழந்தைகள், அவரவர் மொழிகளில் பாடி ஆடி அனைவரையும் மகிழ்வித்தார்கள்.

இந்த மூன்று நாட்களும், கன்னடத்திலும், பிறமொழிகளிலும் எழுதி வரும் எழுத்தாளர்கள் அவரவர் மொழியில் குழந்தை இலக்கியம் எவ்வாறு வளர்ந்திருக்கிறது என்



* புகழ்வாய்ந்த இந்தி எழுத்தாளர் திரு. ராஷ்டிரபந்து பேசுகிறார். பங்கு கொண்ட மற்ற எழுத்தாளர்களையும் படத்தில் காணலாம்.

பதை எடுத்துக் கூறினார்கள். இவர்களில், கான்பூரிலிருந்து வந்த திரு. ராஷ்டிர பந்து, குஜராத்தின் தலைநகரான காந்தி நகரிலிருந்து வந்த திரு. ஹன்ட்ராஜ் பால்வானி, சென்னையிலிருந்து வந்த 'கோகுலம்' கௌரவ ஆசிரியர் திரு. அழ. வள்ளியப்பா, ஆகியவர்கள் முக்கியமானவர்கள். வள்ளியப்பா, தமது பேச்சுக்கு மூன் பாடிய செங்கல் வேண்டாம், சிமின்டும் வேண்டாம், செலவும் வேண்டாம் தம்பி என்று தொடங்கும் பாடலை, குமாரி வீணா என்ற ஆசிரியை கன்னடத்தில் மொழி பெயர்த்துப் பாடி, குழந்தைகளின் கைதட்டலைப் பெற்றார்!

மறுநாள் நடந்த நிகழ்ச்சியில் 'நாம் அனைவரும் ஒன்றே, என்ற தலைப்பில், சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம், கன்னடம், எனப் பல மொழிகளிலும் தேச ஒருமைப்பாட்டைப் பற்றிப் பல குழந்தைகள் உணர்ச்சியோடு பேசினார்கள். இருபதுக்கு மேற்பட்ட குழந்தைகள், தாங்களே இயற்றிய கவிதைகளைப் பாடி வியப்பூட்டினார்கள்.

இம்மாநாட்டில் குழந்தைகளுக்காகச் சிறந்த முறையில் எழுதி வரும் கன்னட எழுத்தாளர்களுக்குப் பாராட்டு நடந்தது. பல புதிய குழந்தைப் புத்தகங்கள் வெளியிடப் பெற்றன. குழந்தை இலக்கிய வளர்ச்சி பற்றிய கருத்தரங்குகள் நடந்தன. இக்கழகம் நடத்திய பல விதமான போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற 250 குழந்தைகளுக்குப் பரிசுகளும் வழங்கப் பெற்றன.

குழந்தைகளுக்காக எழுதும் கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் கண்டு மகிழ வேண்டும், அவர்களது பேச்சைக் கேட்டுப் பயன்பெற வேண்



* கன்னட எழுத்தாளர் திரு. அப்பாசாமிக்கு, அவரது குழந்தை இலக்கியப் பணியைப் பாராட்டி, சால்வை போர்த்துகிறார், ஸ்ரீ பாலகங்காதர நாத சுவாமிகள்.

டும் என்பதும் எங்கள் நோக்கங்களில் ஒன்று என்று கூறினார் அமைப்பாளர்களில் ஒருவர்.

ஆயிரக்கணக்கான குழந்தைகள் இங்கு கூடினார்களே, இங்கு அனாவசியமான கூச்சலோ, குழப்பமோ இருந்ததா? ஊஹூம், எதுவும் இல்லை. மிகுந்த கட்டுப்பாட்டுடன் குழந்தைகள் நடந்து கொண்டது மிகவும் வியப்பாக இருந்தது.

இந்த மாபெரும் மாநாட்டை இவ்வளவு சிறப்பாகக் கொண்டாடிய கர்நாடகமக்கள் சாகித்ய அகாடமியையும், சிறந்த முறையில் திட்டமிட்டுச் செயலாற்றிய செயலாளர் முதல்வர் திரு. பி. ஜி. ரமேஷையும், அவருக்குத் துணையாக இருந்த அன்பர்களையும், நூற்றுக்கணக்கான தொண்டர்களையும் வந்திருந்த அனைவரும் மனமாரப் பாராட்டியபடியே விடைபெற்று ஊர் திரும்பினர்.

— 'கோகுலம்' நிருபர்.

சிறிய வயதில் பெரிய மனிதர்கள்

விடை

1.	காந்திஜி	6.	சுபாஷ் போஸ்
2.	எடிசன்	7.	கென்னடி
3.	தாகூர்	8.	சர்ச்சில்
4.	லெனின்	9.	ஹெலன் கெல்லர்
5.	நேருஜி	10.	அரவிந்தர்



மோதிலால் நேரு

தில்லியில் தலைமைப் போலீஸ் அதிகாரியாக இருந்த கங்காதர நேருவின் மூன்றாவது மகனாகப் பிறந்தவர் மோதிலால் நேரு. இவர் பி. ஏ. பரீட்சையில் முதல் நாள் சரியாக எழுதவில்லை என்று நினைத்துக் கொண்டு, இரண்டாம் நாள் பரீட்சைக்குப் போகாதிருந்தார். ஆனால், இவர் முதல் நாள் எழுதிய விடைத்தாளுக்கு நிறைய மதிப்பெண் கிடைத்திருந்ததைக் கண்டு, இவருடைய ஆசிரியர் இவரைக் கோபித்துக் கொண்டார். மீண்டும் பி. ஏ. பரீட்சை எழுத இவருக்கு விருப்பமில்லை. வக்கீலுக்குப் படித்தார். பரீட்சையில் முதல்வராகத் தேறித் தங்கப் பதக்கம் பெற்றார்.

அலகாபாத்தில் வக்கீல் தொழில் நடத்தி நல்ல பெயரும் புகழும் செல்வமும் பெற்றார். பல அறைகளும், அழகான தோட்டமும் நீச்சல் குளமும் உள்ள 'ஆனந்த பவனம்' என்ற அரண்மனை போன்ற வீட்டை விலைக்கு வாங்கினார்.

பாரதப் பிரதமராக விளங்கிய நேரு மாமாவின் தந்தையாகவும், இந்திரா காந்தியின் தாத்தாவாகவும், ராஜீவ் காந்தியின் கொள்ளுத் தாத்தாவாகவும் போற்றப்படும் இவர், ஆயிரக்கணக்கான ரூபாய் வருமானம் வந்த வக்கீல் தொழிலை விட்டுவிட்டு, மகாத்மா காந்தியுடன் சேர்ந்து ஆங்கில ஆட்சியை எதிர்த்தார். பலமுறை சிறைசென்றார். பஞ்சாப் படுகொலை நடந்ததும், மோதிலால் முன்னைவிடத் தீவிரமாக விடுதலைப் போரில் ஈடுபட்டார். இண்டிபெண்டன்ட் (Independent) என்ற பத்திரிகையைத் தொடங்கினார். ஆயினும், இவரது குடும்பத்தினர் அனைவரும் சிறை சென்றதால் நான்காவது ஆண்டிலே அப்பத்திரிகை நின்றுவிட்டது.

1928 — ஆம் ஆண்டில் இவர் கல்கத்தா காங்கிரசிற்குத் தலைமை வகித்தார். அடுத்த ஆண்டு தலைமை வகித்தவர் இவருடைய புதல்வர் ஜவாஹர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமது அரண்மனை போன்ற ஆனந்த பவனுக்கு, 'சுயராஜ்ய பவனம்' என்று பெயரிட்டு, அதை, 1930—ல் நாட்டிற்காக அளித்த மிகப் பெரிய தேசபக்தர் இவர்.



நைட்டிங்கேல் அம்மையார்

இத்தாலியிலுள்ள பிளாரன்ஸ் என்ற நகரில் பணக்காரக் குடும்பத்தில் பிறந்த இவர், வீட்டிலேயே கல்வி கற்றார்., பிறகு, பல மருத்துவமனைகளில் பயின்று, லண்டனிலுள்ள ஒரு மருத்துவ நிலையத்தில் மேற்பார்வையாளராகப் பணியாற்றினார்.

சிறு வயதிலிருந்தே பிறருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு இருந்தது. அக்காலத்தில் மருத்துவமனைகளில் வேலை பார்த்த நர்சுகளில் பலர் படிக்காதவர்களாகவும், பயிற்சி இல்லாதவர்களாகவும், சுத்தமில்லாதவர்களாகவும், மிகக் குறைந்த சம்பளம் பெறுபவர்களாகவும் இருந்தார்கள். அவர்களில் சிலர் நோயாளிகளின் பொருள்களைத் திருடவும் செய்தனர்.


இவற்றையெல்லாம் கண்ட நைட்டிங்கேல், நர்சுகளுக்கு நல்ல விதமாகப் பயிற்சி அளித்தால், அவர்கள் நோயாளிகளிடம் அன்பு காட்டுவார்கள், ஆதரவாகப் பேசுவார்கள், இரவு பகல் பாராமல் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வார்கள் என்று கருதினார். அதற்காக இவர் பல வகையிலே பாடுபட்டார். பிறரிடம் நிதி உதவி பெற்றும், தம் சொந்தப் பணத்தைச் செலவிட்டும் நோயாளிகளுக்குச் சுத்தமான உடை, சத்தான உணவு முதலியவற்றை வழங்கினார்.

அச்சமயம் கிரைமியப் போர் நடந்து கொண்டிருந்தது. அப்போரில் ஈடுபட்டிருந்த வீரர்களில் பலர் காயமுற்றார்கள். அவர்களுக்குச் சரியான முறையில் சிகிச்சை அளிக்கப்படவில்லை. இதை அறிந்த இவர், 34 நர்சுகளுடன் அங்கு சென்று இரவு, பகல் பாராமல் அவ்வீரர்களுக்கு மருத்துவம் பார்த்தார். ஒரு கையில் விளக்கை எடுத்துக் கொண்டு, இரவெல்லாம் நோயாளிகளிடம் சென்று, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அளித்து வந்தார்.

இவர் நர்சுகளின் பயிற்சிக்கு வேண்டிய பல புத்தகங்களை எழுதினார், இங்கிலாந்தில் நர்சுகளுக்கான பல பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தினார்.

இன்று உலகம் முழுவதும் உள்ள மருத்துவமனைகள் இவரது வழியைப் பின்பற்றி நன்றாக இயங்கி வருகின்றன.

'கட்' அடித்தோம்! 'பிட்' அடித்தோம்!



பள்ளிசென்றால் 'கட்' அடித்தோம்!
பரீட்சை வந்தால் 'பிட்' அடித்தோம்!
எல்லாம் இப்போ மாறிவிட்டோம் தன்னாலே!
— தம்பி!
'இது தவறு' என்றுணர்ந்த பின்னாலே!

தெரிந்த கேள்வி விடை எழுதி
தெரியாததைப் பார்த்தெழுதி,
இருந்த காலம் மாறியது நன்மையால்! — நம்
இருண்ட காலம் நீங்கிவிட்ட தன்மையால்!

கல்வி கற்கும் மாணவர்கள்
கற்றுத் தேர்ச்சி ஆனவர்கள்
நல்லவர்கள் ஆகிவிட்டோம் நாட்டிலே!
— இனி
நன்கு பாடம் படித்திடுவோம் வீட்டிலே!

தனது கையே தனக்குதவி!
தமது கல்வி தமக்குதவி!
மனது இதை உணர வேண்டும் வாழ்வெலாம்! — தம்பி
மறுவின்றி நீங்கிடும் நம் தாழ்வெலாம்!

பாடம் நன்றாய் இனி படிப்போம்!
படித்துத் தேர்வு தனை முடிப்போம்!
தேடும் கல்வி சிறந்த செல்வம் அல்லவா? — கல்விச்
செல்வம் தினம் நமக்குதவும் அல்லவா?

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்:
வி. முரளி. ஆசிரியர்: வெ. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 31543, 4 34 157.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 60/-; விமானத் தபால்: ரூ. 135/-.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 36/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 120/-; விமானத் தபால் ரூ. 270/-.



நைட்டிங்கேல் அம்மையார்

தோற்றம்: 12-5-1820. மறைவு: 13-8-1910.

Registered as a Newspaper in Sri Lanka

